இந்திய அரசு

சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005

(எண் 28/ 2005)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

THE SPECIAL ECONOMIC ZONES ACT, 2005

(Act No. 28 of 2005)

(As on 31st October, 2023)

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005

(எண் 28 / 2005)

THE SPECIAL ECONOMIC ZONES ACT, 2005

(No. 28 of 2005)

PREFACE

This edition of the Special Economic Zones Act, 2005 (Act No. 28 of 2005) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, section 1, Vol. I dated 13th March, 2021 on Pages from 82 to 158.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi,
13th March, 2021.

(Signed)……
Secretary to Government of India.

முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள 2005 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம் (எண் 28/2005) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2021, மார்ச் 13 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 82 முதல் 158 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)......
13, மார்ச் 2021. இந்திய அரசு செயலாளர்.

THE SPECIAL ECONOMIC ZONES ACT, 2005

(Act No. 28 of 2005)

CONTENTS

CHAPTER I
PRELIMINARY

Sections		Pages
1.	Short title and commencement.	1
2.	Definitions.	1

CHAPTER II

ESTABLISHMENT OF SPECIAL ECONOMIC ZONE

3.	Procedure for making proposal to establish Special Economic Zone.	6
4.	Establishment of Special Economic Zone and approval and authorisation to operate it to, Developer.	10
5.	Guidelines for notifying Special Economic Zone.	10
6.	Processing and non-processing areas.	11
7.	Exemption from taxes, duties or cess.	11

CHAPTER III

CONSTITUTION OF BOARD OF APPROVAL

8.	Constitution of Board of Approval.	12
9.	Duties, Powers and functions of Board.	14

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம் 2005

(எண் 28/ 2005)

பொருளடக்கம்

அத்தியாயம் I
முன்னுரை

பிரிவுகள்		பக்கங்கள்
1.	குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.	1
2.	பொருள் வரையறைகள்.	1

அத்தியாயம் II

சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவியமைத்தல்

3.	சிறப்புப் பொருளாதார மண்டலத்தை, நிறுவியமைப்பதற்கான செயற்குறிப்பை வகுப்பதற்கான நடைமுறை.	6
4.	சிறப்புப்பொருளாதார மண்டலத்தை நிறுவியமைத்தல் மற்றும் ஒப்பேற்பு மற்றும் அதனைச் செயற்படுத்த மேம்பாட்டாளருக்கு அதிகாரம் அளித்தல்.	10
5.	சிறப்புப்பொருளாதார மண்டலத்தை அறிக்கை செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.	10
6.	செயல்முறைப் பகுதிகள் அல்லது செயல்முறைப் பகுதிகள் அல்லாதவை.	11
7.	வரிகள், சுங்கத் தீர்வைகள் அல்லது மேல் வரியிலிருந்து விலக்களிப்பு.	11

அத்தியாயம் III

ஒப்பேற்பளிக்கும் வாரியத்தை அமைத்தல்

8.	ஒப்பேற்பளிக்கும் வாரியத்தை அமைத்தல்.	12
9.	வாரியத்தின் கடமைகள், அதிகாரங்கள் மற்றும் அலுவற்பணிகள்.	14

10. Suspension of letter of approval and transfer of Special Economic Zone in certain cases. 16

CHAPTER IV

DEVELOPMENT COMMISSIONER

11. Development Commissioner. 19

12. Functions of Development Commissioner. 19

CHAPTER V

SINGLE WINDOW CLEARANCE

13. Constitution of Approval Committee. 21

14. Powers and functions of Approval Committee. 22

15. Setting up of Unit. 24

16. Cancellation of letter of approval to entrepreneur. 25

17. Setting up and operation of Offshore Banking Unit. 27

18. Setting up of International Financial Services Centre. 27

19. Single application form, return, etc. 27

20. Agency to inspect. 28

21. Single enforcement officer or agency for notified offences. 28

22. Investigation, inspection, search or seizure. 29

23. Designated Courts to try suits and notified offences. 29

24. Appeal to High Court. 30

25. Offences by companies. 31

10. குறித்த சில நேர்வுகளில், சிறப்புப்பொருளாதார மண்டலங்களின் ஒப்பேற்பு மற்றும் மாற்றுகைக்கான கடிதத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தல். 16

அத்தியாயம் IV

மேம்பாட்டு ஆணையர்

11. மேம்பாட்டு ஆணையர். 19

12. மேம்பாட்டு ஆணையரின் அலுவற்பணிகள். 19

அத்தியாயம் V

ஒற்றைச்சாளரத் தடைநீக்கம்

13. ஒப்பேற்புக் குழுவை அமைத்துருவாக்குதல். 21

14. ஒப்பேற்புக் குழுவின் அதிகாரங்களும் அலுவற் பணிகளும். 22

15. அலகினை நிறுவுதல். 24

16. தொழில்முனைவோருக்கான ஒப்பேற்புக் கடிதத்தை அறவு செய்தல். 25

17. கடல் இடஅமைவு நிறுவுதலும் செயற்படுத்துதலும். 27

18. பன்னாட்டு நிதிச் சேவைகள் மையத்தை நிறுவுதல். 27

19. ஒற்றை விண்ணப்பப் படிவம், விவரஅறிக்கை முதலியன. 27

20. முகமை ஆய்வு செய்தல். 28

21. அறிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல்களுக்காக ஒரு தனிச் செயலாக்க அலுவலர் அல்லது முகமை. 28

22. புலன் விசாரணை, ஆய்வு, சோதனை அல்லது கைப்பற்றுதல். 29

23. குறித்தபணி நீதிமன்றங்கள், உரிமையியல் வழக்குகளையும் அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல்களையும் விசாரணை செய்தல். 29

24. உயர்நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு. 30

25. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள். 31

CHAPTER VI

SPECIAL FISCAL PROVISIONS FOR SPECIAL ECONOMIC ZONES

26.	Exemptions, drawbacks and concessions to every Developer and entrepreneur.	31
27.	Provisions of Income-tax Act, 1961 to apply with certain modification in relation to Developers and entrepreneurs.	33
28.	Duration of goods or services in Special Economic Zones.	33
29.	Transfer of ownership and removal of goods.	33
30.	Domestic clearance by Units.	33

CHAPTER VII

SPECIAL ECONOMIC ZONE AUTHORITY

31.	Constitution of Authority.	34
32.	Officers of Authority and other staff.	37
33.	Special provision for transfer of officers or other employees to Authority.	37
34.	Functions of Authority.	38
35.	Grants and loans by Central Government.	39
36.	Constitution of Fund and its application.	39
37.	Accounts and audit.	40
38.	Directions by Central Government.	40
39.	Returns and reports.	41

அத்தியாயம் VI

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான நிதிசார்ந்த சிறப்பு வகையங்கள்

26. மேம்பாட்டாளர் மற்றும் தொழில் முனைவோர் ஒவ்வொரு வருக்கும் விலக்களிப்புகள், கழிவுகள், சலுகைகள் ஆகியவை. 31

27. மேம்பாட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் தொடர்பாக, 1961 ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தின் வகையங்கள், குறித்தசில மாற்றமைவுகளுடன் பொருந்துதல். 33

28. சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சரக்குகள் அல்லது சேவைகளுக்கான காலஅளவு. 33

29. உடைமையுரிமையை உரிமைமாற்றம் செய்தல் மற்றும் சரக்குகளை அகற்றுதல். 33

30. அலகுகளால் உள்நாட்டில் சரக்கு எடுக்கப்படுதல். 33

அத்தியாயம் VII

சிறப்புப் பொருளாதார மண்டல அதிகாரஅமைப்பு

31. அதிகாரஅமைப்பை அமைத்துருவாக்குதல். 34

32. அதிகாரஅமைப்பின் அலுவலர்களும் பிற பணியாளர் தொகுதியும். 37

33. அதிகாரஅமைப்பின் அலுவலர்களை அல்லது பிற பணியாளர்களை பணிமாற்றல் செய்வதற்கான சிறப்பு வகையம். 37

34. அதிகாரஅமைப்பின் அலுவற்பணிகள். 38

35. மைய அரசால் மானியங்களும் கடன்களும் வழங்கப்படுதல் 39

36. நிதியத்தை அமைத்துருவாக்கிப்பயன்படுத்துதல். 39

37. கணக்குகளும் தணிக்கையும். 40

38. மைய அரசின் பணிப்புரைகள். 40

39. விவரஉரைகளும் அறிக்கைகளும். 41

40. Power to supersede Authority. 41

41. Members, officers and other employees of Authority to be public servants. 42

CHAPTER VIII

MISCELLANEOUS

42. Reference of dispute. 42

43. Limitation. 43

44. Applicability of provisions of this Act to existing Special Economic Zones. 44

45. Person to whom a communication may be sent under this Act. 44

46. Identity Card. 44

47. Authorities responsible for administration. 44

48. Protection of action taken in good faith. 44

49. Power to modify provisions of this Act or other enactments in relation to Special Economic Zones. 45

50. Power of State Government to grant exemption. 46

51. Act to have overriding effect. 46

52. Certain provisions not to apply. 46

53. Special Economic Zones to be ports, airports, inland container depots, land stations, etc., in certain cases. 47

54. Amendment to First Schedule. 48

55. Power to make rules. 48

40. அதிகாரஅமைப்பினைக் கலைத்துக் கைக்கொள்வதற்கு அதிகாரம். 41

41. அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள், அலுவலர்கள், பிற பணியாளர்கள் ஆகியோர் பொது ஊழியர்களாக இருத்தல். 42

அத்தியாயம் VIII

பல்வகைப்பட்டவை

42. பூசலைச் சாட்டியனுப்புதல். 42

43. காலவரம்பு. 43

44. நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு இந்தச் சட்டத்தின் வகையங்கள் பொருந்தும் தன்மை. 44

45. இந்தச் சட்டத்தின்படி தகவல் எந்த நபருக்கு அனுப்பப்படலாம் என்பது குறித்து. 44

46. அடையாள அட்டை. 44

47. நிருவாகத்திற்குப் பொறுப்புடைய அதிகாரஅமைப்புகள். 44

48. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. 44

49. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடர்பாக, இந்தச் சட்டத்தின் அல்லது பிற செய்சட்டங்களின் வகையங்களை மாற்றமைவு செய்வதற்கு அதிகாரம். 45

50. விலக்களிப்பு வழங்குவதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம். 46

51. சட்டம் மீதூர்ந்து இயங்கும் விளைவுடைய தாதல். 46

52. குறித்தசில வகையங்கள் பொருந்துதல் ஆகாது. 46

53. குறித்தசில நேர்வுகளில் சிறப்புப்பொருளாதார மண்டலங்கள் துறைமுகங்களாக, வானூர்தி நிலையங்களாக, உள்நாட்டு கலன்கிடங்குகளாக, நிலத்து நிலையங்களாக இருத்தல். 47

54. முதலாம் இணைப்புப்பட்டியலுக்குத் திருத்தம். 48

55. விதிகளை வகுப்பதற்கு அதிகாரம். 48

56. Power to remove difficulties. 53

57. Amendment of certain enactments. 54

58. Savings. 54

THE FIRST SCHEDULE

THE SECOND SCHEDULE

THE THIRD SCHEDULE

56. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். 53

57. குறித்தசில செய்சட்டங்களின் திருத்தம். 54

58. காப்புரைகள். 54

முதலாம் இணைப்புப்பட்டியல்

இரண்டாம் இணைப்புப்பட்டியல்

மூன்றாம் இணைப்புப்பட்டியல்

THE SPECIAL ECONOMIC ZONES ACT, 2005

No. 28 of 2005

[23rd *June*, 2005.]

An Act to provide for the establishment, development and management of the Special Economic Zones for the promotion of exports and for matters connected therewith or incidental thereto.

BE it enacted by Parliament in the Fifty-sixth Year of the Republic of India as follows:

CHAPTER I

PRELIMINARY

Short title, extent and commencement.

1. (1) This Act may be called the Special Economic Zones Act, 2005.

(2) It extends to the whole of India.

(3) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint, and different dates may be appointed for different provisions of this Act and any reference in any such provision to the commencement of this Act shall be construed as a reference tothe coming into force of that provision.

Definitions.

2. In this Act, unless the context otherwise requires,

---

1. 10th February, 2006 (ss. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 25, 26, 27, 28, 29, 30, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57 and 58), *vide* notification No. S.O. 196 (E), dated 10th February, 2006, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).
1st October, 2008 (ss. 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40 and 41), *vide* notification No.S.O.2320(E), dated 1st October, 2008, *see* Gazette of India, Extraordinary, Part II, sec 3(*ii*).
13th January, 2010 (ss. 20, 21 and 22), *vide* notification No. S.O. 75(E), dated 13th January, 2010, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம் 2005

(எண் 28/2005)

[2005, ஜூன் 23]

ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவியமைப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் மேலாண்மை செய்வதற்கும், அவற்றுடன் தொடர்புடைய அல்லது அவற்றிற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஆறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

அத்தியாயம் I

முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2005 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று[1] செல்லாற்றல் பெறும், மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்காக வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம். மேலும் இந்தச் சட்டத்தின் தொடக்கம் குறித்து, அத்தகைய வகையம் எதிலுமுள்ள சுட்டுகை எதுவும், அந்த வகையம் செல்லாற்றல் பெறுவதைக் குறித்த சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

---

1. 2006, பிப்ரவரி 10 ஆம் (பிரிவுகள் 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15, 16,17,18,19,25,26,27,28,29,30,42,43,44,45,46,47,48,49,50,51,52,53,54,55,56,57 மற்றும் 58) 2006, பிப்ரவரி 10 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஓ.196 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II இன் பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

2008, அக்டோபர் 1 ஆம் (பிரிவுகள் 31,32,34,35,36,37,38,39,40 மற்றும் 41) 2008, அக்டோபர் 1 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண் எஸ்.ஓ.2320 (E) ஐ காண்க. இந்திய அரசிதழ், சிறப்பிதழ் பகுதி II இன் பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

2010, ஜனவரி, 13 (பிரிவுகள் 20,21 மற்றும் 22) 2010, ஜனவரி 13 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண்.எஸ்.ஓ 75 (E) ஐ காண்க. இந்திய அரசிதழ், சிறப்பிதழ் பகுதி II இன் பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

(a) "appointed day" with reference to a Special Economic Zone means the date on which the Special Economic Zone is notified by the Central Government under sub-section (*1*) of section 4;

(b) "Approval Committee" means an Approval Committee constituted under sub-section (1) of section 13;

(c) "authorised operations" means operations which may be authorised under sub-section (2) of section 4 and sub-section (9) of section 15;

(d) "Authority" means a Special Economic Zone Authority constituted under sub-section (1) of section 31;

(e) "Board" means the Board of Approval constituted under sub-section (1) of section 8;

(f) "Co-Developer" means a person who, or a State Government which, has been granted by the Central Government a letter of approval under sub-section (12) of section 3;

(g) "Developer" means a person who, or a State Government which, has been granted by the Central Government a letter of approval under sub-section (10) of section 3 and includes an Authority and a Co-Developer;

(h) "Development Commissioner" means the Development Commissioner appointed for one or more Special Economic Zones under sub-section (1) of section 11;

(i) "Domestic Tariff Area" means the whole of India (including the territorial waters and continental shelf) but does not include the areas of the Special Economic Zones;

(j) "entrepreneur" means a person who has been granted a letter of approval by the Development Commissioner under sub-section (9) of section 15;

(அ) ''குறித்திடப்பட்ட நாள்'' என்பது, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் குறித்து 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி மைய அரசால் எந்தத் தேதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அறிக்கை செய்யப்படுகிறதோ அந்தத் தேதி என்று பொருள்படும்;

(ஆ) ''ஒப்பேற்புக் குழு'' என்பது, 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒப்பேற்புக் குழு என்று பொருள்படும்;

(இ) ''அதிகாரமளிப்பு பெற்ற செயற்பாடுகள்'' என்பது, 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படியும், 15 ஆம் பிரிவின் (9) ஆம் உட்பிரிவின்படியும் அதிகாரமளிக்கப்படலாகும் செயற்பாடுகள் என்று பொருள்படும்;

(ஈ) ''அதிகாரஅமைப்பு'' என்பது, 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு சிறப்புப் பொருளாதார மண்டல அதிகாரஅமைப்பு என்று பொருள்படும்;

(உ) ''வாரியம்'' என்பது, 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒப்பேற்பு வாரியம் என்று பொருள்படும்;

(ஊ) ''உடன் மேம்பாட்டாளர்'' என்பது, 3 ஆம் பிரிவின் (12) ஆம் உட்பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதம் மைய அரசால் எந்த நபருக்கு அல்லது எந்த மாநில அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறதோ அந்த நபர் அல்லது அந்த மாநில அரசு என்று பொருள்படும்;

(எ) ''மேம்பாட்டாளர்'' என்பது, 3 ஆம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதம், மைய அரசால் எந்த நபருக்கு அல்லது எந்த மாநில அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறதோ அந்த நபர் அல்லது மாநில அரசு என்று பொருள்படும் மற்றும் ஓர் அதிகார அமைப்பையும், உடன் மேம்பாட்டாளரையும் உள்ளடக்கும்;

(ஏ) ''மேம்பாட்டு ஆணையர்'' என்பது, 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக அமர்த்தப்படும் மேம்பாட்டு ஆணையர் என்று பொருள்படும்;

(ஐ) ''உள்நாட்டு சுங்கவரி வரையிடம்'' என்பது, (ஆட்சி மண்டலக் கடல் மற்றும் கண்டத்திட்டுகள் உள்ளடங்கலாக) இந்தியா முழுவதும் என்று பொருள்படும்; ஆனால் சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வரையிடங்களை உள்ளடக்காது;

(ஒ) ''தொழில்முனைவோர்'' என்பது, 15 ஆம் பிரிவின் (9) ஆம் உட்பிரிவின்படி மேம்பாட்டு ஆணையரால் ஒப்பேற்புக் கடிதம் வழங்கப்பட்டிருக்கிற நபர் ஒருவர் என்று பொருள்படும்;

(k) “existing Special Economic Zone” means every Special Economic Zone which is in existence on or before the commencement of this Act;

(l) “existing Unit” means every Unit which has been set up on or before the commencement of this Act in an existing Special Economic Zone;

(m) “export” means

(i) taking goods, or providing services, out of India, from a Special Economic Zone, by land, sea or air or by any other mode, whether physical or otherwise; or

(ii) supplying goods, or providing services, from the Domestic Tariff Area to a Unit or Developer; or

(iii) supplying goods, or providing services, from one Unit to another Unit or Developer, in the same or different Special Economic Zone;

(n) “Free Trade and Warehousing Zone” means a Special Economic Zone wherein mainly trading and warehousing and other activities related thereto are carried on;

(o) “import” means

(i) bringing goods or receiving services, in a Special Economic Zone, by a Unit or Developer from a place outside India by land, sea or air or by any other mode, whether physical or otherwise; or

(ஓ) ''நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலம்'' என்பது, இந்தச் சட்டத்தின் தொடக்கத்தன்று அல்லது அதற்கு முன்பு உள்ள நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒவ்வொன்றும் என்று பொருள்படும்;

(ஔ) ''நிலவுறும் அலகு'' என்பது, நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலமொன்றில் இந்தச் சட்டத்தின் தொடக்கத்தன்று அல்லது அதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டுள்ள அலகு ஒவ்வொன்றும் என்று பொருள்படும்;

(க) ''ஏற்றுமதி'' என்பது —

(i) பருப்பொருளாகவோ அல்லது பிறவாறாகவோ நிலத்தின், கடலின் அல்லது வான்வழியாக அல்லது பிற ஏதேனும் முறையில், ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்திலிருந்து இந்தியாவிற்கு வெளியே சரக்குகளை எடுத்துச் செல்லுதல் அல்லது சேவைகளை அளித்தல்; அல்லது

(ii) உள்நாட்டு சுங்கவரி வரையிடத்திலிருந்து ஓர் அலகுக்கு அல்லது மேம்பாட்டாளருக்குச் சரக்குகளை அனுப்புதல் அல்லது சேவைகளை அளித்தல்; அல்லது

(iii) ஒரே சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அல்லது வெவ்வேறுபட்ட சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், ஓர் அலகிலிருந்து பிறிதோர் அலகிற்கு அல்லது மேம்பாட்டாளருக்குச் சரக்குகளை அனுப்புதல் அல்லது சேவைகளை அளித்தல்

என்று பொருள்படும்;

(ங) ''தடையற்ற வர்த்தகம் மற்றும் பண்டகசாலை மண்டலம்'' என்பது, சிறப்புப் பொருளாதார மண்டலம் தொடர்பாக, வர்த்தக, பண்டகசாலை மற்றும் பிற செயற்பாடுகள் முக்கியமாக நடத்தப்படுகிற சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்று என்று பொருள்படும்;

(ச) ''இறக்குமதி'' என்பது —

(i) பருப்பொருளாகவோ அல்லது பிறவாறாகவோ, நிலத்தின், கடலின் அல்லது வான் வழியாக அல்லது பிற எந்த முறையிலும், இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஓர் இடத்திலிருந்து, சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குள் ஓர் அலகினால் அல்லது மேம்பாட்டாளரால் சரக்குகள் கொண்டு வரப்படுதல் அல்லது சேவைகள் பெறப்படுதல் என்று; அல்லது

(ii) receiving goods, or services by a Unit or Developer from another Unit or Developer of the same Special Economic Zone or a different Special Economic Zone;

(p) "infrastructure facilities" means industrial, commercial or social infrastructure or other facilities necessary for the development of a Special Economic Zone or such other facilities which may be prescribed;

(q) "International Financial Services Centre" means an International Financial Services Centre which has been approved by the Central Government under sub-section (1) of section 18;

(r) "manufacture" means to make, produce, fabricate, assemble, process or bring into existence, by hand or by machine, a new product having a distinctive name, character or use and shall include processes such as refrigeration, cutting, polishing, blending, repair, remaking, re-engineering and includes agriculture, aquaculture, animal husbandry, floriculture, horticulture, pisciculture, poultry, sericulture, viticulture and mining;

(s) "notification" means a notification published in the Official Gazette and the expression "notify" shall be construed accordingly;

(t) "notified offences" means the offences specified as such under sub-section (1) of section 21;

(u) "Offshore Banking Unit" means a branch of a bank located in a Special Economic Zone and which has obtained the permission under clause (a) of sub-section (1) of section 23 of the Banking Regulation Act, 1949 ; 10 / 1949.

(ii) ஒரே சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அல்லது வெவ்வேறு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஓர் அலகால் அல்லது மேம்பாட்டாளரால், பிற அலகிடமிருந்து அல்லது மேம்பாட்டாளரிடமிருந்து சரக்குகளை அல்லது சேவைகளைப் பெறுதல்;

என்று பொருள்படும்;

(ஞ) ''உள்கட்டமைப்பு வசதிகள்'' என்பது, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில், வணிகம் அல்லது சமூகம் சார்ந்த உள்கட்டமைப்பு வசதிகள் அல்லது பிற வசதிகள் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற வசதிகள் என்று பொருள்படும்;

(ட) ''பன்னாட்டு நிதிச் சேவைகள் மையம்'' என்பது, 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி மைய அரசால் ஒப்பேற்பு அளிக்கப்பட்டுள்ள ஒரு பன்னாட்டு நிதிச் சேவைகள் மையம் என்று பொருள்படும்;

(ண) ''உற்பத்தி'' என்பது, தனித்ததொரு பெயரை, தன்மையை அல்லது பயன்பாட்டைக் கொண்டதொரு புதிய தயாரிப்பை கையினாலோ அல்லது எந்திரம் வாயிலாகவோ செய்தல், தயாரித்தல், வனைதல், ஒன்றுக்கொன்று சேர்த்தல், செய்முறைக்குள்ளாக்குதல் அல்லது அறிமுகப்படுத்துதல் என்று பொருள்படும், மற்றும் குளிரூட்டுதல், வெட்டுதல், மெருகூட்டுதல், கலத்தல், பழுதுபார்த்தல், மறுபடி தயாரித்தல், மறுபொறியாக்கம் செய்தல் ஆகிய செய்முறைகளையும் உள்ளடக்கும் மற்றும் வேளாண்மை, நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கால்நடைப் பராமரிப்பு, மலர் வளர்ப்பு, தோட்டக்கலை, மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு, திராட்சை பயிர் செய்தல் மற்றும் சுரங்கம் தோண்டுதல் ஆகியவற்றையும் உள்ளடக்கும்;

(த) ''அறிவிக்கை'' என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஓர் அறிவிக்கை என்று பொருள்படும், மற்றும் ''அறிவிக்கை செய்'' என்ற சொற்றொடர், அதற்கிணங்கவே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ந) ''அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல்கள்'' என்பது, 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அத்தகையதென அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல்கள் என்று பொருள்படும்;

(ப) ''கடல்இடஅமைவு வங்கியியல் அலகு'' என்பது,
10/1949. 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படி அனுமதியைப் பெற்றிருந்து, சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள ஒரு வங்கியின் கிளை என்று பொருள்படும்;

(v) "person" includes an individual, whether resident in India or outside India, a Hindu undivided family, co-operative society, a company, whether incorporated in India or outside India, a firm, proprietary concern, or an association of persons or body of individuals, whether incorporated or not, local authority [1][trust or any entity as may be notified by the Central Government] and any agency, office or branch owned or controlled by such individual, Hindu undivided family, co-operative, association, body, [2][authority, company, trust or entity];

(w) "prescribed" means prescribed by rules made by the Central Government under this Act;

(x) "Reserve Bank" means the Reserve Bank of India constituted under section 3 of the Reserve Bank of India Act, 1934 (2 of 1934);

(y) "Schedule" means Schedules to this Act;

(z) "services" means such tradable services which,

(i) are covered under the General Agreement on Trade in Services annexed as IB to the Agreement establishing the World Trade Organisation concluded at Marrakesh on the 15th day of April, 1994;

(ii) may be prescribed by the Central Government for the purposes of this Act; and

(iii) earn foreign exchange;

---

1. Ins. by Act 8 of 2019, s. 2 (w.e.f. 2-3-2019).

2. Subs. by s. 2, *ibid.,* "authority or company" (w.e.f. 2-3-2019).

(ம) ''நபர்'' என்பது, இந்தியாவிற்குள்ளே குடியிருந்தாலும் அல்லது இந்தியாவிற்கு வெளியே குடியிருந்தாலும், தனி நபர் ஒருவரையும், பிரிவினையாகாத ஓர் இந்துக் குடும்பத்தையும், கூட்டுறவுச் சங்கத்தையும், இந்தியாவிற்குள்ளோ அல்லது வெளியேயோ கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுமத்தையும், ஒரு நிறுவகத்தையும், தனியுரிமைப்பெற்ற தொழில் நிறுவனத்தையும் அல்லது கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பினும் இல்லாவிடினும், நபர்களின் குழுமத்தை அல்லது தனியாட்களின் கழகத்தை, வட்டார அதிகார அமைப்பு, [1][மைய அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் பொறுப்புக்கட்டளை அல்லது இருந்துவரும் அமைப்பு] மற்றும் அத்தகைய தனிநபர், பிரிவினையாகாத இந்துக் குடும்பம், கூட்டுறவுச் சங்கம், குழுமம், கழகம், [2][அதிகாரஅமைப்பு, நிறுமம், பொறுப்புக்கட்டளை அல்லது இருந்துவரும் அமைப்புக்குச்] சொந்தமாகக் கொண்டிருக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் முகமை, அலுவலகம் அல்லது கிளை எதையும் உள்ளடக்கும்;

(ய) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி மைய அரசால் வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(ர) ''சேம வங்கி'' என்பது, 1934 ஆம் ஆண்டு இந்தியச் சேம வங்கிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட இந்தியச் சேம வங்கி என்று பொருள்படும்; 2/1934.

(ல) ''இணைப்புப்பட்டியல்'' என்பது, இந்தச் சட்டத்தின் இணைப்புப்பட்டியல்கள் என்று பொருள்படும்;

(வ) ''சேவைகள்'' என்பது, —

(i) 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் நாளன்று மாரகேஷில் முடிவடைந்த உலக வர்த்தக அமைப்பை நிறுவுகிற உடன்பாட்டுக்கு IB ஆக இணைக்கப்பட்ட சேவைகளில் வர்த்தகங்களுக்கான பொது உடன்பாட்டின் கீழ் வருகிற;

(ii) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகிற ; மற்றும்

(iii) அயல் நாட்டு செலாவணியை ஈட்டுகிற

வர்த்தகம் செய்யக்கூடிய சேவைகள் என்று பொருள்படும்.

---

1. சட்ட எண் 8/2019 இன் 2 ஆம் பிரிவினால் (02–03–2019 முதல் செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.
2. மேற்படிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால், ''அதிகாரஅமைப்பு அல்லது நிறுமம்'' என்பதற்கு (02–03–2019 முதல் செல்திறம் பெறுமாறு) மாற்றாக அமைக்கப்பட்டது.

(za) "Special Economic Zone" means each Special Economic Zone notified under the proviso to sub-section (*4*) of section 3 and sub-section (*1*) of section 4 (including Free Trade and Warehousing Zone) and includes an existing Special Economic Zone;

(zb) "State Government" means a State Government of the State in which a Special Economic Zone is established or proposed to be established;

(zc) "Unit" means a Unit set up by an entrepreneur in a Special Economic Zone and includes an existing Unit, an Offshore Banking Unit and a Unit in an International Financial Services Centre, whether established before or established after the commencement of this Act;

(zd) all other words and expressions used and not defined in
this Act but defined in the Central Excise Act, 1944 the Industries 1/1944.
(Development and Regulation) Act, 1951 the Income - tax Act, 65/1951.
1961 the Customs Act, 1962 and the Foreign Trade (Development 43/1961.
and Regulation) Act, 1992 shall have the meanings respectively 52/1962.
assigned to them in those Acts. 22/1992.

CHAPTER II

ESTABLISHMENT OF SPECIAL ECONOMIC ZONE

Procedure for making proposal to establish Special Economic Zone.

3. (1) A Special Economic Zone may be established under this Act, either jointly or severally by the Central Government, State Government, or any person for manufacture of goods or rendering services or for both or as a Free Trade and Warehousing Zone.

(2) Any person, who intends to set up a Special Economic Zone, may, after identifying the area, make a proposal to the State Government concerned for the purpose of setting up the Special Economic Zone.

(வஅ) ''சிறப்புப் பொருளாதார மண்டலம்'' என்பது, (துடையற்ற வர்த்தகம் மற்றும் பண்டகசாலை மண்டலம் உள்ளடங்கலாக) 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் மற்றும் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் வரம்புரையின்படி அறிவிக்கை செய்யப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒவ்வொன்றும் என்று பொருள்படும் மற்றும் நிலவுறும் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உள்ளடக்கும்;

(வஆ) ''மாநில அரசு'' என்பது, சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிற அல்லது நிறுவ கருதப்பட்டிருக்கிற மாநிலத்தின் மாநில அரசு என்று பொருள்படும்;

(வஇ) ''அலகு'' என்பது, சிறப்புப் பொருளாதார மண்டலமொன்றின் ஒரு தொழில் முனைவோரால் ஏற்படுத்தப்பட்ட ஓர் அலகு என்று பொருள்படும்; மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு நிறுவப்பட்டதாயினும் அல்லது தொடக்கத்திற்குப் பின்பு நிறுவப்பட்டதாயினும் நிலவுறும் அலகு, கடல்இடஅமைவு வங்கியியல் அலகு, பன்னாட்டு நிதிச்சேவைகள் மையத்தின் ஓர் அலகு ஆகியவற்றை உள்ளடக்கும்;

(வஈ) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு பொருள்
1/1944. வரையறை செய்யப்படாத, ஆனால் 1944 ஆம் ஆண்டு மைய
65/1951. ஆயத்தீர்வை சட்டத்தில், 1951 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள்
43/1961. (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில், 1961 ஆம் ஆண்டு
52/1962. வருமான வரிச் சட்டத்தில், 1962 ஆம் ஆண்டு சுங்கச் சட்டத்தில்,
22/1992. 1992 ஆம் ஆண்டு அயல்நாட்டு வணிக (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்ட பிற அனைத்துச் சொற்களும் சொற்றொடர்களும், அந்தந்தச் சட்டத்தில், முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருள்களை உடையனவாகும்.

அத்தியாயம் II

சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவியமைத்தல்

சிறப்புப் பொருளாதார மண்டலத்தை, நிறுவியமைப் பதற்கான செயற்குறிப்பை வகுப்பதற்கான நடைமுறை.

3. (1) சரக்குகளை உற்பத்திச் செய்வதற்காக அல்லது சேவை அளிப்பதற்காக அல்லது இரண்டிற்காகவும் அல்லது தடையற்ற வர்த்தக மற்றும் பண்டகசாலை மண்டலமாக, மைய அரசால், மாநில அரசால், அல்லது நபர் எவராலும் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ இந்தச் சட்டத்தின்படி சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்று நிறுவியமைக்கப்படலாம்.

(2) சிறப்புப் பொருளாதார மண்டலமொன்றை ஏற்படுத்தக் கருதுகிற நபர் எவரும், வரையிடத்தை இனங்கண்டதற்குப் பிறகு, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக, தொடர்புடைய மாநில அரசிற்குச் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பலாம்.

(3) Notwithstanding anything contained in sub-section (2), any person, who intends to set up a Special Economic Zone, may, after identifying the area, at his option, make a proposal directly to the Board for the purpose of setting up the Special Economic Zone:

Provided that where such a proposal has been received directly from a person under this sub-section, the Board may grant approval and after receipt of such approval, the person concerned shall obtain the concurrence of the State Government within the period, as may be prescribed.

(4) In case a State Government intends to set up a Special Economic Zone, it may after identifying the area, forward the proposal directly to the Board for the purpose of setting up the Special Economic Zone:

Provided that the Central Government may,

(a) after consulting the State Government concerned;

(b) without referring the proposal for setting up the Special Economic Zone to the Board; and

(c) after identifying the area,

suo motu set up and notify the Special Economic Zone.

(5) Every proposal under sub-sections (2) to (4) shall be made in such form, and, manner, containing such particulars as may be prescribed.

(6) The State Government may, on receipt of the proposal made under sub-section (2), forward the same together with its recommendations to the Board within such period as may be prescribed.

(7) Without prejudice to the provisions contained in sub-section (8), the Board may, after receipt of the proposal under sub-sections (2) to (4), approve the proposal subject to such terms and conditions as it may deem fit to impose, or modify or reject the proposal.

(3). (2) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், வரையிடத்தை இனங்கண்டதற்குப் பிறகு, சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்தக் கருதுகிற நபர் எவரும், தனது தெரிவிற்கேற்ப, சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக, வாரியத்திற்கு நேரடியாக செயற்குறிப்பு ஒன்றை அனுப்பலாம்:

வரம்புரையாக: இந்த உட்பிரிவின்படி ஒருவரிடமிருந்து அத்தகைய செயற்குறிப்பை நேரடியாகப் பெறப்படுகிறவிடத்து, வாரியமானது, ஒப்பேற்பு அளிக்கலாம். அத்தகைய ஒப்பேற்பினைப் பெற்ற பிறகு, தொடர்புடைய நபர், வகுத்துரைக்கப்படலாகும் காலத்திற்குள் மாநில அரசின் இசைவைப் பெறுதல் வேண்டும்.

(4) ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு மாநில அரசு கருதுகிற நேர்வில், அது வரையிடத்தை இனங்கண்டதற்கு பிறகு, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக, நேரடியாக அந்தச் செயற்குறிப்பை வாரியத்திற்கு மேலனுப்பலாம்:

வரம்புரையாக: மைய அரசு,—

(அ) தொடர்புடைய மாநில அரசினைக் கலந்தாய்வு செய்த பிறகு;

(ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பை வாரியத்திற்குச் சாட்டியனுப்பாமல்; மற்றும்

(இ) வரையிடத்தை இனங்கண்டதற்குப் பிறகு

தானேமுற்பட்டு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்தி அறிவிக்கை செய்யலாம்.

(5). (2) முதல் (4) வரையிலான உட்பிரிவுகளின்படியான செயற்குறிப்பு ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் முறையிலும் செய்யப்படுதலும், வகுத்துரைக்கப்படலாகும் விவரங்கள் கொண்டதாக இருத்தலும் வேண்டும்.

(6) மாநில அரசு, (2) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட செயற்குறிப்பைப் பெற்றதன்பேரில், வகுத்துரைக்கப்படலாகும் காலஅளவிற்குள், தன் பரிந்துரைகளுடன் சேர்த்து அதனை வாரியத்திற்கு அனுப்பலாம்.

(7). (8) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள வகையங்களுக்குக் குந்தகமின்றி, (2) முதல் (4) வரையிலான உட்பிரிவுகளின்படி செயற்குறிப்பைப் பெற்றதற்குப் பிறகு, வாரியமானது, தான் சுமத்துவதற்குப் பொருத்தமெனக் கொள்ளலாகும் வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, செயற்குறிப்புக்கு ஒப்பேற்பு அளிக்கலாம் அல்லது அந்தச் செயற்குறிப்பை மாற்றமைவு செய்யலாம் அல்லது ஏற்க மறுக்கலாம்.

(8) The Central Government may prescribe the following requirements for establishment of a Special Economic Zone, namely:

(a) the minimum area of land and other terms and conditions subject to which the Board shall approve, modify or reject any proposal received by it under sub-sections (2) to (4); and

(b) the terms and conditions, subject to which the Developer shall undertake the authorized operations and his obligations and entitlements:

Provided that different minimum area of land and other terms and conditions referred to in clause (a) may be prescribed by the Central Government for a class or classes of Special Economic Zones.

(9) If the Board,

(a) approves without any modification the proposal received under sub-sections (2) to (4), it shall communicate the same to the Central Government;

(b) approves with modifications the proposal received under sub-sections (2) to (4), it shall, communicate such modifications to the person or the State Government concerned and if such modifications have been accepted by such person or State Government, the Board shall communicate the approval to the Central Government;

(c) rejects the proposal received under sub-sections (2) to (4), it shall record the reasons therefor and communicate the rejection to the Central Government which shall intimate to the State Government or the person concerned.

(8) மைய அரசானது, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவியமைப்பதற்காக, பின்வரும் தேவைப்பாடுகளை வகுத்துரைக்கலாம், அவையாவன :—

(அ) நிலத்தின் குறைந்த அளவு வரையிடம் மற்றும் வாரியம் எந்த பிற வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, (2) முதல் (4) வரையிலான உட்பிரிவுகளின்படி அதனால் பெறப்பட்ட செயற்குறிப்பு எதற்கும் ஒப்பேற்பு அளிக்க வேண்டுமோ, அதனை மாற்றமைவு செய்ய வேண்டுமோ அல்லது ஏற்க மறுக்க வேண்டுமோ அந்த வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்; மற்றும்

(ஆ) மேம்பாட்டாளர், அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை எந்த வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு மேற்கொள்ள வேண்டுமோ அந்த வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மற்றும் அவரது கடமைப்பாடுகளும் உரிமைப்பாடுகளும்:

வரம்புரையாக: (அ) கூறில் சுட்டப்பட்ட வெவ்வேறுபட்ட குறைந்த அளவு வரையிடம், பிற வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் ஆகியவை, சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் ஒரு வகைக்காக அல்லது வகைகளுக்காக மைய அரசால் வகுத்துரைக்கப்படலாம்.

(9) வாரியமானது, —

(அ). (2) முதல் (4) வரையிலான உட்பிரிவுகளின்படி பெறப்பட்ட செயற்குறிப்புக்கு மாற்றமைவு எதுவுமின்றி ஒப்பேற்பு அளிக்குமாயின், அதனை மைய அரசுக்குத் தெரிவித்தல் வேண்டும்;

(ஆ). (2) முதல் (4) வரையிலான உட்பிரிவுகளின்படி பெறப்பட்ட செயற்குறிப்பிற்கு மாற்றமைவுகளுடன் ஒப்பேற்பளிக்குமாயின், அது, அந்த மாற்றமைவுகள் குறித்து, தொடர்புடைய நபருக்கோ மாநில அரசுக்கோ தெரிவித்தல் வேண்டும், மற்றும் அந்த நபரால் அல்லது மாநில அரசால் அத்தகைய மாற்றமைவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அந்த வாரியமானது, மைய அரசுக்கு அந்த ஒப்பேற்புக் குறித்துத் தெரிவித்தல் வேண்டும்;

(இ). (2) முதல் (4) வரையிலான உட்பிரிவுகளின்படி பெறப்பட்ட செயற்குறிப்பை ஏற்க மறுக்குமாயின், அது, அதற்கான காரணங்களைப் பதிவு செய்து, அந்த மறுப்பினை மைய அரசுக்குத் தெரிவித்தல் வேண்டும், மைய அரசு அதனைத் தொடர்புடைய மாநில அரசுக்கு அல்லது நபருக்கு தெரிவிக்கும்.

(10) The Central Government shall, on receipt of communication under clause (a) or clause (b) of sub-section (9), grant, within such time as may be prescribed, a letter of approval on such terms and conditions and obligations and entitlements as may be approved by the Board, to the Developer, being the person or the State Government concerned:

Provided that the Central Government may, on the basis of approval of the Board, approve more thanone Developer in a Special Economic Zone in cases where one Developer does not have in his possession the minimum area of contiguous land, as may be prescribed, for setting up a Special Economic Zone and in such cases, each Developer shall be considered as a Developer in respect of the land in his possession.

(11) Any person who, or a State Government which, intends to provide any infrastructure facilities in the identified area referred to in sub-sections (2) to (4), or undertake any authorised operation may, after entering into an agreement with the Developer referred to in sub-section (10), make a proposal for the same to the Board for its approval and the provisions of sub-section (5) and sub-sections (7) to (10) shall, as far as may be, apply to the said proposal made by such person or the State Government.

(12) Every person or the State Government referred to in sub-section (11), whose proposal has been approved by the Board and who, or which, has been granted letter of approval by the Central Government, shall be considered as a Co-Developer of the Special Economic Zone.

(13) Subject to the provisions of this section and the letter of approval granted to a Developer, theDeveloper may allocate space or built up area or provide infrastructure services to the approved Units in accordance with the agreement entered into by him with the entrepreneurs of such Units.

(10) மைய அரசு, (9) ஆம் உட்பிரிவின் (அ) கூறின் அல்லது (ஆ) கூறின்படி தகவலைப் பெற்றதன் பேரில், வகுத்துரைக்கப்படும் நேரத்திற்குள், வாரியத்தால் ஒப்பேற்பு அளிக்கப்படும் வரையுரைகள், வரைக்கட்டுகள், கடமைப்பாடுகள் மற்றும் உரிமைப்பாடுகளின் பேரில், ஒப்பேற்புக் கடிதமொன்றை, தொடர்புடைய நபராகயிருக்கிற அல்லது தொடர்புடைய மாநில அரசாகயிருக்கிற மேம்பாட்டாளருக்கு அளித்தல் வேண்டும்:

வரம்புரையாக: மைய அரசானது, வாரியத்தின் ஒப்பேற்பின் அடிப்படையில், சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்துவதற்காக, அடுத்துள்ள நிலத்தின் குறைந்த அளவு வரையிடத்தை ஒரு மேம்பாட்டாளர் தன் உடைமையில் கொண்டிராத நேர்வுகளில், சிறப்புப் பொருளாதார மண்டலமொன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மேம்பாட்டாளர்களுக்கு ஒப்பேற்பு அளிக்கலாம், மற்றும் அத்தகைய நேர்வுகளில், மேம்பாட்டாளர் ஒவ்வொருவரும், தனது உடைமையிலுள்ள நிலத்தைப் பொறுத்து ஒரு மேம்பாட்டாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(11). (2) முதல் (4) வரையிலான உட்பிரிவுகளில் சுட்டப்பட்டுள்ள இனங்கண்டறியப்பட்ட வரையிடத்தில், உள் கட்டமைப்பு வசதிகள் எவற்றையும் அளிக்க கருதுகிற அல்லது அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடு எதனையும் மேற்கொள்கிற நபர் எவரும் அல்லது மாநில அரசு எதுவும், (10) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட மேம்பாட்டாளருடன் உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்ட பிறகு, வாரியத்திற்கு அதன் ஒப்பேற்பிற்காக அதற்கான செயற்குறிப்பை அனுப்பலாம். மேலும், (5) ஆம் உட்பிரிவின் மற்றும் (7) முதல் (10) வரையிலான உட்பிரிவுகளின் வகையங்கள், இயன்ற அளவிற்கு, அத்தகைய நபரால் அல்லது மாநில அரசால் செய்யப்பட்ட மேற்சொன்ன செயற்குறிப்பிற்குப் பொருந்தும்.

(12). (11) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட எந்த நபருடைய அல்லது மாநில அரசுடைய செயற்குறிப்பிற்கு வாரியத்தால் ஒப்பேற்பு அளிக்கப்பட்டு, மைய அரசால் ஒப்பேற்புக் கடிதம் வழங்கப்பட்டிருக்கிறதோ அத்தகைய நபர் ஒவ்வொருவரும், அல்லது மாநில அரசு ஒவ்வொன்றும், சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் உடன் மேம்பாட்டாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) இந்தப் பிரிவின் வகையங்களுக்கும், மேம்பாட்டாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒப்பேற்புக் கடிதத்திற்கும் உட்பட்டு, மேம்பாட்டாளர், ஒப்பேற்பு அளிக்கப்பட்ட அலகுகளுக்கு, அத்தகைய அலகுகளின் தொழில் முனைவோர்களுடன் அவரால் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டிற்கிணங்க, இடத்தை அல்லது கட்டப்பட்ட வரையிடத்தை ஒதுக்கீடு செய்யலாம் அல்லது உள் கட்டமைப்பு சேவைகளுக்கு வகை செய்யலாம்.

Establishment of Special Economic Zone and approval and authorisation to operate it to, Developer.

4. (1) The Developer shall, after the grant of letter of approval under sub-section (10) of section 3, submit the exact particulars of the identified area referred to in sub-sections (2) to (4) of that section, to the Central Government and thereupon that Government may, after satisfying that the requirements, under sub-section (8) of section 3 and other requirements, as may be prescribed, are fulfilled, notify the specifically identified area in the State as a Special Economic Zone:

Provided that an existing Special Economic Zone shall be deemed to have been notified and established in accordance with the provisions of this Act and the provisions of this Act shall, as far as may be, apply to such Zone accordingly:

Provided further that the Central Government may, after notifying the Special Economic Zone, if it considers appropriate, notify subsequently any additional area to be included as a part of that Special Economic Zone.

(2) After the appointed day, the Board may, authorise the Developer to undertake in a Special Economic Zone, such operations which the Central Government may authorise.

Guidelines for notifying Special Economic Zone.

5. The Central Government, while notifying any area as a Special Economic Zone or an additional area to be included in the Special Economic Zone and discharging its functions under this Act, shall be guided by the following, namely:

(a) generation of additional economic activity;

(b) promotion of exports of goods and services;

(c) promotion of investment from domestic and foreign sources;

(d) creation of employment opportunities;

4. (1) மேம்பாட்டாளர், **3** ஆம் பிரிவின் **(10)** ஆம் உட்பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதம் வழங்கப்பட்ட பிறகு, அந்தப் பிரிவின் **(2)** முதல் **(4)** வரையிலான உட்பிரிவுகளில் சுட்டப்பட்ட, இனங்கண்டறியப்பட்ட வரையிடம் குறித்த மிகச் சரியான விவரங்களை மைய அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும், மற்றும் அதன்பேரில், அந்த அரசானது, வகுத்துரைக்கப்பட்டவாறு, **3** ஆம் பிரிவின் **(8)** ஆம் உட்பிரிவின் படியான வேண்டுறுத்தங்களும் பிற வேண்டுறுத்தங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன எனத் தெளிவுறக் கண்டதற்குப் பின்னர், மாநிலத்தில் குறிப்பாக இனங்கண்டறியப்பட்ட வரையிடத்தை ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கை செய்யலாம்: சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவியமைத்தல் மற்றும் ஒப்பேற்பு மற்றும் அதனைச் செயற்படுத்த மேம்பாட்டாளருக்கு அதிகாரம் அளித்தல்.

வரம்புரையாக: நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலமானது, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு இணங்க, அறிவிக்கை செய்யப்பட்டு நிறுவியமைக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்கள், இயன்ற அளவுக்கு, அதற்கிணங்க, அத்தகைய மண்டலத்திற்குப் பொருந்துதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக: மைய அரசானது, சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அறிவிக்கை செய்த பிறகு, தான் பொருத்தமெனக் கருதுமாயின், அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் பகுதியாகச் சேர்க்கப்படுவதற்காகக் கூடுதல் வரையிடம் எதனையும் பின்னதாக அறிவிக்கை செய்யலாம்.

(2) குறித்திடப்பட்ட நாளுக்குப் பிறகு, வாரியமானது, மைய அரசு அதிகாரமளிக்கலாகும் செயற்பாடுகளைச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மேற்கொள்வதற்கு மேம்பாட்டாளருக்கு அதிகாரமளிக்கலாம்.

5. மைய அரசு, வரையிடம் எதனையும் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலமாக அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஒரு கூடுதல் வரையிடம் எதுவும் சேர்க்கப்பட வேண்டுமென அறிவிக்கை செய்து, இந்தச் சட்டத்தின்படியான தன்னுடைய அலுவற்பணிகளை ஆற்றுகையில் பின்வருவனவற்றால் வழிநடத்தப்படுதல் வேண்டும்:— சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அறிவிக்கை செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.

(அ) கூடுதல் பொருளாதாரச் செயற்பாடுகளை ஏற்படுத்துதல்;

(ஆ) சரக்குகளின் ஏற்றுமதியையும் சேவைகளையும் மேம்படுத்துதல்;

(இ) உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வள ஆதாரங்களிலிருந்து முதலீட்டினை மேம்படுத்துதல்;

(ஈ) வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்;

(e) development of infrastructure facilities; and

(f) maintenance of sovereignty and integrity of India, the security of the State and friendly relations with foreign States.

Processing and non-processing areas.

6. The areas falling within the Special Economic Zones may be demarcated by the Central Government or any authority specified by it as

(a) the processing area for setting up Units for activities, being the manufacture of goods, or rendering services; or

(b) the area exclusively for trading or warehousing purposes; or

(c) the non-processing areas for activities other than those specified under clause (a) or clause (b).

Exemption from taxes, duties or cess.

7. Any goods or services exported out of, or imported into, or procured from the Domestic Tariff Area by,

(i) a Unit in a Special Economic Zone; or

(ii) a Developer,

shall, subject to such terms, conditions and limitations, as may be prescribed, be exempt from the payment of taxes, duties or cess under all enactments specified in the First Schedule.

(உ) உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்; மற்றும்

(ஊ) இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு, மாநிலத்தின் பாதுகாப்பு, அயல்நாடுகளுடனான நட்புறவுகள் ஆகியவற்றைப் பேணிவருதல்.

6. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்குள் வருகிற வரையிடங்கள், மைய அரசாலோ அல்லது அதனால் குறித்துரைக்கப்படும் அதிகாரஅமைப்பு எதனாலுமோ, செயல்முறைப் பகுதிகள் அல்லது செயல்முறைப் பகுதிகள் அல்லாதவை.

(அ) சரக்குகளின் உற்பத்தியாக அல்லது சேவைகளைச் செய்வதாக இருக்கிற செயற்பாடுகளுக்காக அலகுகளை ஏற்படுத்துவதற்கான செயல்முறைப் பகுதியாக; அல்லது

(ஆ) வணிகஞ்செய்யும் அல்லது சேமித்து வைக்கும் நோக்கங்களுக்கென மட்டுமே உள்ள பகுதியாக; அல்லது

(இ) . (அ) கூறில் அல்லது (ஆ) கூறில் குறித்துரைக்கப்பட்டவை அல்லாத பிற செயற்பாடுகளுக்கான செயல்முறைப் பகுதிகளாக இல்லாதவையாக

குறிக்கப்படலாம்.

7. உள்நாட்டு சுங்கவரி வரையிடத்திலிருந்து, வரிகள், சுங்கத் தீர்வைகள் அல்லது மேல் வரியிலிருந்து விலக்களிப்பு.

(i) சிறப்புப் பொருளாதார மண்டலத்திலுள்ள அலகு ஒன்றினால்; அல்லது

(ii) ஒரு மேம்பாட்டாளரால்;

ஏற்றுமதி செய்யப்படுகிற அல்லது அதற்குள் இறக்குமதி செய்யப்படுகிற அல்லது அங்கிருந்து பெறப்படுகிற சரக்குகள் அல்லது சேவை எவற்றிற்கும், வகுத்துரைக்கப்படலாகும் வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டு, முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட செய்சட்டங்கள் அனைத்தின்படியும் வரிகள், சுங்கத் தீர்வைகள் அல்லது மேல்வரி செலுத்தத்தினின்றும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

CHAPTER III

CONSTITUTION OF BOARD OF APPROVAL

Constitution of Board of Approval.

8. (1) The Central Government shall, within fifteen days of the commencement of this Act, by notification, constitute, for the purposes of this Act, a Board to be called the Board of Approval.

(2) The Board shall consist of

(a) an officer not below the rank of an Additional Secretary to the Government of India in the Ministry or Department of the Central Government dealing with commerce — Chairperson, *ex officio*;

(b) two officers, not below the rank of a Joint Secretary to the Government of India, to be nominated by the Central Government to represent the Ministry or Department of the Central Government dealing with revenue — Members, *ex officio*;

(c) one officer not below the rank of a Joint Secretary to the Government of India to be nominated by the Central Government to represent the Ministry or Department of the Central Government dealing with economic affairs (financial services) — Member, *ex officio*;

(d) such number of officers, not exceeding ten, not below the rank of the Joint Secretary to the Government of India, to be nominated by the Central Government to represent the Ministries or Departments of the Central Government dealing with commerce, industrial policy and promotion, science and technology, small scale industries and agro and rural industries, home affairs, defence, environment and forests, law, overseas Indian affairs and urban development — Members, *ex officio*;

(e) a nominee of the State Government concerned — Member, *ex officio*;

அத்தியாயம் III

ஒப்பேற்பளிக்கும் வாரியத்தை அமைத்தல்

8. (1) மைய அரசு, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒப்பேற்பளிக்கும் வாரியம் என்றழைக்கப்படும் வாரியமொன்றை அமைத்தல் வேண்டும். ஒப்பேற்பளிக்கும் வாரியத்தை அமைத்தல்.

(2) வாரியமானது —

(அ) வணிகவியலைக் கையாளுகிற மைய அரசு அமைச்சகத்திலோ அல்லது துறையிலோ, இந்திய அரசின் கூடுதல் செயலர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவரைப் பதவிவழித் தலைமையராகவும்;

(ஆ) வருவாயைக் கையாளுகிற மைய அரசு அமைச்சகத்தினை அல்லது துறையினைச் சார்பாற்றம் செய்வதற்கு மைய அரசால் பெயர் குறித்து அமர்த்தப்பட வேண்டிய இந்திய அரசின் இணைச் செயலர் படிநிலைக்குக் குறையாத இரண்டு அலுவலர்களைப் பதவிவழி உறுப்பினர்களாகவும்;

(இ) பொருளாதார விவகாரங்களைக் (நிதிச் சேவைகள்) கையாளுகிற மைய அரசு அமைச்சகத்தை அல்லது துறையைச் சார்பாற்றம் செய்வதற்கு, மைய அரசால் பெயர் குறித்து அமர்த்தப்பட வேண்டிய இந்திய அரசு இணைச் செயலரின் படிநிலைக்குக் குறையாத ஓர் அலுவலரைப் பதவிவழி உறுப்பினராகவும்;

(ஈ) வணிகவியல், தொழிற்கொள்கை மற்றும் மேம்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சிறு தொழில்கள், வேளாண் மற்றும் ஊரகத் தொழில்கள், உள் விவகாரங்கள், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் காடுகள், சட்டம், அயல்நாடுவாழ் இந்தியர் விவகாரங்கள் மற்றும் நகர மேம்பாடு ஆகியவற்றைக் கையாளுகிற, மைய அரசு அமைச்சகங்களை அல்லது துறைகளைச் சார்பாற்றம் செய்வதற்கு மைய அரசால், பெயர் குறித்து அமர்த்தப்பட வேண்டிய இந்திய அரசின் இணைச் செயலர் படிநிலைக்குக் குறையாத, பத்துக்கு மேற்படாத எண்ணிக்கையில் அலுவலர்களைப் பதவிவழி உறுப்பினர்களாகவும்;

(உ) தொடர்புடைய மாநில அரசினால் பெயர் குறித்து அமர்த்தப்பட்டவரைப், பதவிவழி உறுப்பினராகவும்;

(f) the Director General of Foreign Trade or his nominee — Member, *ex officio*;

(g) the Development Commissioner concerned — Member, *ex officio*;

(h) a Professor in the Indian Institute of Management, being a society registered under the Societies Registration Act, 1860 or the Indian Institute of Foreign Trade, being a society registered under the Societies Registration Act, 1860, as may be, nominated by the Central Government — Member, *ex officio*; 21/1860.

(i) an officer not below the rank of Deputy Secretary to the Government of India dealing with the Special Economic Zones in the Ministry or Department of the Central Government, dealing with commerce to be nominated by the Central Government — Member-Secretary, *ex officio*:

Provided that the member, being the Joint Secretary, nominated under clauses (b) to (d) of this sub-section may, if he is unable to attend the meeting of the Board, authorise any other officer to attend the meeting of the Board on his behalf.

(3) The term of office of an *ex officio* Member shall come to an end as soon as he ceases to hold the office by virtue of which he was so nominated.

(4) For the purposes of performing its functions, the Board may co-opt as members, such number of persons as it deems fit, who have special knowledge of, and practical experience in, matters relating to, or relevant to activity connected with the Special Economic Zones and any such person shall have the right to take part in the discussions of the Board but shall not be counted for the quorum and shall not be a member for any other purpose and such person shall be entitled to receive such allowances or fees, as the case may be, fixed by the Board.

(ஊ) அயல்நாட்டு வர்த்தகத் தலைமை இயக்குநரை அல்லது அவரால் பெயர்குறித்து அமர்த்தப்பட்டவரைப் பதவிவழி உறுப்பினராகவும்;

(எ) தொடர்புடைய மேம்பாட்டு ஆணையரைப் பதவிவழி உறுப்பினராகவும்;

21/1860. (ஏ) 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாக இருக்கிற இந்திய மேலாண்மை நிறுவனத்தில் அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாக இருக்கிற அயல்நாட்டு வர்த்தகத்திற்கான இந்திய நிறுவனத்தில், மைய அரசால் பெயர்குறித்து அமர்த்தப்படலாகும் ஒரு பேராசிரியரைப் பதவிவழி உறுப்பினராகவும்;

(ஐ) வணிகவியலைக் கையாளுகிற மைய அரசின் அமைச்சகத்தின் அல்லது துறையிலுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலங்களைக் கையாளுகிறவராக இருந்து, மைய அரசால் பெயர் குறித்து அமர்த்தப்பட வேண்டியவரும், இந்திய அரசின் துணைச் செயலர் படிநிலைக்குக் குறையாதவருமான அலுவலர் ஒருவரைப் பதவிவழி உறுப்பினர் — செயலராகவும்

கொண்டதாயிருக்கும் :

வரம்புரையாக: இணைச் செயலராக இருந்து, இந்த உட்பிரிவின் (ஆ) முதல் (ஈ) வரையிலான கூறுகளின்படி பெயர் குறித்தமர்த்தப்படுகிற உறுப்பினர், வாரியத்தின் கூட்டத்திற்கு வர இயலாதவராக இருந்தால், தனது சார்பாக அந்தக் கூட்டத்திற்குச் செல்வதற்கு பிற அலுவலர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

(3) பதவிவழி உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலமானது, எந்தப் பதவியின் காரணத்தால் அவர் பெயர் குறித்து அமர்த்தப்பட்டாரோ அந்தப் பதவியை வகிப்பதிலிருந்து அவர் நீங்கிய உடனேயே முடிவுக்கு வருதல் வேண்டும்.

(4) வாரியமானது, தனது அலுவற்பணிகளைப் புரியும் நோக்கங்களுக்காக, சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் செயற்பாட்டுடன் தொடர்புடைய அல்லது பொருத்தமுடைய பொருட்பாடுகளில் சிறப்பறிவும், செயலுறுப் பட்டறிவும் உடைய நபர்களை தான் பொருத்தமெனக் கொள்ளும் எண்ணிக்கையில் உறுப்பினர்களாக ஒத்துத்தேர்ந்தெடுக்கலாம், மற்றும் அத்தகைய நபர் எவரும், வாரியத்தின் கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கு உரிமை கொண்டவர் ஆவார், ஆனால், குறைவெண்ணை அமைப்பதில் அவர்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் ஆகாது, மற்றும் பிற நோக்கம் எதற்காகவும் உறுப்பினராக இருத்தலாகாது மற்றும் அந்த நபர், வாரியத்தால் நிர்ணயிக்கப்படும் படித்தொகைகளை அல்லது, நேர்விற்கேற்ப, கட்டணங்களைப் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

(5) The Board shall meet at such times and places as may be appointed by it and shall have the power to regulate its own procedure.

(6) One-third of the total Members of the Board shall form a quorum, and all the acts of the Board shall be decided by a general consensus of the Members present.

(7) No act or proceeding of the Board shall be called in question on the ground merely of existence of any vacancy in, or any defect in the constitution of, the Board.

(8) All orders and decisions of the Board and all other instruments issued by it shall be authenticated by the signature of the Member-Secretary, or any other Member as may be authorised by the Board in this behalf.

Duties, powers and functions of Board.

9. (1) Subject to the provisions of this Act, the Board shall have the duty to promote and ensure orderly development of the Special Economic Zones.

(2) Without prejudice to the generality of the provisions contained in sub-section (1), the powers and functions of the Board shall include

(a) granting of approval or rejecting proposal or modifying such proposals for establishment of the Special Economic Zones;

(b) granting approval of authorised operations to be carried out in the Special Economic Zones by the Developer;

(c) granting of approval to the Developers or Units (other than the Developers or the Units which are exempt from obtaining approval under any law or by the Central Government) for foreign collaborations and foreign direct investments (including investments by a person resident outside India), in the Special Economic Zone for its development, operation and maintenance;

(5) வாரியமானது, தன்னால் குறிக்கப்படலாகும் நேரங்களிலும், இடங்களிலும் கூடுதல் வேண்டும், மற்றும் தன்னுடைய நடைமுறையை முறைப்படுத்திக் கொள்வதற்கு அதிகாரமுடையதாக இருக்கும்.

(6) வாரியத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், குறைவெண்ணாக அமைவர் மற்றும் வாரியத்தின் செயல்கள் அனைத்தும், வந்திருக்கும் உறுப்பினர்களின் பொது இசைவினால் முடிபு செய்யப்படுதல் வேண்டும்.

(7) வாரியத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், வாரியத்தில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தால் மட்டுமே மறுத்து வாதிடப்படுதல் ஆகாது.

(8) வாரியத்தின் ஆணைகள் மற்றும் முடிபுகள் அனைத்தும், மற்றும் அதனால் பிறப்பிக்கப்பட்ட பிற முறையாவணங்கள் அனைத்தும், உறுப்பினர் செயலரின் அல்லது இதன்பொருட்டு வாரியத்தால் அதிகாரமளிக்கப்படும் பிற உறுப்பினர் எவரின் கையொப்பத்தின் மூலம் உறுதிச்சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

வாரியத்தின் கடமைகள், அதிகாரங்கள் மற்றும் அலுவற்பணிகள்.

9. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, சிறப்புப் பொருளாதார மண்டலங்களை மேம்படுத்துவதும் அதன் முறையான வளர்ச்சியை உறுதி செய்வதும் வாரியத்தின் கடமையாக இருக்கும்.

(2). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள வகையங்களின் பொதுத்தன்மைக்குக் குந்தகமின்றி, வாரியத்தின் அதிகாரங்களும், அலுவற்பணிகளும், பின்வருவனவற்றை உள்ளடக்கும்:—

(அ) சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவியமைப்பதற்கு ஒப்பேற்பு வழங்குதல் அல்லது அதற்கான செயற்குறிப்பை ஏற்க மறுத்தல் அல்லது அந்தச் செயற்குறிப்புகளை மாற்றமைவு செய்தல்;

(ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகள் மேம்பாட்டாளரால் நிறைவேற்றப்படுவதற்கு ஒப்பேற்பு வழங்குதல்;

(இ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அதன் மேம்பாட்டிற்காக, செயற்பாட்டிற்காக மற்றும் அதன் பேணுகைக்காக, அயல் நாட்டுடனான கூட்டு ஒப்பந்தங்களுக்கும், (இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் நபரால் செய்யப்படும் முதலீடுகள் உள்ளடங்கலான) அயல்நாட்டு நேரடி முதலீடுகளுக்கும், (சட்டம் எதனின்படியும் அல்லது மைய அரசால் ஒப்பேற்புப் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிற மேம்பாட்டாளர்கள் அல்லது அலகுகள் அல்லாத பிற) மேம்பாட்டாளர்களுக்கு அல்லது அலகுகளுக்கு ஒப்பேற்பு வழங்குதல்;

(d) granting of approval or rejecting of proposal for providing infrastructure facilities in a Special Economic Zone or modifying such proposals;

(e) granting, notwithstanding anything contained in the Industries (Development and Regulation) Act, 1951 , a licence to an industrial undertaking referred to in clause (d) of section 3 of that Act, if such undertaking is established, as a whole or part thereof, or proposed to be established, in a Special Economic Zone; 65/1951.

(f) suspension of the letter of approval granted to a Developer and appointment of an Administrator under sub-section (1) of section 10;

(*g*) disposing of appeals preferred under sub

(h) disposing of appeals preferred under sub-section (4) of section 16;

(i) performing such other functions as may be assigned to it by the Central Government.

(3) The Board may, if so required for the purposes of this Act or any other law for the time being in force relating to Special Economic Zones, by notification, decide as to whether a particular activity constitutes manufacture as defined in clause (r) of section 2 and such decision of the Board shall be binding on all Ministries and Departments of the Central Government.

(4) The Board may delegate such powers and functions as it may deem fit to one or more Development Commissioners for effective and proper discharge of the functions of the Board.

(5) Without prejudice to the foregoing provisions of this Act, the Board shall, in exercise of its powers or the performance of its functions under this Act, be bound by such directions on questions of policy as the Central Government may give in writing to it from time to time.

(ஈ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு வகை செய்வதற்காக ஒப்பேற்பு வழங்குதல் அல்லது செயற்குறிப்பை ஏற்க மறுத்தல் அல்லது அத்தகைய செயற்குறிப்பை மாற்றமைவு செய்தல்;

65/1951. (உ) 1951 ஆம் ஆண்டு தொழில்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், சிறப்புப் பொருளாதார மண்டலமொன்றில், அந்தச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (ஈ) கூறில் சுட்டப்பட்டுள்ள தொழில் அமைவனம் ஒன்று, முழுவதுமாக அல்லது அதன் பகுதியாக நிறுவப்படுமாயின் அல்லது நிறுவக் கருதப்பட்டிருக்குமாயின், அந்த அமைவனத்திற்கு உரிமமொன்றை வழங்குதல்;

(ஊ) 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி ஒரு மேம்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட ஒப்பேற்புக் கடிதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மற்றும் ஆட்சியாளர் ஒருவரை அமர்த்துதல்;

(எ) 15 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி முன்னிடப்பட்ட மேல்முறையீடுகளை முடிவு செய்தல்;

(ஏ) 16 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி முன்னிடப்பட்ட மேல்முறையீடுகளை முடிவு செய்தல்;

(ஐ) மைய அரசால் அதற்குக் குறித்தளிக்கப்படலாகும் பிற அலுவற்பணிகளைப் புரிதல்.

(3) இந்தச் சட்டத்தின் அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடர்பாக அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதனின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுமாயின், வாரியமானது, அறிவிக்கை வாயிலாக, குறிப்பிட்டதொரு செயற்பாடானது, 2 ஆம் பிரிவின் (ண) கூறில் பொருள்வரையறை செய்யப்பட்ட உற்பத்தியாக அமையக்கூடுமா என்பதைத் தீர்மானிக்கலாகும் மற்றும் வாரியத்தின் அத்தகைய முடிபு, மைய அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும்.

(4) வாரியத்தின் அலுவற்பணிகளைத் திறம்படவும் உகந்தவாறும் ஆற்றுவதற்காக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேம்பாட்டு ஆணையர்களுக்குத் தான் பொருத்தமெனக் கொள்ளலாகும் அதிகாரங்களையும் அலுவற்பணிகளையும் வாரியம் ஒப்படைவு செய்யலாம்.

(5) இந்தச் சட்டத்தின் முன் சென்ற வகையங்களுக்குக் குந்தகமின்றி, வாரியமானது, இந்தச் சட்டத்தின்படி தன்னுடைய அதிகாரங்களைச் செலுத்துகையில் அல்லது அலுவற்பணிகளைப் புரிகையில், மைய அரசு, அவ்வப்போது, எழுத்து வடிவில் அதற்கு அளிக்கலாகும் கொள்கை பற்றிய வினாக்களின் பேரிலான பணிப்புரைகளுக்குக் கட்டுப்பட்டதாகும்.

(6) The decision of the Central Government whether a question is one of policy or not shall be final.

Suspension of letter of approval and transfer of Special Economic Zone in certain cases.

10. (1) If, at any time, the Board is of the opinion that a Developer-

(a) is unable to discharge the functions or perform the duties imposed on him by or under the provisions of this Act or rules made there under; or

(b) has persistently defaulted in complying with any direction given by the Board under this Act; or

(c) has violated the terms and conditions of the letter of approval; or

(d) whose financial position is such that he is unable to fully and efficiently discharge the duties and obligations imposed on him by the letter of approval, and

the circumstances exist which render it necessary for it in public interest so to do, the Board may, on application, or with the consent of the Developer, or otherwise, for reasons to be recorded in writing, suspend the letter of approval, granted to the Developer for a whole or part of his area established as Special Economic Zone, for a period not exceeding one year and appoint an Administrator to discharge the functions of the Developer in accordance with the terms and conditions of the letter of approval and manage the Special Economic Zone accordingly.

(2) Consequent upon appointment of an Administrator, the management of the Special Economic Zone of the Developer referred to in sub-section (1) shall vest in the Administrator.

(3) No letter of approval shall be suspended under sub-section (1) unless the Board has given to the Developer not less than three months' notice, in writing, stating the grounds on which it proposes to suspend the letter of approval, and has considered any cause shown by the Developer within the period of that notice, against the proposed suspension.

(6) ஒரு வினா, கொள்கை பற்றியதா இல்லையா என்பது குறித்து மைய அரசின் முடிபே அறுதியானதாகும்.

10. (1) ஒரு மேம்பாட்டாளர் —

குறித்தசில நேர்வுகளில், சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் ஒப்பேற்புக்கான கடிதம் மற்றும் மாற்றுகையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்.

(அ) இந்தச் சட்டத்தின் வகையங்களாலோ அல்லது அதன் வழியாலோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளாலோ தன் மீது சுமத்தப்பட்ட அலுவற்பணிகளை ஆற்றுவதற்கு அல்லது கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராயிருக்கிறார் என்று; அல்லது

(ஆ) இந்தச் சட்டத்தின்படி வாரியத்தினால் கொடுக்கப்பட்ட பணிப்புரை எதற்கும் இணங்கி நடப்பதில் தொடர்ந்து தவறுகை செய்திருக்கிறார் என்று; அல்லது

(இ) ஒப்பேற்புக் கடிதத்தின் வரையுரைகளையும் வரைக்கட்டுகளையும் மீறியிருக்கிறார் என்று; அல்லது

(ஈ) ஒப்பேற்புக் கடிதத்தினால் அவருக்குச் சுமத்தப்பட்ட கடமைகளையும், கடமைப்பாடுகளையும் முழுமையாகவும் திறம்படவும் ஆற்றுவதற்கு அவர் இயலாதவராயிருக்கிறார் என்ற அளவிற்கு அவருடைய நிதி நிலைமை இருக்கிறது என்றும், மற்றும்

பொது நலனில் அவ்வாறு செய்வதைத் தேவையாக்குகிற சூழ்நிலைகள் உள்ளன என்றும் வாரியமானது, எந்த நேரத்திலும் கருதுமாயின், வாரியமானது, விண்ணப்பத்தின்பேரில் அல்லது மேம்பாட்டாளரின் இசைவுடன் அல்லது பிறவாறு, எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, ஓராண்டிற்கு மேற்படாததொரு காலஅளவிற்கு, சிறப்புப் பொருளாதார மண்டலமாக நிறுவியமைக்கப்பட்ட வரையிடம் முழுவதற்கும் அல்லது அதன் பகுதிக்கு, மேம்பாட்டாளருக்காக வழங்கப்பட்ட ஒப்பேற்புக் கடிதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் மற்றும் ஒப்பேற்புக் கடிதத்தின் வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் இணங்க, மேம்பாட்டாளரின் அலுவற்பணிகளை ஆற்றுவதற்காக, ஆட்சியாளர் ஒருவரை அமர்த்தலாம் மற்றும் அதற்கிணங்க, சிறப்புப் பொருளாதார மண்டலத்தை மேலாண்மை செய்து வரலாம்.

(2) ஆட்சியாளர் ஒருவர் அமர்த்தப்பட்டதன் பேரில், (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட மேம்பாட்டாளரின் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேலாண்மை ஆட்சியாளரிடம் உற்றமைந்திருக்கும்.

(3) வாரியமானது, மேம்பாட்டாளருக்கு, ஒப்பேற்புக் கடிதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க தான் கருதியுள்ள காரணங்களை உரைக்கிற மூன்று மாதங்களுக்குக் குறையாத அறிவிப்பொன்றை எழுத்து வடிவில் அளித்திருந்து, கருதப்பட்ட தற்காலிக நிறுத்தி வைப்புக்கு எதிராக அறிவிப்பின் காலத்திற்குள் மேம்பாட்டாளரால் காட்டப்பட்ட காரணம் எதனையும், ஓர்வு செய்திருந்தாலன்றி, (1) ஆம் உட்பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதம் எதுவும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுதல் ஆகாது.

(4) The Board may, instead of suspending the letter of approval under sub-section (1), permit it to remain in force subject to such further terms and conditions as it thinks fit to impose, and any further terms or conditions so imposed shall be binding upon and be complied with by the Developer and shall be of like force and effect as if they were contained in the letter of approval.

(5) In case the Board suspends a letter of approval under this section, it shall serve a notice of suspension upon the Developer and fix a date on which the suspension shall take effect.

(6) Upon suspension of the letter of approval under sub-section (1), the Special Economic Zone of the Developer referred to in sub-section (5) shall vest in the Administrator under sub-section (2) for a period not exceeding one year or up to the date on which the letter of approval for such Special Economic Zone is transferred, whichever is earlier, in accordance with the provisions contained in sub-sections (7) and (9), as the case may be.

(7) Where the Board has given notice for suspension of letter of approval under sub-section (5), the Developer may, after prior approval of the Board, transfer his letter of approval to any person who is found eligible by the Board for grant of such approval.

(8) If at any time, it appears to the Board that the purpose of the order appointing the Administrator has been fulfilled or that for any reason it is undesirable that the order of appointment should remain in force, the Board may cancel the order and thereup on the Administrator shall be divested of the management of the Special Economic Zone which shall, unless otherwise directed by the Board, again vest in the person, being the Developer, in whom it was vested immediately prior to the date of appointment of the Administrator.

(4) வாரியமானது, (1) ஆம் உட்பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்குப் பதிலாக தான் சுமத்துவதற்குப் பொருத்தமென நினைக்கிற மேலுமான வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, அது செல்லாற்றலில் இருப்பதற்கு அனுமதிக்கலாம். மேலும் அவ்வாறு சுமத்தப்பட்ட மேலுமான வரையுரைகள் அல்லது வரைக்கட்டுகள் எவையும் மேம்பாட்டளரைக் கட்டுப்படுத்தும் மற்றும் அவரால் இணங்கி நடக்கப்படுவதாயிருக்கும் மற்றும் அவை, ஒப்பேற்புக் கடிதத்தில் அடங்கியிருந்தாற்போன்ற செல்லாற்றலும் செல்விளைவும் உடையதாயிருக்கும்.

(5) வாரியமானது, இந்தப் பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதமொன்றைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் நேர்வில், அது, மேம்பாட்டாளருக்கு, தற்காலிகமாக நிறுத்தி வைப்பு அறிவிப்பைச் சார்வு செய்து, அந்தத் தற்காலிக நிறுத்தி வைப்பு, செல்திறம் பெறும் தேதியை நிர்ணயித்தல் வேண்டும்.

(6). (1) ஆம் உட்பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதம் ஒன்று தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதன் பேரில், (5) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட மேம்பாட்டாளரின் சிறப்புப் பொருளாதார மண்டலமானது, (7) ஆம் மற்றும் நேர்வுக்கேற்ப, (9) ஆம் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள வகையங்களுக்கிணங்க, ஓராண்டுக்கு மேற்படாத காலஅளவு அல்லது அத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான ஒப்பேற்புக் கடிதம் மாற்றல் செய்யப்பட்ட தேதி, இதில் எது முந்தியதோ, அந்தக் காலஅளவுக்கு அல்லது அதுவரை, (2) ஆம் உட்பிரிவின்படி ஆட்சியாளரிடம் உற்றமைந்திருக்கும்.

(7) வாரியமானது, (5) ஆம் உட்பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்காக அறிவிப்பைக் கொடுத்திருக்கிறவிடத்து, மேம்பாட்டாளர், வாரியத்தின் முன் ஒப்பேற்புக்குப் பிறகு, அத்தகைய ஒப்பேற்பை வழங்குவதற்காக வாரியத்தால் தகுமையானவரெனக் காணப்படுகிற நபர் எவருக்கும், அவருடைய ஒப்பேற்புக் கடிதத்தை மாற்றம் செய்யலாம்.

(8) ஆட்சியாளரை அமர்த்துகிற ஆணையின் நோக்கமானது நிறைவேற்றப்பட்டுள்ளதாக அல்லது எந்தக் காரணத்திற்காகவேனும் அமர்த்துகை ஆணை செல்லாற்றலில் இருப்பது விரும்பத்தகாததாக இருப்பதாக வாரியத்திற்கு எந்த நேரத்திலும் தோன்றுமாயின், வாரியம் அந்த ஆணையை அறவு செய்யலாம் மற்றும் அதன்பேரில் அந்த ஆட்சியாளரிடமிருந்து, சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேலாண்மை நீக்கப்பட்டுவிடும். மேலும், வாரியத்தால் பிறவாறாகப் பணிக்கப்பட்டாலன்றி, ஆட்சியாளர் அமர்த்தப்படும் தேதிக்கு உடன் முன்பு, மேம்பாட்டாளராக இருக்கிற எந்த நபரிடம் அது உற்றமைந்திருந்ததோ அவரிடம் மீண்டும் உற்றமைந்திருக்கும்.

(9) Where the Board suspends the letter of approval, under this section, in respect of any Developer, the following provisions shall apply, namely:

(a) the Board shall invite applications for transferring the letter of approval of the Developer, whose approval has been suspended and select the person or persons, in accordance with the procedure as may be prescribed, to whom the letter of approval of the Developer in the Special Economic Zone may be transferred;

(b) upon selection of person or persons under sub-clause (a), the Board may, by notice in writing, require the Developer to transfer his letter of approval in a Special Economic Zone to the person or persons so selected and thereupon the Developer shall transfer his interests, rights and liabilities in the Special Economic Zone to any of the persons (hereafter in this section referred to as the "transferee") who has been selected by the Board on such terms and conditions and consideration as may be agreed upon between the Developer and the transferee;

(c) all the rights, duties, obligations and liabilities of the Developer, on and from the date of suspension of letter of approval or on and from the date, if earlier, on which his letter of approval in the Special Economic Zone of the Developer has been transferred to the transferee, shall cease absolutely except for any liabilities which have accrued prior to that date;

(d) the Board may make such interim arrangements in regard to the operation of the Special Economic Zone as may be considered appropriate;

(e) the Administrator shall exercise such powers and discharge such functions as the Board may direct.

(9) வாரியமானது, இந்த உட்பிரிவின்படி, மேம்பாட்டாளர் எவரையும் பொறுத்து ஒப்பேற்புக் கடிதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறவிடத்து, பின்வரும் வகையங்கள் பொருந்தும், அதாவது:—

(அ) எந்த மேம்பாட்டாளரின் ஒப்பேற்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதோ அந்த மேம்பாட்டாளரின் ஒப்பேற்புக் கடிதத்தை மாற்றல் செய்வதற்காக, வாரியமானது விண்ணப்பங்களைக் கோரிப்பெற்று சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மேம்பாட்டாளரின் ஒப்பேற்புக் கடிதம், வகுத்துரைக்கப்படலாகும் நடைமுறைகளுக்கு இணங்க, எந்த நபர் அல்லது நபர்களுக்கு மாற்றம் செய்யப்படலாகுமோ அந்த நபர் அல்லது நபர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்;

(ஆ). (அ) உட்கூறின்படி நபர் அல்லது நபர்களைத் தேர்ந்தெடுப்பதன்பேரில், வாரியமானது, எழுத்து வடிவிலான அறிவிப்பு வாயிலாக, சிறப்புப் பொருளாதார மண்டலத்திலுள்ள மேம்பாட்டாளரை அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் அல்லது நபர்களுக்குத் தன்னுடைய ஒப்பேற்புக் கடிதத்தை மாற்றுமாறு கோரலாம், மேலும் அதன்பேரில் மேம்பாட்டாளர், சிறப்புப் பொருளாதார மண்டலத்திலுள்ள தன்னுடைய உரித்தங்களையும், உரிமைகளையும், கடப்பாடுகளையும் வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களில், (இந்தப் பிரிவில் இதன்பின்பு, ‘‘உரிமை மாற்றம் பெறுபவர்’’ என்று சுட்டப்படுவார்) எவருக்கும், மேம்பாட்டாளரும் உரிமை மாற்றம் பெறுபவரும் உடன்படலாகும் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் மற்றும் மறுபயனின்பேரில், மாற்றல் செய்தல் வேண்டும்;

(இ) மேம்பாட்டாளரின் உரிமைகள், கடமைகள், கடமைப்பாடுகள், கடப்பாடுகள் ஆகிய அனைத்தும், ஒப்பேற்புக் கடிதம் தற்காலிகமாக நீக்கறவு செய்யப்பட்ட தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் அல்லது முந்தியதாக இருப்பின், மேம்பாட்டாளரின் சிறப்புப் பொருளாதார மண்டலத்திலுள்ள ஒப்பேற்புக் கடிதம், உரிமை மாற்றம் பெறுபவருக்கு மாற்றம் செய்யப்பட்ட தேதியன்றும் அதுமுதற்கொண்டும், அந்தத் தேதிக்கு முன்பு வந்தடைந்த கடப்பாடுகள் எவற்றுக்காகவும் தவிர, முழுமையாக இல்லாது போகும்;

(ஈ) வாரியமானது, சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் செயற்பாடு குறித்து, பொருத்தமெனக் கருதலாகும் இடைக்கால ஏற்பாடுகளைச் செய்யலாம்;

(உ) ஆட்சியாளர், வாரியம் பணிக்கலாகும் அதிகாரங்களைச் செலுத்துதலும் அலுவற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

(10) The Board may, in order to promote export or to protect the interest of Units or in the public interest, issue such directions or formulate such scheme as it may consider necessary for operation of the Special Economic Zone.

CHAPTER IV

DEVELOPMENT COMMISSIONER

Development Commissioner.

11. (1) The Central Government may appoint any of its officers not below the rank of Deputy Secretary to the Government of India as the Development Commissioner of one or more Special Economic Zones.

(2) The Central Government may appoint such officers and other employees as it considers necessaryto assist the Development Commissioner in the performance of his functions in the Special Economic Zones established by a Developer (other than the Central Government) under this Act on such terms and conditions as it deems fit.

(3) Every Development Commissioner, officer and other employee shall be entitled to such salary and allowances and subject to such terms and conditions of service in respect of leave, pension, provident fund and other matters as may, from time to time, be specified by the Central Government.

Functions of Development Commissioner.

12. (1) Every Development Commissioner shall take all steps in order to discharge his functions under this Act to ensure speedy development of the Special Economic Zone and promotion of exports therefrom.

(2) Without prejudice to the generality of the foregoing provisions, the Development Commissioner shall -

(a) guide the entrepreneurs for setting up of Units in the Special Economic Zone;

(b) ensure and take suitable steps for effective promotion of exports from the Special Economic Zone;

(10) வாரியமானது, ஏற்றுமதியை மேம்படுத்தும் பொருட்டு அல்லது அலகுகளின் உரித்தத்தைப் பாதுகாக்கும் பொருட்டு அல்லது பொதுநலனின் பொருட்டு சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் செயற்பாட்டிற்காக, அது தேவையெனக் கருதலாகும் பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம் அல்லது திட்டத்தை வகுக்கலாம்.

அத்தியாயம் IV

மேம்பாட்டு ஆணையர்

மேம்பாட்டு ஆணையர்.

11. (1) மைய அரசானது, இந்திய அரசின் துணைச் செயலர் படிநிலைக்குக் குறையாத அதன் அலுவலர்களில் எவரையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் மேம்பாட்டு ஆணையராக அமர்த்தலாம்.

(2) மைய அரசானது, தான் பொருத்தமெனக் கொள்ளலாகும் வரையுரைகளின் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், இந்தச் சட்டத்தின்படி (மைய அரசு அல்லாத பிற) மேம்பாட்டாளர் ஒருவரால் நிறுவியமைக்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தனது அலுவற்பணிகளைப் புரிகையில் மேம்பாட்டு ஆணையருக்கு உதவுவதற்குத் தேவையெனத் தான் கருதுகிற அலுவலர்களையும் பிற வேலைபெறுநர்களையும் அமர்த்தலாம்.

(3) மேம்பாட்டு ஆணையர், அலுவலர், பிற வேலைபெறுநர் ஆகிய ஒவ்வொருவரும், மைய அரசால், அவ்வப்போது, குறித்துரைக்கப்படலாகும் வரையூதியத்திற்கும் படித்தொகைகளுக்கும் உரிமையுடையவராவார் மற்றும் விடுப்பு, ஓய்வூதியம், எதிர்கால வைப்பு நிதியம் மற்றும் பிற பொருட்பாடுகள் பொறுத்து, மைய அரசால் குறித்துரைக்கப்படலாகும் வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டவராவார்.

மேம்பாட்டு ஆணையரின் அலுவற்பணிகள்.

12. (1) மேம்பாட்டு ஆணையர் ஒவ்வொருவரும், சிறப்புப் பொருளாதார மண்டலத்தை விரைந்து மேம்படுத்துவதையும் அதிலிருந்தான ஏற்றுமதியை ஊக்குவிப்பதையும் உறுதி செய்வதற்காக, இந்தச் சட்டத்தின்படி தனது அலுவற்பணிகளை ஆற்றும் பொருட்டு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

(2) முன்சென்ற வகையங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, மேம்பாட்டு ஆணையர்—

(அ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அலகுகளை நிறுவுவதற்கு தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டுதல் வேண்டும்;

(ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலத்திலிருந்து ஏற்றுமதிகளைத் திறம்பட ஊக்குவிப்பதை உறுதிப்படுத்தி, பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்;

(c) ensure proper co-ordination with the Central Government or State Government Departments concerned or agencies with respect to, or for the purposes, of clauses (a) and (b);

(d) monitor the performance of the Developer and the Units in a Special Economic Zone;

(e) discharge such other functions as may be assigned to him by the Central Government under this Act or any other law for the time being in force; and

(f) discharge such other functions as may be delegated to him by the Board

(3) Every Development Commissioner shall be overall in-charge of the Special Economic Zone and shall exercise administrative control and supervision over the officers and employees appointed under sub-section (2) of section 11 (including the officials deputed to such Special Economic Zone) to discharge any of the functions under this Act.

(4) Without prejudice to the provisions of sub-sections (1) to (3), every Development Commissioner shall discharge such functions and exercise such powers as may be delegated to him by a general or special order by the Central Government or the State Government concerned, as the case may be.

(5) Every Development Commissioner may call for such information from a Developer or Unit from time to time as may be necessary to monitor the performance of the Developer or the Unit, as the case may be.

(6) The Development Commissioner may delegate any or all of his powers or functions to any of the officers employed under him.

(இ). (அ) மற்றும் (ஆ) கூறுகளைப் பொறுத்து அல்லது அதன் நோக்கங்களுக்காக, மைய அரசு அல்லது மாநில அரசின் தொடர்புடைய துறைகளுடன் அல்லது முகவாண்மைகளுடன் உரியவாறு ஒத்துழைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்;

(ஈ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேம்பாட்டாளரின் மற்றும் அலகுகளின் செயல் நிறைவேற்றங்களைக் கண்காணித்தல் வேண்டும்;

(உ) இந்தச் சட்டத்தின்படி அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற ஏதேனும் சட்டத்தின்படி மைய அரசால் அவருக்குக் குறித்தளிக்கப்படலாகும் பிற அலுவற்பணிகளை ஆற்றுதல் வேண்டும்; மற்றும்

(ஊ) வாரியத்தால் அவருக்கு ஒப்படைவு செய்யப்படலாகும் பிற அலுவற்பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

(3) மேம்பாட்டு ஆணையர் ஒவ்வொருவரும், சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பாளராக இருப்பார் மற்றும் இந்தச் சட்டத்தின்படி அலுவற்பணிகளில் எதனையும் ஆற்றுவதற்காக (அத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு மாற்றுப்பணிக்கென அனுப்பப்பட்ட அலுவலர்கள் உள்ளடங்கலாக) 11 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி அமர்த்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் வேலைபெறுநர்களின் மீது நிருவாகக் கட்டுப்பாட்டையும் கண்காணிப்பையும் செலுத்துதல் வேண்டும்.

(4). (1) முதல் (3) வரையிலான உட்பிரிவுகளின் வகையங்களுக்குக் குந்தகமின்றி மேம்பாட்டு ஆணையர் ஒவ்வொருவரும், மைய அரசால் அல்லது, நேர்விற்கேற்ப, தொடர்புடைய மாநில அரசால், பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக, அவரிடம் ஒப்படைவு செய்யப்படலாகும் அலுவற்பணிகளை ஆற்றுதலும் அதிகாரங்களைச் செலுத்துதலும் வேண்டும்.

(5)மேம்பாட்டு ஆணையர் ஒவ்வொருவரும், மேம்பாட்டாளரின் அல்லது நேர்விற்கேற்ப, அலகின் செயல்நிறைவேற்றத்தைக் கண்காணிப்பதற்குத் தேவைப்படலாகும் தகவலை, அப்போதைக்கப்போது மேம்பாட்டாளரிடமிருந்து அல்லது அலகிடமிருந்துக் கோரலாம்.

(6) மேம்பாட்டு ஆணையர், தன்னால் வேலைக்கமர்த்தப்படும் அலுவலர்களில் எவருக்கும் தன்னுடைய அதிகாரங்கள் அல்லது அலுவற்பணிகள் எதனையும் அல்லது அனைத்தையும் ஒப்படைவு செய்யலாம்.

CHAPTER V

SINGLE WINDOW CLEARANCE

Constitution of Approval Committee.

13. (1) The Central Government shall,

(a) in the case of existing Special Economic Zones, within six months from the date of commencement of this Act;

(b) in case of other Special Economic Zones established after the commencement of this Act, within six months from the date of establishment of such Special Economic Zone,

by notification, constitute a Committee for every Special Economic Zone, to be called the Approval Committee to exercise the powers and perform the functions specified in section 14.

(2) Every Approval Committee shall consist of

(a) the Development Commissioner — Chairperson, *ex officio*;

(b) two officers of the Central Government to be nominated by that Government — Members, *ex officio*;

(c) two officers of the Central Government to be nominated by that Government to represent the Ministry or Department dealing with revenue — Members, *ex officio*;

(d) one officer of the Central Government to be nominated by that Government to represent the Ministry or Department dealing with economic affairs (financial services) — Member, *ex officio*;

(e) two officers of the State Government concerned to be nominated by that State Government — Members, *ex officio*;

(f) a representative of the Developer concerned — Special invitee.

அத்தியாயம் V

ஒற்றைச் சாளரத் தடைநீக்கம்

13. (1) மைய அரசு,— ஒப்பேற்புக் குழுவை அமைத்துரு–வாக்குதல்.

(அ) நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் பொறுத்த நேர்வில், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள்;

(ஆ) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பிறகு நிறுவியமைக்கப்பட்ட பிற சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் பொறுத்த நேர்வில், அத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவியமைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள்,

அறிவிக்கை வாயிலாக, 14 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், அலுவற்பணிகளைப் புரிவதற்கும், ஒப்பேற்புக் குழு என்றழைக்கப்படும் ஒரு குழுவினை, சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒவ்வொன்றுக்கும் அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) ஒப்பேற்புக் குழு ஒவ்வொன்றும்,—

(அ) மேம்பாட்டு ஆணையரைப் பதவிவழித் தலைமையராகவும்;

(ஆ) மைய அரசால் பெயர் குறித்தமர்த்தப்படும் அந்த அரசின் இரண்டு அலுவலர்களைப் பதவிவழி உறுப்பினர்களாகவும்;

(இ) மைய அரசால் பெயர் குறித்தமர்த்தப்பட்டு வருவாயைக் கையாளுகிற அமைச்சகத்தையோ துறையையோ சார்பாற்றம் செய்கிற அந்த அரசின் இரண்டு அலுவலர்களைப் பதவிவழி உறுப்பினர்களாகவும்;

(ஈ) மைய அரசால் பெயர் குறித்தமர்த்தப்பட்டு, பொருளாதார விவகாரங்களைக் (நிதிச் சேவைகள்) கையாளுகிற அமைச்சகத்தையோ துறையையோ சார்பாற்றம் செய்கிற அந்த அரசின் அலுவலர் ஒருவரைப் பதவிவழி உறுப்பினராகவும்;

(உ) மாநில அரசால் பெயர் குறித்தமர்த்தப்பட்டு, தொடர்புடைய அந்த மாநில அரசின் இரண்டு அலுவலர்களைப் பதவிவழி உறுப்பினர்களாகவும்;

(ஊ) தொடர்புடைய மேம்பாட்டாளரின் சார்பாற்றுநர் ஒருவரைச் சிறப்பு அழைப்பாளராகவும்

கொண்டதாக இருக்கும்.

(3) For the purpose of exercising its powers and performing its functions, the Approval Committee may invite to its meetings, such persons as the Committee deems fit, whose assistance or advice it may consider necessary.

(4) Every Approval Committee shall meet at such times and places as it considers necessary and shallhave the power to regulate its own procedure.

(5) One-half of the total Members of the Approval Committee shall form a quorum, and all the acts of the Approval Committee shall be decided by a general consensus of the Members present:

Provided that in case the Approval Committee is unable to decide any matter by a general consensus, such matter shall stand referred to the Board of Approval for its decision.

(6) No act of the Approval Committee shall be called in question on the ground merely of existence of any vacancy in, or any defect in the constitution of, the Approval Committee.

(7) All orders and decisions of the Approval Committee and all other communications issued by it shall be authenticated by the signature of the Chairperson or any other member as may be authorised by the Approval Committee in this behalf.

(8) The term of office of an *ex officio* Member shall come to an end as soon as he ceases to hold office by virtue of which he was so nominated.

Powers and functions of Approval Committee.

14. (1) Every Approval Committee may discharge the functions and exercise the powers in respect of the following matters, namely:

(a) approve the import or procurement of goods from the Domestic Tariff Area, in the Special Economic Zone for carrying on the authorised operations by a Developer;

(3) தனது அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும் அலுவற்பணிகளைப் புரிவதற்காகவும், ஒப்பேற்புக் குழுவானது, தான் பொருத்தமெனக் கொள்ளுகிற எந்த நபருடைய உதவி அல்லது அறிவுரை தேவையெனத் தான் கருதக்கூடுமோ, அந்த நபர்களைத் தனது கூட்டங்களுக்கு அழைக்கலாம்.

(4) ஒப்பேற்புக் குழு ஒவ்வொன்றும், அது தேவையெனக் கருதுகிற நேரங்களிலும் இடங்களிலும் கூடுதல் வேண்டும். மற்றும் தன்னுடைய நடைமுறையை முறைப்படுத்திக் கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

(5) ஒப்பேற்புக் குழுவின் மொத்த உறுப்பினர்களின் ஒரு பாதியினர், குறைவெண்ணாக அமைதல் வேண்டும் மற்றும் ஒப்பேற்புக் குழுவின் செயல்கள் அனைத்தும், வந்திருக்கும் உறுப்பினர்களின் பொதுக் கருத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: பொதுக் கருத்து வாயிலாக பொருட்பாடு எதனையும் தீர்மானிப்பதற்கு ஒப்பேற்புக் குழு இயலாதிருக்கிற நேர்வில், அத்தகைய பொருட்பாடானது, அதனுடைய முடிபுக்காக, ஒப்பேற்பு வாரியத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(6) ஒப்பேற்புக் குழுவின் செயல் எதுவும், ஒப்பேற்புக் குழுவில் காலியிடம் எதுவும் அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் உள்ளது என்ற காரணத்தின் பேரில் மட்டுமே, எதிர்த்து வாதிடப்படுதல் ஆகாது.

(7) ஒப்பேற்புக் குழுவின் ஆணைகள் மற்றும் முடிபுகள் அனைத்தும் மற்றும் அதனால் வழங்கப்பட்ட பிற தகவல்கள் அனைத்தும், தலைமையரின் அல்லது இதன் பொருட்டு ஒப்பேற்புக் குழுவால் அதிகாரமளிக்கப்படலாகும் பிற உறுப்பினர் எவரின் கையொப்பத்துடன் உறுதிச்சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

(8) பதவிவழி உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலமானது, எந்தப் பதவி காரணமாக அவர் பெயர் குறித்தமர்த்தப்பட்டாரோ அந்தப் பதவியை வகிப்பதினின்று அவர் நீங்கிய உடனேயே முடிவுக்கு வரும்.

ஒப்பேற்புக் குழுவின் அதிகாரங்களும் அலுவற்பணிகளும்.

14. (1) ஒப்பேற்புக் குழு ஒவ்வொன்றும், பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்து அலுவற்பணிகளை ஆற்றலாம் மற்றும் அதிகாரங்களைச் செலுத்தலாம், அவையாவன :—

(அ) மேம்பாட்டாளரால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகள் நடத்தப்பெறுவதற்காகச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள உள்நாட்டு சுங்க வரையிடத்திலிருந்து சரக்குகளை இறக்குமதி செய்வதற்கோ பெறுவதற்கோ ஒப்பேற்பு அளித்தல்;

(b) approve the providing of services by a service provider, from outside India, or from the Domestic Tariff Area, for carrying on the authorised operations by the Developer, in the Special Economic Zone;

(c) monitor the utilisation of goods or services or warehousing or trading in the Special Economic Zone;

(d) approve, modify or reject proposals for setting up Units for manufacturing or renderingservices or warehousing or trading in the Special Economic Zone [other than the grant of licence under clause (e) of sub-section (2) of section 9] in accordance withthe provisions of sub-section (8) of section 15:

Provided that where the Approval Committee is unable to decide whether a particular process constitutes manufacture or not it shall refer the same to the Board of Approval for decision;

(e) allow, on receipt of approval under clause (c) of sub-section (2) of section 9, foreigncollaborations and foreign direct investments (including investments by a person outside India) for setting up a Unit;

(f) monitor and supervise compliance of conditions subject to which the letter of approval or permission, if any, has been granted to the Developer or entrepreneur; and

(g) perform such other functions as may be entrusted to it by the Central Government or the State Government concerned, as the case may be.

(2) The Approval Committee shall not discharge such functions and exercise such powers referred to in sub-section (1) in relation to a Developer, being the Central Government, as may be specified, by notification, by the Central Government:

(ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மேம்பாட்டாளரால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகள் நடத்தப் பெறுவதற்காக, இந்தியாவிற்கு வெளியேயிருந்து அல்லது உள்நாட்டுச் சுங்க வரையிடத்திலிருந்து ஒரு சேவை வழங்கியின் மூலம் சேவைகளை அளிப்பதற்கு ஒப்பேற்பளித்தல்;

(இ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சரக்குகளை அல்லது சேவைகளைப் பயன்படுத்துவதை அல்லது பண்டகச்சாலையில் வைத்திருப்பதை அல்லது வணிகஞ்செய்வதைக் கண்காணித்தல்;

(ஈ) 15 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் வகையங்களுக்கு இணங்க, சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் [9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) கூறின்படி உரிமம் வழங்குவது அல்லாத பிற] உற்பத்திக்காக அல்லது சேவைகளை வழங்குவதற்காக அல்லது பண்டக சாலையில் வைத்திருப்பதற்காக அல்லது வணிகஞ்செய்வதற்காக ஒப்பேற்பு அலகுகளை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புக்கு ஒப்பேற்பு அளித்தல், அதனை மாற்றமைவு செய்தல் அல்லது ஏற்க மறுத்தல்:

வரம்புரையாக: ஒப்பேற்புக் குழுவானது, குறிப்பிட்ட ஒரு செயல், உற்பத்தியாக அமையுமா அமையாதா என்பதைத் தீர்மானிக்க இயலாதவிடத்து, அது முடிபுக்காக அதனை ஒப்பேற்பு வாரியத்திற்குச் சாட்டியனுப்புதல் வேண்டும்;

(உ) 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) கூறின்படி ஒப்பேற்பைப் பெற்றதன்பேரில், ஓர் அலகினை ஏற்படுத்துவதற்காக அயல்நாட்டு தொடர்புறவுகள் மற்றும் (இந்தியாவிற்கு வெளியே உள்ளே நபர் ஒருவரால் செய்யப்படும் முதலீடுகள் உள்ளடங்கலான) அயல்நாட்டு நேரடி முதலீடுகளை அனுமதித்தல்;

(ஊ) எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு ஒப்பேற்புக் கடிதம் அல்லது அனுமதிக் கடிதம் எதுவும், மேம்பாட்டாளருக்கு அல்லது தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்த வரைக்கட்டுகளுக்கு இணங்கி நடப்பதைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்; மற்றும்

(எ) மைய அரசால் அல்லது நேர்விற்கேற்ப, தொடர்புடைய மாநில அரசால் அதனிடம் ஒப்படைவு செய்யப்படலாகும் பிற அலுவற்பணிகளைப் புரிதல்.

(2) ஒப்பேற்புக் குழு, மைய அரசாக இருக்கிற மேம்பாட்டாளர் தொடர்பாக, (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டு மைய அரசால் அறிவிக்கை வாயிலாக குறித்துரைக்கப்படலாகும் அலுவற்பணிகளை ஆற்றுதலோ அதிகாரங்களைச் செலுத்துதலோ ஆகாது:

Provided that till such time, the Approval Committee is constituted, the concerned Development Commissioner shall discharge all functions and exercise all powers of the Approval Committee.

Setting up of Unit.

15. (1) Any person, who intends to set up a Unit for carrying on the authorized operations in a Special Economic Zone, may submit aproposal to the Development Commissioner concerned in such form and manner containing such particulars as may be prescribed:

Provided that an existing Unit shall be deemed to have been set up in accordance with the provisionsof this Act and such Units shall not require approval under this Act.

(2) On receipt of the proposal under sub-section (1), the Development Commissioner shall submit the same to the Approval Committee for its approval.

(3) The Approval Committee may, either approve the proposal without modification, or approve theproposal with modifications subject to such terms and conditions as it may deem fit to impose, or reject the proposal in accordance with the provisions of sub-section (8):

Provided that in case of modification or rejection of a proposal, the Approval Committee shall afford a reasonable opportunity of being heard to the person concerned and after recording the reasons, either modify or reject the proposal.

(4) Any person aggrieved by an order of the Approval Committee, made under sub-section (3), may prefer an appeal to the Board within such time as may be prescribed.

(5) No appeal shall be admitted if it is preferred after the expiry of the time prescribed therefor:

Provided that an appeal may be admitted after the expiry of the period prescribed therefor if the appellant satisfies the Board that he had sufficient cause for not preferring the appeal within the prescribed time.

வரம்புரையாக: ஒப்பேற்புக் குழு அமைத்துருவாக்கப்படுகிற காலம் வரையில் தொடர்புடைய மேம்பாட்டு ஆணையர், ஒப்பேற்புக் குழுவின் அலுவற்பணிகள் அனைத்தையும் ஆற்றுவார்; மற்றும் அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்துவார்.

15. (1) சிறப்புப் பொருளாதார மண்டலமொன்றில் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அலகு ஒன்றினை நிறுவக் கருதுகிற நபர் எவரும், தொடர்புடைய மேம்பாட்டு ஆணையருக்கு, வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும், வகுத்துரைக்கப்படும் விவரங்கள் கொண்டதாகவும் உள்ள செயற்குறிப்பு ஒன்றைப் பணிந்தனுப்பலாம்: அலகினை நிறுவுதல்.

வரம்புரையாக: நிலவுறும் அலகு, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கிணங்க, நிறுவப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் அத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டல அலகுகளுக்கு இந்தச் சட்டத்தின்படி ஒப்புதல் தேவைப்படாது.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி செயற்குறிப்பு ஒன்றைப் பெற்றதன் பேரில், மேம்பாட்டு ஆணையர், ஒப்பேற்புக் குழுவிற்கு அதன் ஒப்பேற்புக்காக அதனைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(3) ஒப்பேற்புக் குழு, (8) ஆம் உட்பிரிவின் வகையங்களுக்கு இணங்க மாற்றமைவின்றி அந்தச் செயற்குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கலாம் அல்லது தான் சுமத்துவதற்குப் பொருத்தமெனக் கொள்ளலாகும் வரையுரைகளுக்கும், வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, மாற்றமைவுகளுடன் அந்தச் செயற்குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கலாம் அல்லது அந்தச் செயற்குறிப்பை ஏற்க மறுக்கலாம்:

வரம்புரையாக: செயற்குறிப்பொன்றை மாற்றமைவு செய்கிற நேர்வில், அல்லது ஏற்க மறுக்கிற நேர்வில், ஒப்பேற்புக் குழுவானது, தொடர்புடைய நபருக்குக் கேட்கப்படுவதற்கு ஒரு நியாயமான வாய்ப்பினை அளித்தல் வேண்டும் மற்றும் காரணங்களைப் பதிவு செய்த பிறகு அந்தச் செயற்குறிப்பை மாற்றமைவு செய்தலோ ஏற்க மறுத்தலோ வேண்டும்.

(4). (3) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒப்பேற்புக் குழுவின் ஆணையினால் குறையுற்ற நபர் எவரும், வகுத்துரைக்கப்படும் காலஅளவிற்குள் வாரியத்திற்கு மேல்முறையீடொன்றை முன்னிடலாம்.

(5) மேல்முறையீடு எதுவும், அதற்காக வகுத்துரைக்கப்பட்ட காலஅளவு முடிவடைந்த பிறகு, அது முன்னிடப்பட்டிருந்தால் ஏற்றுக் கொள்ளப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்குள் மேல்முறையீட்டை முன்னிடாததற்குப் போதிய காரணம் தனக்கு இருக்கிறது என்பதாக வாரியம் தெளிவுறக்காணுமாறு மேல்முறையீட்டாளர் செய்வாராயின், அதற்காக வகுத்துரைக்கப்பட்ட காலஅளவு முடிவடைந்த பிறகு மேல்முறையீடொன்று ஏற்றுக் கொள்ளப்படலாம்.

(6) Every appeal made under sub-section (4) shall be in such form and shall be accompanied by a copy of the order appealed against and by such fees as may be prescribed.

(7) The procedure for disposing of an appeal shall be such as may be prescribed:

Provided that before disposing of an appeal, the appellant shall be given a reasonable opportunity of being heard.

(8) The Central Government may prescribe,

(a) the requirements (including the period for which a Unit may be set up) subject to which the Approval Committee shall approve, modify or reject any proposal referred to in sub-section (3);

(b) the terms and conditions, subject to which the Unit shall undertake the authorised operations and its obligations and entitlements.

(9) The Development Commissioner may, after approval of the proposal referred to in sub-section (3), grant a letter of approval to the person concerned to set up a Unit and undertake such operations which the Development Commissioner may authorise and every such operation so authorised shall be mentioned in the letter of approval.

Cancellation of letter of approval to entrepreneur.

16. (1) The Approval Committee may, at any time, if it has any reason or cause to believe that the entrepreneur has persistently contravened any of the terms and conditions or its obligations subject to which the letter of approval was granted to the entrepreneur, cancel the letter of approval:

(6). (4) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட மேல்முறையீடு ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் இருத்தலும், எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட ஆணையின் படி ஒன்றுடனும் வகுத்துரைக்கப்படும் கட்டணத்துடனும் சேர்ந்து செய்யப்படுதலும் வேண்டும்.

(7) மேல்முறையீடொன்றை முடிவு செய்வதற்கான நடைமுறையானது, வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக: மேல்முறையீடொன்றை முடிவு செய்வதற்கு முன்பு, மேல்முறையீட்டாளருக்குக் கேட்கப்படுவதற்குத் தகுமானதொரு வாய்ப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(8) மைய அரசானது,—

(அ) (எந்தக் காலஅளவுக்கு அலகு ஒன்று நிறுவப்படலாமோ அந்தக் காலஅளவு உள்ளடங்கலாக) எந்த வேண்டுறுத்தங்களுக்கு உட்பட்டு, (3) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட செயற்குறிப்பு எதற்கும் ஒப்பேற்புக் குழு ஒப்பேற்பு அளித்தல் வேண்டுமோ, அதனை மாற்றமைவு செய்தல் வேண்டுமோ அல்லது ஏற்க மறுத்தல் வேண்டுமோ அந்த வேண்டுறுத்தல்களையும்;

(ஆ) எந்த வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, ஓர் அலகானது அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்த வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளையும், அதன் கடமைப்பாடுகள் மற்றும் உரிமைப்பாடுகளையும்

வகுத்துரைக்கலாம்.

(9) மேம்பாட்டு ஆணையர், (3) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட செயற்குறிப்பிற்கு ஒப்பேற்பு அளித்த பின்பு, ஓர் அலகினை நிறுவுவதற்கும், மேம்பாட்டு ஆணையர் அதிகாரமளிக்கலாகும் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கும், தொடர்புடைய நபருக்கு ஒப்பேற்புக் கடிதம் ஒன்றை வழங்கலாம் மற்றும் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய செயற்பாடு ஒவ்வொன்றும், ஒப்பேற்புக் கடிதத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

தொழில் முனைவோருக்கான ஒப்பேற்புக் கடிதத்தை அறவு செய்தல்.

16. (1) ஒப்பேற்புக் குழுவானது, எந்த வரையுரைகள், வரைக்கட்டுகள் அல்லது கடமைப்பாடுகளுக்கு உட்பட்டு, தொழில் முனைவோருக்கு ஒப்பேற்புக் கடிதம் வழங்கப்பட்டதோ அந்த வரையுரைகள், வரைக்கட்டுகள் அல்லது கடமைப்பாடுகளில் எவற்றையும், தொழில் முனைவோர் தொடர்ந்து மீறியிருக்கிறார் என்று நம்புவதற்குக் காரணம் பெற்றிருந்தால் அல்லது நம்புமாறு செய்யப்பட்டிருந்தால், அந்த ஒப்பேற்புக் கடிதத்தை அறவு செய்யலாம்:

Provided that no such letter of approval shall be cancelled unless the entrepreneur has been afforded a reasonable opportunity of being heard.

(2) Where the letter of approval has been cancelled under sub-section (1), the Unit shall not, from the date of such cancellation, be entitled to any exemption, concession, benefit or deduction available to it, being a Unit, under this Act.

(3) Without prejudice to the provisions of this Act, the entrepreneur whose letter of approval has been cancelled under sub-section (1), shall remit, the exemption, concession, drawback and any other benefit availed by him in respect of the capital goods, finished goods lying in stock and unutilised raw materials relatable to his Unit, in such manner as may be prescribed.

(4) Any person aggrieved by an order of the Approval Committee made under sub-section (1), may prefer an appeal to the Board within such time as may be prescribed.

(5) No appeal shall be admitted if it is preferred after the expiry of the time prescribed therefor:

Provided that an appeal may be admitted after the expiry of the period prescribed therefor if the appellant satisfies the Board that he had sufficient cause for not preferring the appeal within the prescribed time.

(6) Every appeal made under sub-section (4) shall be in such form and shall be accompanied by a copy of the order appealed against and by such fees as may be prescribed.

(7) The procedure for disposing of an appeal shall be such as may be prescribed:

வரம்புரையாக: தொழில் முனைவோருக்கு விசாரிக்கப்படுவதற்குத் தகுமானதொரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய ஒப்பேற்புக் கடிதம் எதுவும், அறவு செய்யப்படுதல் ஆகாது.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி ஒப்பேற்புக் கடிதம் அறவு செய்யப்படும்போது, அவ்வாறு அறவு செய்யப்பட்ட தேதியிலிருந்து, அந்த அலகானது, இந்தப் பிரிவின்படியான அலகாக அது இருந்தாற்போன்று அதற்குக் கிடைக்கத்தக்க விலக்கு, சலுகை, நலன் அல்லது கழிவு எதற்கும் அது உரிமைக் கொண்டது ஆகாது.

(3) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குக் குந்தகமின்றி, (1) ஆம் உட்பிரிவின்படி எந்தத் தொழில் முனைவோரின் ஒப்பேற்புக் கடிதம் அறவு செய்யப்பட்டதோ அந்தத் தொழில் முனைவோர், அவரது அலகு தொடர்பான மூலதனச் சரக்குகள், இருப்பில் வைக்கப்பட்டுள்ள முழுமைபெற்ற சரக்குகள், பயன்படுத்தப்படாத மூலப் பொருட்கள் ஆகியவற்றைப் பொறுத்து அவர் பயன்படுத்திக் கொண்ட விலக்கு, சலுகை, தொகைக்கழிவு, ஏதேனும் பிற நலன் ஆகியவற்றை வகுத்துரைக்கப்படலாகும் முறையில் திருப்பியளித்தல் வேண்டும்.

(4). (1) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒப்பேற்புக் குழுவின் ஆணையினால் குறையுற்ற நபர் எவரும், வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள் வாரியத்திற்கு மேல்முறையீடொன்றை முன்னிடலாம்.

(5) மேல்முறையீடு எதுவும், அதற்காக வகுத்துரைக்கப்பட்ட காலஅளவு முடிவடைந்தபிறகு, முன்னிடப்படுமாயின் அது ஏற்றுக் கொள்ளப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: மேல்முறையீட்டாளர், வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்குள் மேல்முறையீட்டை முன்னிடப்படாததற்கு தனக்குப் போதிய காரணம் இருந்தது என வாரியம் தெளிவுறக்காணுமாறு செய்வாராயின், அதற்காக வகுத்துரைக்கப்பட்ட காலஅளவு முடிவடைந்த பிறகு, மேல்முறையீடானது ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(6). (4) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட மேல்முறையீடு ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்திலிருத்தலும், எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட ஆணையின் படி ஒன்றுடனும், வகுத்துரைக்கப்படும் கட்டணத்துடனும் சேர்ந்து செய்யப்படுதலும் வேண்டும்.

(7) மேல்முறையீடொன்றை முடிவு செய்வதற்கான நடைமுறையானது, வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்:

Provided that before disposing of an appeal, the appellant shall be given a reasonable opportunity of being heard.

Setting up and operation of Offshore Banking Unit.

17. (1) An application for setting up and operation of an Offshore Banking Unit in a Special Economic Zone may be made to the Reserve Bank in such form and manner as may be prescribed.

(2) On receipt of an application under sub-section (1), the Reserve Bank shall, if it is satisfied that the applicant fulfils all the conditions specified under sub-section (3), grant permission to such applicant for setting up and operation of an Offshore Banking Unit.

(3) The Reserve Bank may, by notification, specify the terms and conditions subject to which an Offshore Banking Unit may be set up and operated in the Special Economic Zone.

Setting up of International Financial Services Centre.

18. (1) The Central Government may approve the setting up of an International Financial Services Centre in a Special Economic Zone and prescribe the requirements for setting up and operation of such Centre:

Provided that the Central Government shall approve only one International Financial Services Centre in a Special Economic Zone.

(2) The Central Government may, subject to such guidelines as maybe framed by the Reserve Bank, he Securities and Exchange Board of India, the Insurance Regulatory and Development Authority and such other concerned authorities, as it deems fit, prescribe the requirements for setting up and the terms and conditions of the operation of Units in an International Financial Services Centre.

Single application form, return, etc

19. Notwithstanding anything contained in any other law for the time being in force, the Central Government may, if required,

வரம்புரையாக: மேல்முறையீடொன்றை முடிவு செய்வதற்கு முன்பு, மேல்முறையீட்டாளருக்குக் கேட்கப்படுவதற்குத் தகுமானதொரு வாய்ப்புக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

கடல்இடஅமைவு வங்கியியல் அலகை நிறுவுதலும் செயற்படுத்துதலும்.

17. (1) சிறப்புப் பொருளாதார மண்டலமொன்றில் கடல்இடஅமைவு வங்கியியல் அலகு ஒன்றை நிறுவிச் செயற்படுத்துவதற்கான விண்ணப்பம் ஒன்று, வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் முறையிலும் சேம வங்கிக்குச் செய்யப்படலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பம் ஒன்றைப் பெற்றதன்பேரில், சேம வங்கியானது, (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகள் அனைத்தையும் விண்ணப்பதாரர் நிறைவேற்றியுள்ளார் என அது தெளிவுறக் காணுமாயின் கடல்இடஅமைவு வங்கியியல் அலகை நிறுவிச் செயற்படுத்துவதற்கு அந்த விண்ணப்பதாரருக்கு அனுமதி அளித்தல் வேண்டும்.

(3) சேம வங்கியானது, அறிவிக்கை வாயிலாக, எந்த வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் கடல்இடஅமைவு வங்கியியல் அலகை நிறுவிச் செயற்படுத்தப்படலாம் என்பதைக் குறித்துரைக்கலாம்.

பன்னாட்டு நிதிச் சேவைகள் மையத்தை நிறுவுதல்.

18. (1) மைய அரசானது, சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றில் பன்னாட்டு நிதிச் சேவைகள் மையத்தை நிறுவுவதற்கு ஒப்பேற்பு அளித்து, அத்தகைய மையத்தை நிறுவிச் செயற்படுத்துவதற்கான வேண்டுறுத்தங்களை வகுத்துரைக்கலாம்:

வரம்புரையாக: மைய அரசானது, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், பன்னாட்டு நிதிச் சேவைகள் மையம் ஒன்றிற்கு மட்டுமே ஒப்பேற்பு அளித்தல் வேண்டும்.

(2) மைய அரசானது, தாம் பொருத்தமெனக் கொள்ளும் சேம வங்கியால், இந்தியப் பிணையங்கள் மற்றும் பங்குமாற்ற வாரியங்களால் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு அதிகாரஅமைப்பினால் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகளினால் வனையப்படலாகும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு, பன்னாட்டு நிதிச் சேவைகள் மையத்தில் அலகுகளை நிறுவுவதற்கான வேண்டுறுத்தங்களையும், அதனைச் செயற்படுத்துவதற்கான வரையுரைகளையும், வரைக்கட்டுகளையும் வகுத்துரைக்கலாம்.

ஒற்றை விண்ணப்பப் படிவம், விவர அறிக்கை முதலியன.

19. அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசானது, தேவைப்படுமாயின்,—

(a) prescribe a single application form for obtaining any licence, permission or registration or approval by a Developer, or an entrepreneur under one or more Central Acts;

(b) authorise the Board, the Development Commissioner or Approval Committee, to exercise the powers of the Central Government on matters relating to the development of a Special Economic Zone or setting up and operation of Units;

(c) prescribe a single form for furnishing returns or information by a Developer or an entrepreneur under one or more Central Acts.

Agency to inspect.

20. Notwithstanding anything contained in any other law for the time being in force, the Central Government may, by notification, specify any officer or agency to carry out surveys or inspections for securing of compliance with the provisions of any Central Act by a Developer or an entrepreneur, as the case may be, and such officer or agency shall submit verification and compliance reports, in such manner and within such time as may be specified in the said notification.

Single enforcement officer or agency for notified offences.

21. (1) The Central Government may,by notification, specify any act or omission made punishable under any Central Act, as notified offence for the purposes of this Act.

(2) The Central Government may, by general or special order, authorise any officer or agency to be the enforcement officer or agency in respect of any notified offence or offences committed in a Special Economic Zone.

(அ) மேம்பாட்டாளரால் அல்லது தொழில் முனைவோரால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மையச் சட்டங்களின்படி உரிமம், அனுமதி அல்லது பதிவு அல்லது ஒப்பேற்பு எதுவும் பெறப்படுவதற்கான ஒற்றை விண்ணப்பப் படிவத்தை வகுத்துரைக்கலாம்;

(ஆ) ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை மேம்படுத்துவது அல்லது அலகுகளை நிறுவிச் செயற்படுத்துவது தொடர்பான பொருட்பாடுகளின் பேரில், மைய அரசின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கு, வாரியத்திற்கு, மேம்பாட்டு ஆணையருக்கு அல்லது ஒப்பேற்புக் குழுவுக்கு அதிகாரமளிக்கலாம்;

(இ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மைய சட்டங்களின்படி ஒரு மேம்பாட்டாளரால் அல்லது தொழில் முனைவோரால் விவரஅறிக்கைகள் அல்லது தகவல் அளிக்கப்படுவதற்கான ஒற்றைப் படிவத்தை வகுத்துரைக்கலாம்.

முகமையை ஆய்வு செய்தல்.

20. அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசானது, அறிவிக்கை வாயிலாக, மையச் சட்டம் எதனின் வகையங்களுக்கும், மேம்பாட்டாளர் அல்லது, நேர்வுக்கேற்ப, தொழில் முனைவோர் இணங்கி நடப்பதை உறுதி செய்வதற்காக, பொதுவாகப் பார்வையிடுவதற்கு அல்லது ஆய்வு செய்வதற்கு அலுவலர் எவரையும் அல்லது முகமை எதனையும் குறித்துரைக்கலாம். மேலும், அத்தகைய அலுவலர் அல்லது முகமை, மேற்சொன்ன அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் முறையிலும், நேரத்திற்குள்ளும் உறுதி செய்ததற்கான மற்றும் இணங்கிநடந்ததற்கான அறிக்கைகளைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச் செயல்களுக்காக ஒரு தனிச் செயலாக்க அலுவலர் அல்லது முகமை.

21. (1) மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, மையச் சட்டம் எதனின்படியும் தண்டிக்கப்படத்தக்க செய்கை, அல்லது விடுகை எதனையும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச்செயலாகக் குறித்துரைக்கலாம்.

(2) மைய அரசு, பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அறிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல் எதனையும் அல்லது குற்றச்செயல்கள் எவற்றையும் பொறுத்து, அலுவலர் எவரையும் அல்லது முகமை எதனையும், செயலாக்க அலுவலராக அல்லது முகமையாக அதிகாரமளிக்கலாம்.

(3) Every officer or agency authorised under sub-section (2) shall have all the corresponding powers of investigation, inspection, search or seizure as is provided under the relevant Central Act in respect of the notified offences.

Investigation, inspection, search or seizure.

22. The agency or officer, specified under section 20 or section 21, may, with prior intimation to the Development Commissioner concerned, carry out the investigation, inspection, search or seizure in the Special Economic Zone or in a Unit if such agency or officer has reasons to believe (reasons to be recorded in writing) that a notified offence has been committed or is likely to be committed in the Special Economic Zone:

Provided that no investigation, inspection, search or seizure shall be carried out in a Special Economic Zone by any agency or officer other than those referred to in sub-section (2) or sub-section (3) of section 21 without prior approval of the Development Commissioner concerned:

Provided further that any officer or agency, if so authorised by the Central Government, may carry out the investigation, inspection, search or seizure in the Special Economic Zone or Unit without prior intimation or approval of the Development Commissioner.

Designated Courts to try suits and notified offences.

23. (1) The State Government, in which the Special Economic Zone is situated, may, with the concurrence of the Chief Justice of the High Court of that State, designate one or more courts —

(a) to try all suits of a civil nature arising in the Special Economic Zone; and

(b) to try notified offences committed in the Special Economic Zone.

(3).(2) ஆம் உட்பிரிவின்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும் அல்லது முகமை ஒவ்வொன்றும், அறிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல்கள் பொறுத்து, தொடர்புடைய மையச் சட்டத்தின்படி வகைசெய்யப்பட்டவாறு புலனாய்வு, ஆய்வு, சோதனை அல்லது கைப்பற்றுகைக்கான நேரிணையான அதிகாரங்கள் அனைத்தையும் உடையவர் ஆவார் அல்லது உடையது ஆகும்.

22. 20 ஆம் பிரிவின் அல்லது **21** ஆம் பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட முகமை அல்லது அலுவலர், தொடர்புடைய மேம்பாட்டு ஆணையருக்கு முன்னதாகத் தகவல் தெரிவித்து, சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட ஒரு குற்றச்செயல் செய்யப்பட்டிருக்கிறது அல்லது செய்யப்படவிருக்கிறது என்று (எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக) நம்புவதற்கு அந்த முகமை அல்லது அலுவலர் காரணம் பெற்றிருந்தால், சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அல்லது அலகில் புலனாய்வு, ஆய்வு, சோதனை அல்லது கைப்பற்றுகை செய்யலாம்: புலனாய்வு, சோதனை அல்லது கைப்பற்றுதல்.

வரம்புரையாக: தொடர்புடைய மேம்பாட்டு ஆணையரின் முன் ஒப்பேற்பு இன்றி, **21** ஆம் பிரிவின் **(2)** ஆம் உட்பிரிவில் அல்லது **(3)** ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டவை அல்லாத பிற முகமை அல்லது அலுவலர் எவராலும், சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் புலனாய்வு, ஆய்வு, சோதனை அல்லது கைப்பற்றுகை எதுவும் செய்யப்படுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: அலுவலர் எவரும் அல்லது முகமை எதுவும், மைய அரசால் அவ்வாறு அதிகாரமளிக்கப்படுமாயின், மேம்பாட்டு ஆணையருக்கு முன்னதாகத் தகவல் தெரிவிக்காமல் அல்லது அவரது ஒப்பேற்பு இல்லாமல், சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் புலனாய்வு, ஆய்வு, சோதனை அல்லது கைப்பற்றுகை செய்யலாம்.

23.(1) எந்த மாநில அரசால் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த மாநில அரசு, அந்த மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒருங்கிசைவுடன்— குறித்தபணி நீதிமன்றங்கள், உரிமை வழக்குகளையும் அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச் செயல்களையும் விசாரணை செய்தல்.

(அ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் எழுகிற குடியியல் தன்மையதான அனைத்து உரிமை வழக்குகளையும் விசாரிப்பதற்கு;

(ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல்களை விசாரிப்பதற்கு

(2) No court, other than the court designated under sub-section (1), shall try any suit or conduct the trial of any notified offence referred to in that sub-section:

Provided that the courts, in which any suit of a civil nature in a Special Economic Zone had been filed before the commencement of this Act, shall continue to try such suit after such commencement:

Provided further that the courts, in which any trial of any notified offence is being conducted before the commencement of this Act, shall continue to conduct the trial of such offence after the commencement of this Act:

Provided also that the courts competent to try any notified offence, before the commencement of this Act, shall conduct the trial in respect of such offence after the commencement of this Act until the courts have been designated under sub-section (1) and all such cases relating to such trials shall thereafter be transferred to such courts so designated which shall conduct the trial from the stage at which such cases were so transferred.

Appeal to High Court.

24. Any person aggrieved, by any decision or order of the court designated under sub-section (1) of section 23, may file an appeal to the High Court within sixty days from the date of communication of the decision or order of the courts so designated to him on any question of fact or law arising out of such orders:

Provided that the High Court may, if it is satisfied that the appellant was prevented by sufficient cause from filing an appeal within the said period, allow it to be filed within a further period not exceeding sixty days.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிமன்றங்களைக் குறித்தமர்த்தலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி குறித்தமர்த்தப்பட்ட நீதிமன்றம் அல்லாத பிற நீதிமன்றம் எதுவும், அந்த உட்பிரிவில் சுட்டப்பட்ட உரிமை வழக்கு எதனையும் விசாரித்தலோ அறிவிக்கை செய்யப்பட்டக் குற்றச்செயல் எதனின் மீதும் விசாரணை நடத்துதலோ ஆகாது:

வரம்புரையாக: எந்த நீதிமன்றங்களில், சிறப்புப் பொருளாதார மண்டலத்திலுள்ள குடியியல் தன்மையதான உரிமை வழக்கு எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு முன்னிடப்பட்டதோ அந்த நீதிமன்றங்கள், அத்தகைய தொடக்கத்திற்குப் பிறகு அந்த உரிமை வழக்கினைத் தொடர்ந்து விசாரித்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக: எந்த நீதிமன்றங்களில் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல் எதுவும் விசாரிக்கப்படுகிறதோ அந்த நீதிமன்றங்கள், அத்தகைய தொடக்கத்திற்குப் பிறகு அத்தகைய குற்றச்செயலைத் தொடர்ந்து விசாரித்தல் வேண்டும்:

இன்னும் வரம்புரையாக: இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு அறிவிக்கை செய்யப்பட்ட குற்றச்செயல் எதனையும் விசாரிப்பதற்குத் தகுதிவாய்ந்த நீதிமன்றங்கள், (1) ஆம் உட்பிரிவின்படி நீதிமன்றங்கள் குறித்துக்காட்டப்படுகிற வரையில், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு செய்யப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து, விசாரணை நடத்துதல் வேண்டும். மேலும் அத்தகைய விசாரணைகள் தொடர்பான அத்தகைய வழக்குகள் அனைத்தும், அதன்பின்பு, அவ்வாறு குறித்துக்காட்டப்படுகிற நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுதல் வேண்டும். அந்த நீதிமன்றங்கள், அந்த வழக்குகள் அவ்வாறு மாற்றப்பட்ட கட்டத்திலிருந்து அந்த விசாரணையை நடத்துதல் வேண்டும்.

உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு.

24. 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துக்காட்டப்படுகிற நீதிமன்றத்தின் முடிபு அல்லது ஆணை எதனாலும் குறையுற்ற நபர் எவரும், அவ்வாறு குறித்துக்காட்டப்படுகிற நீதிமன்றத்தின் முடிபு அல்லது ஆணை எதுவும், அவருக்கு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், அத்தகைய ஆணைகளிலிருந்து எழுகிற பொருண்மை பற்றிய வினா அல்லது சட்டம் பற்றிய வினா எதன் பேரிலும் மேல்முறையீடொன்றை உயர்நீதிமன்றத்தில் முன்னிடலாம்:

வரம்புரையாக: உயர்நீதிமன்றமானது, மேற்சொன்ன கால அளவிற்குள் மேல்முறையீடொன்றை முன்னிடுவதிலிருந்து மேல்முறையீட்டாளர் போதுமான காரணத்தால் தடுக்கப்பட்டார் என்று தெளிவுறக்காணுமாயின், அறுபது நாட்களுக்கு மேற்படாத மேலுமான காலஅளவிற்குள் அது முன்னிடப்படுவதற்கு அனுமதிக்கலாம்.

Explanation.—In section 23 and in this section "High Court" means the High Court of the State in which the Special Economic Zone is situated.

Offences by companies.

25. (1) Where an offence has been committed by a company, every person, who at the time the offence was committed was in charge of, and was responsible to, the company for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment provided for the offence, if he has proved that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where an offence has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of, any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall also be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly.

Explanation. — For the purposes of this section,—

(a) "company" means any body corporate and includes a firm or other association of individuals; and

(b) "director", in relation to a firm, means a partner in the firm.

CHAPTER VI

SPECIAL FISCAL PROVISIONS FOR SPECIAL ECONOMIC ZONES

Exemptions, drawbacks and concessions to every Developer and entrepreneur.

26. (1) Subject to the provisions of sub-section (2), every Developer and the entrepreneur shall be entitled to the following exemptions, drawbacks and concessions, namely:—

விளக்கம்:— 23 ஆம் பிரிவிலும், இந்தப் பிரிவிலும் ‘‘உயர்நீதிமன்றம்’’ என்பது, எந்த மாநிலத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த மாநிலத்தின் உயர்நீதிமன்றம் என்று பொருள்படும்.

25. (1) நிறுமமொன்றால் ஒரு குற்றச்செயல் செய்யப்பட்டிருந்து அந்தக் குற்றச்செயல் செய்யப்படுகிற நேரத்தில், அந்த நிறுமத்தின் அலுவலை நடத்தி வரும் பொறுப்பிலிருந்தவரும், அதோடு அந்த நிறுமமும், அந்தக் குற்றச்செயலைச் செய்ததாகக் கொள்ளப்படுதலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்: நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்.

வரம்புரையாக: இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அந்தக் குற்றச்செயலானது தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதாக அல்லது அத்தகைய குற்றச்செயல் செய்யப்படாமல் தடுக்க தாம் உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டதாக நபர் எவரும், மெய்ப்பிப்பாராயின், அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2). **(1)** ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்று, ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, மற்றும் அந்த நிறுமத்தின் இயக்குநரின், மேலாளரின், செயலாளரின் அல்லது பிற அலுவலரின் இசைவுடனோ அல்லது மறைமுக ஆதரவுடனோ அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்டிருக்கிறது என்று அல்லது அவர்பாலுள்ள கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுமிடத்து, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றச்செயலைச் செய்ததாகக் கொள்ளப்படுதலும், அதன்படியே நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

விளக்கம்:— இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

(அ) ‘‘நிறுமம்’’ என்பது, கூட்டுருமம் எதுவும் என்று பொருள்படும் மற்றும் நிறுவகத்தை அல்லது தனியாட்களின் கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

(ஆ) ‘‘இயக்குநர்’’ என்பது, ஒரு நிறுவகம் தொடர்பாக, அந்த நிறுவகத்தின் ஒரு கூட்டாளி என்று பொருள்படும்:—

அத்தியாயம் VI

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான நிதிசார்ந்த சிறப்பு வகையங்கள்

26. (1). **(2)**ஆம் உட்பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு, மேம்பாட்டாளர் மற்றும் தொழில் முனைவோர் ஒவ்வொருவரும், பின்வரும் விலக்களிப்புகளுக்கும், கழிவுகளுக்கும், சலுகைகளுக்கும் உரிமையுடையவராவார், அதாவது: மேம்பாட்டாளர் மற்றும் தொழில் முனைவோர் ஒவ்வொருவருக்கும் விலக்களிப்புகள், கழிவுகள், சலுகைகள் ஆகியவை.

(a) exemption from any duty of customs, under the Customs Act, 1962 or the Customs Tariff Act, 1975 or any other law for the time being in force, on goods imported into, or services provided in, a Special Economic Zone or a Unit, to carry on the authorized operations by the Developer or entrepreneur; 52 / 1962. 51 / 1975.

(b) exemption from any duty of customs, under the Customs Act, 1962 or the Customs Tariff Act, 1975 or any other law for the time being in force, on goods exported from, or services provided, from a Special Economic Zone or from a Unit, to any place outside India; 52 /1962. 51 /1975.

(c) exemption from any duty of excise, under the Central Excise Act, 1944 or the Central Excise Tariff Act, 1985 or any other law for the time being in force, on goods brought from Domestic Tariff Area to a Economic Zone or Special Unit, to carry on the authorized operations by the Developer or entrepreneur; 1 of 1944. 5 of 1986.

(d) drawback or such other benefits as may be admissible from time to time on goods brought orservices provided from the Domestic Tariff Area into a Special Economic Zone or Unit or servicesprovided in a Special Economic Zone or Unit by the service providers located outside India to carryon the authorised operations by the Developer or entrepreneur

(e) exemption from service tax under Chapter V of the Finance Act, 1994 on taxable services provided to a Developer or Unit to carry on the authorised operations in a Special Economic Zone; 32 /1994.

(f) exemption from the securities transaction tax leviable under section 98 of the Finance (No. 2) Act, 2004 in case the taxable securities transactions are entered into by a non - resident through the International Financial Services Centre; 23 /2024.

(அ) அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, மேம்பாட்டாளரால் அல்லது தொழில் முனைவோரால் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குள் அல்லது அலகிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் அல்லது அளிக்கப்பட்ட சேவைகளின்பேரில், 1962 ஆம் ஆண்டு சுங்கங்கள்
52/1962. சட்டத்தின் அல்லது 1975 ஆம் ஆண்டு சுங்க வரிச் சட்டத்தின்
51/1975. அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் சுங்கத்தீர்வை எதிலிருந்தும் விலக்களிப்பு;

(ஆ) ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்திலிருந்து அல்லது ஓர் அலகிலிருந்து, இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடம் எதற்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளின் அல்லது வழங்கப்பட்ட சேவைகளின் பேரில், 1962 ஆம் ஆண்டு சுங்கங்கள் சட்டத்தின் அல்லது 1975 ஆம் ஆண்டு சுங்க வரிச் சட்டத்தின் அல்லது
1/1944. அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும்
5/1986. சுங்கத் தீர்வை எதிலிருந்தும் விலக்களிப்பு;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, மேம்பாட்டாளரால் அல்லது தொழில் முனைவோரால், உள்நாட்டு வரிப் பரப்பிடத்திலிருந்து ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குள் அல்லது அலகிற்குள் கொண்டு வரப்பட்ட சரக்குகளின் பேரில், 1944 ஆம் ஆண்டு மைய
1/1944 ஆயத்தீர்வை சட்டத்தின் அல்லது 1985 ஆம் ஆண்டு மைய
5/1986. ஆயத்தீர்வை வரிச் சட்டத்தின் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதனின்படியும் ஆயத்தீர்வை எதிலிருந்தும் விலக்களிப்பு;

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, மேம்பாட்டாளரால் அல்லது தொழில் முனைவோரால், உள்நாட்டு சுங்கவரிப் பரப்பிடத்திலிருந்து ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குள் அல்லது அலகிற்குள் கொண்டு வரப்பட்ட சரக்குகளின் பேரில் அல்லது அளிக்கப்பட்ட சேவையின் பேரில் அல்லது இந்தியாவிற்கு வெளியே அமைந்துள்ள சேவை வழங்கிகளால் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் அல்லது அலகில் வழங்கப்பட்ட சேவைகளின் பேரில், அப்போதைக்கப்போது அனுமதிக்கத்தக்க பிற நலன்கள் அல்லது கழிவு;

(உ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, ஒரு மேம்பாட்டாளர் அல்லது அலகுக்கு அளிக்கப்பட்ட வரிவிதிக்கத்தக்க
32/1994. சேவைகளின் பேரில், 1994 ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தின்படி சேவை வரியிலிருந்து விலக்களிப்பு;

(ஊ) பன்னாட்டு நிதிச் சேவைகள் மையத்தின் மூலமாக இந்தியாவில் குடியிராதவர்களால் செய்துகொள்ளப்பட்ட வரிவிதிக்கத்தக்க கடனீட்டு ஆவணங்களின் பரிமாற்றத்தைப் பொறுத்த நேர்வில், 2004 ஆம் ஆண்டு நிதி (எண் 2) சட்டத்தின் 98 ஆம் பிரிவின்படி விதிக்கத்தக்க கடனீட்டு ஆவணங்கள்
23/2004. பரிமாற்ற வரிவிதிப்பதிலிருந்து விலக்களிப்பு;

(g) exemption from the levy of taxes on the sale or purchase of goods other than newspapers under the Central Sales Tax Act, 1956 if such goods are meant to carry on the authorised operations by the Developer or entrepreneur. 74/1956.

(2) The Central Government may prescribe, the manner in which, and, the terms and conditions subject to which, the exemptions, concessions, drawback or other benefits shall be granted to the Developer or entrepreneur under sub-section (1).

Provisions of Income-tax Act, 1961 to apply with certain modification in relation to Developers and entrepreneurs.

27. The provisions of the Income-tax Act, 1961 , as in force for the time being, shall apply to, or in relation to, the Developer or entrepreneur for carrying on the authorised operations in a Special Economic Zone or Unit subject to the modifications specified in the Second Schedule 43 / 1961.

Duration of goods or services in Special Economic Zones.

28. The Central Government may prescribe the period during which any goods brought into, or services provided in, any Unit or Special Economic Zone without payment of taxes, duties or cess shall remain or continue to be provided in such Unit or Special Economic Zone.

Transfer of ownership and removal of goods.

29. The transfer of ownership in any goods brought into, or produced or manufactured in, any Unit or Special Economic Zone or removal thereof from such Unit or Zone shall be allowed, subject to such terms and conditions as the Central Government may prescribe.

Domestic clearance by Units.

30. Subject to the conditions specified in the rules made by the Central Government in this behalf,

(எ) மேம்பாட்டாளரால் அல்லது தொழில் முனைவோரால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளைச் செய்வதற்கானதாக
74/1956. செய்தித்தாள் அல்லாத பிற சரக்குகள் இருக்குமாயின், 1956 ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டத்தின்படி அத்தகைய சரக்குகளை விற்பதன் அல்லது வாங்குவதன் பேரில் வரிகள் விதிப்பதிலிருந்து விலக்களிப்பு.

(2) மைய அரசானது, மேம்பாட்டாளருக்கு அல்லது தொழில் முனைவோருக்கு (1) ஆம் உட்பிரிவின்படி எந்த முறையில், எந்த வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, விலக்களிப்புகள், சலுகைகள், கழிவு அல்லது பிற நலன்கள் வழங்கப்பட வேண்டுமோ அந்த முறையில் அவற்றை வகுத்துரைக்கலாம்.

மேம்பாட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் தொடர்பாக, 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் வகையங்கள், குறித்தசில மாற்றமைவுகளுடன் பொருந்துதல்.

27. அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ளவாறு, 1961 ஆம்
43/1961. ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் வகையங்கள், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மாற்றமைவுகளுக்கு உட்பட்டு, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் அல்லது அலகின் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளைச் செய்வதற்காக மேம்பாட்டாளருக்கு அல்லது தொழில் முனைவோருக்கு அல்லது அவர் தொடர்பாகப், பொருந்தும்.

சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சரக்குகள் அல்லது சேவைகளுக்கான காலஅளவு.

28. மைய அரசால், வரிகள், தீர்வைகள் அல்லது மேல்வரி செலுத்தப்படாமல் அலகு அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலம் எதற்குள்ளும், கொண்டு வரப்பட்ட சரக்குகள் அல்லது வழங்கப்பட்ட சேவைகள், எந்தக் காலஅளவுக்கு அத்தகைய அலகில் அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இருக்கலாமோ அல்லது தொடர்ந்து வழங்கப்படலாமோ அந்தக் காலஅளவைக் குறித்துரைக்கலாம்.

உடைமை-யுரிமையை உரிமைமாற்றம் செய்தல் மற்றும் சரக்குகளை அகற்றுதல்.

29. அலகு அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலம் எதற்குள்ளும் கொண்டு வரப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் எவற்றின் உடைமையுரிமையை மாற்றுவதானது அல்லது அந்த அலகிலிருந்து அல்லது மண்டலத்திலிருந்து அவற்றை அகற்றுவதானது, மைய அரசு வகுத்துரைக்கலாகும் வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

அலகுகளால் உள்நாட்டில் சரக்கு எடுக்கப்படுதல்.

30. இதன் பொருட்டு மைய அரசால் வகுக்கப்படும் விதிகளில் குறித்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு,—

(a) any goods removed from a Special Economic Zone to the Domestic Tariff Area shall be chargeable to duties of customs including anti-dumping, countervailing and safeguard duties under the Customs Tariff Act, 1975 , where applicable, as leviable on such goods when imported; and 51 /1975.

(b) the rate of duty and tariff valuation, if any, applicable to goods removed from a Special Economic Zone shall be at the rate and tariff valuation in force as on the date of such removal, and where such date is not ascertainable, on the date of payment of duty.

CHAPTER VII

SPECIAL ECONOMIC ZONE AUTHORITY

Constitution of Authority.

31. (1) The Central Government shall, by notification in the Official Gazette, constitute, for every Special Economic Zone established by it before the commencement of this Act or which may be established after such commencement by the Central Government, an Authority to be called the ……(name of the Special Economic Zone) Authority to exercise the powers conferred on, and discharge the functions assigned to, it under this Act:

Provided that in respect of existing Special Economic Zones established by the Central Government, such Authority shall be constituted by the Central Government within six months from the date of commencement of this Act:

Provided further that until such Authority is constituted, the person or the authority (including the Development Commissioner) exercising control over such existing Special Economic Zones shall continue to exercise such control over the Special Economic Zone till the Authority is constituted.

(அ) சிறப்புப் பொருளாதார மண்டலத்திலிருந்து உள்நாட்டு சுங்கவரிப் பரப்பிடத்திற்கு அகற்றப்பட்ட சரக்குகள் எவற்றிற்குமான சுங்கத் தீர்வையானது, பொருந்தத்தக்கவிடத்து, **1975** ஆம் ஆண்டு

51/1975. சுங்கவரிகள் சட்டத்தின்படி சரக்குகளைக் குவித்து வைக்காமை, எதிரீடு, பாதுகாத்தல் ஆகியவற்றிற்கான தீர்வைகள் உள்ளடங்கலாக, இறக்குமதி செய்யப்படும் சரக்குகளின்பேரில் விதிக்கத்தக்க சுங்கத் தீர்வைகள் போன்றே விதிக்கத்தக்கதாதல் வேண்டும்; மற்றும்

(ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலத்திலிருந்து அகற்றப்பட்ட சரக்குகளுக்குப் பொருந்தத்தக்க தீர்வை வீதம் மற்றும் வரி மதிப்பீடானது, அவ்வாறு அகற்றப்படும் தேதியன்று மற்றும் அத்தகைய தேதி உறுதி செய்யப்பட முடியாதவிடத்து, தீர்வை செலுத்துகிற தேதியன்று, செல்லாற்றலிலுள்ள வீதத்திலும், சுங்கவரி மதிப்பீடாகவும் இருத்தல் வேண்டும்.

அத்தியாயம் VII

சிறப்புப் பொருளாதார மண்டல அதிகாரஅமைப்பு

31. (1) மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கு முன்பு அதனால் நிறுவப்பட்ட அல்லது அத்தகைய தொடக்க நிலைக்குப் பின்பு மைய அரசால் நிறுவப்படலாகும் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒவ்வொன்றிற்காகவும், இந்தச் சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும், குறித்தளிக்கப்பட்ட அலுவற்பணிகளை ஆற்றுவதற்காகவும், **....................** (சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் பெயர்) என்று அழைக்கப்படும் அதிகாரஅமைப்பினை அமைத்துருவாக்குதல் வேண்டும்: அதிகார அமைப்பை அமைத்துருவாக்குதல்.

வரம்புரையாக: மைய அரசால் நிறுவப்பட்டு, நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் பொறுத்தவரை, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் மைய அரசால் அந்த அதிகாரஅமைப்பு அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக: அந்த அதிகாரஅமைப்பு அமைத்துருவாக்கப்படும் வரையில், நிலவுறும் அத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துகிற அந்த நபர் அல்லது (மேம்பாட்டு ஆணையர் உள்ளடங்கலான) அந்த அதிகாரஅமைப்பு, அந்த அதிகாரஅமைப்பு அமைத்துருவாக்கப்படும் வரை சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மீது தொடர்ந்துக் கட்டுப்பாட்டைச் செலுத்தி வருதல் வேண்டும்.

(2) Every Authority shall be a body corporate by the name aforesaid, having perpetual succession and a common seal, with a power, subject to the provisions of this Act, to acquire, hold and dispose of property, both movable and immovable, and to contract and shall, by the said name, sue and be sued.

(3) The head office of every Authority shall be at such place as the Central Government may specify in the notification referred to in sub-section (1).

(4) Any Authority may, with the previous approval of the Central Government, establish branch offices at other places in India.

(5) Every Authority shall consist of —

(a) the Development Commissioner of the Special Economic Zone over which the Authority exercises its jurisdiction — Chairperson, *ex officio*;

(b) two officers of the Central Government to be nominated by that Government having knowledge of, or experience in, dealing with matters relating to Special Economic Zones — Members, *ex officio*;

(c) an officer of the Government of India in the Ministry or Department dealing with commerce on matters relating to Special Economic Zone — Member, *ex officio*;

(d) not more than two persons, being entrepreneurs or their nominee, to be nominated by the Central Government — Members, *ex officio*;

(2) அத்தகைய அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், மேற்சொன்ன பெயரால் ஒரு கூட்டுருமமாக இருந்து வரும். அது தொடர்ந்த நிலைப்பாட்டையும், தனியோர் இலச்சினையையும் கொண்டிருக்கும். மேலும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, அசையும் மற்றும் அசையாச் சொத்து ஆகிய இரண்டினையும் ஈட்டுவதற்கும் வைத்திருப்பதற்கும் அவற்றிற்கு வகைசெய்வதற்கும் மற்றும் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் அதிகாரம் பெற்றிருக்கும்; மேலும், அது வழக்கிடுதலும், அதன்மீது வழக்கிடப்படுதலும் மேற்சொன்ன பெயராலேயே இருக்கும்.

(3) ஒவ்வொரு அதிகாரஅமைப்பின் தலைமையகமும், (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அறிவிக்கையில் மைய அரசால் குறித்துரைக்கப்படும் இடங்களில் இருத்தல் வேண்டும்.

(4) அதிகாரஅமைப்பு எதுவும், மைய அரசின் முன் ஒப்பேற்புடன் இந்தியாவிலுள்ள பிற இடங்களில் கிளை அலுவலகங்களை நிறுவலாம்.

(5) அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், பின்வருபவர்களைக் கொண்டதாயிருக்கும்:—

(அ) அதிகாரஅமைப்பு தன் அதிகாரங்களைச் செலுத்துகிற சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேம்பாட்டு ஆணையர்— தலைமையர், பதவிவழி;

(ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடர்பான பொருட்பாடுகளைக் கையாளுவதில் அறிவையும், பட்டறிவையும் உடையவராயிருந்து மைய அரசால் பெயர் குறித்தமர்த்தப்படும், அந்த அரசின் இரண்டு அலுவலர்கள்— உறுப்பினர்கள், பதவிவழி;

(இ) சிறப்புப் பொருளாதார மண்டலம் தொடர்பான பொருட்பாடுகளில் வணிகவியலைக் கையாளும் அமைச்சகத்தில் அல்லது துறையில் இந்திய அரசின் அலுவலர் ஒருவர்—உறுப்பினர், பதவிவழி;

(ஈ) தொழில் முனைவோர்களாக அல்லது அவரால் பெயர் குறித்தமர்த்தப்படுபவராக இருந்து, மைய அரசால் பெயர் குறித்தமர்த்தப்பட வேண்டிய இரண்டுக்கு மேற்படாத நபர்கள் உறுப்பினர்கள், பதவிவழி.

(6) The term of office of the Members of an Authority (other than *ex officio* Members) and the manner of filling of vacancies shall be such as may be prescribed.

(7) An Authority may associate with itself in such manner, subject to such conditions and for such purposes as may be prescribed, any person whose assistance or advice it requires in discharging its functions effectively and that person shall be entitled to receive such allowances or fees as may be fixed by the Authority.

(8) One-third of the total Members of the Authority shall form a quorum, and all the acts of the Authority shall be decided by a majority of the Members present.

(9) No act or proceeding of an Authority shall be invalidated merely by reason of —

(a) any vacancy in, or any defect in the constitution of, the Authority; or

(b) any defect in the appointment of a person acting as a Member of the Authority; or

(c) any irregularity in the procedure of the Authority not affecting the merits of the case.

(10) Every Authority shall meet at such times and places and shall observe such rules of procedure in regard to the transaction of business at its meetings (including quorum at such meetings) as may be prescribed.

(6) அதிகாரஅமைப்பில் (பதவிவழி உறுப்பினர்கள் அல்லாத பிற) உறுப்பினர்களின் பதவிக்காலம், காலியிடங்களை நிரப்பும் முறை ஆகியவை வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருக்கும்.

(7) ஓர் அதிகாரஅமைப்பு, தன் அலுவற்பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு எந்த நபரின் உதவி அல்லது அறிவுரை அதற்குத் தேவைப்படுகிறதோ, அந்த நபர் எவரையும், வகுத்துரைக்கப்படலாகும் முறையிலும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும், வகுத்துரைக்கப்படலாகும் நோக்கங்களுக்காகவும் தன்னுடன் இணைத்துக்கொள்ளலாம் மற்றும் அந்த நபர் அந்த அதிகாரஅமைப்பால் நிர்ணயிக்கப்படலாகும் படித்தொகைகளை அல்லது கட்டணங்களைப் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆவார்.

(8) அதிகாரஅமைப்பின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பகுதியினர், குறைவெண்ணாக அமைதல் வேண்டும் மற்றும் அதிகாரஅமைப்பின் செயல்கள் அனைத்தும், வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(9) அதிகாரஅமைப்பு ஒன்றின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும்,—

(அ) அதிகாரஅமைப்பில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதனை அமைத்துருவாக்குவதில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தின் பேரில்; அல்லது

(ஆ) அந்த அதிகாரஅமைப்பின் உறுப்பினராகச் செயற்படுகிற நபர் ஒருவரை அமர்த்துவதில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தின் பேரில்; அல்லது

(இ) வழக்கின் தகுதிப்பாடுகளைப் பாதிக்காது அதிகாரஅமைப்பின் நடைமுறையில் முறைகேடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தின்பேரில்

செல்லாததாக்கப்படுதல் ஆகாது.

(10) அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் நேரங்களிலும் இடங்களிலும் கூடுதல் வேண்டும். மற்றும் (கூட்டங்களில் குறைவெண் உள்ளடங்கலாக) அந்தக் கூட்டங்களில் அலுவல் நடவடிக்கைத் தொடர்பாக எடுத்துரைக்கப்படும் நடைமுறை விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

Officers of Authority and other staff.

32. (1) Every Development Commissioner of the Special Economic Zone, for which he is appointed as such, shall be the chief executive of the Authority concerned and exercise such powers and perform such functions as may be prescribed.

(2) Every Authority may, in addition to the officers and employees transferred to it under section 33, appoint such other officers and employees, as it considers necessary for the efficient discharge of its functions under this Act.

(3) The method of appointment, the conditions of service and the scales of pay and allowances of such other officers and employees appointed under sub-section (2) shall be such as may be prescribed.

Special provision for transfer of officers or other employees to Authority.

33. (1) It shall be lawful for the Central Government to transfer to each Authority, by order, and with effect from such date or dates, as may be specified in the order, any officer or other employee holding office as such (except officers or other employees on deputation) in the existing Special Economic Zone concerned:

Provided that the scale of pay of the post to which such officer or other employee is transferred shall not be lower than the scale of pay of the post which he was holding immediately before such transfer and the other terms and conditions of service (including pension, leave, provident fund and medical benefits) of the post to which he is transferred shall not be less favourable than the terms and conditions of service in relation to the post held by him immediately before such transfer:

32. **(1)** எந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக மேம்பாட்டு ஆணையராக ஒருவர் அமர்த்தப்பட்டாரோ அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டல மேம்பாட்டு ஆணையர் ஒவ்வொருவரும், தொடர்புடைய அதிகாரஅமைப்பின் தலைமை நிர்வாகியாக இருப்பார். மேலும் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துவார் மற்றும் அலுவற்பணிகளைப் புரிவார்.

அதிகாரஅமைப்பின் அலுவலர்களும் பிற பணியாளர் தொகுதியும்.

(2) அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், **33** ஆம் பிரிவின்படி அதற்கு மாற்றல் செய்யப்பட்ட அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் கூடுதலாக, இந்தச் சட்டத்தின்படி அதன் அலுவற்பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்காக அது தேவையெனக் கருதுகிற பிற அலுவலர்களையும் பணியாளர்களையும் அமர்த்தலாம்.

(3). **(2)** ஆம் உட்பிரிவின்படி அமர்த்தப்பட்ட பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை அமர்த்தும் முறை, அவர்களுடைய பணிவரைக்கட்டுகள், சம்பள ஏற்றமுறைகள் மற்றும் படித்தொகைகள் ஆகியவை வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருக்கும்.

33. **(1)** தொடர்புடைய நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் (மாற்றுப்பணியிலுள்ள அலுவலர்கள் அல்லது பிற பணியாளர்கள் நீங்கலாக) அலுவலராக அல்லது பிற பணியாளராகப் பதவி வகிக்கிற அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரையும், ஆணை வாயிலாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் தேதி அல்லது தேதிகளிலிருந்து செல்திறம் பெறுமாறு ஒவ்வொரு அதிகாரஅமைப்புக்கும் மாற்றல் செய்வது மைய அரசுக்குச் சட்டப்படியானதாகும்:

அதிகாரஅமைப்பின் அலுவலர்களை அல்லது பிற பணியாளர்களைப் பணிமாற்றல் செய்வதற்கான சிறப்பு வகையம்.

வரம்புரையாக: அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர், எந்தப் பணியடைக்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளாரோ அந்தப் பணியடைக்கான சம்பள ஏற்றமுறையானது, அத்தகைய மாற்றலுக்கு அடுத்து முன்பு அவர் வகித்து வந்த பணியடையின் சம்பள ஏற்றமுறைக்குக் குறைவானதாக இருத்தல் ஆகாது. மேலும், எந்தப் பணியடைக்கு அவர் மாற்றல் செய்யப்பட்டாரோ அந்தப் பணியின் (ஓய்வூதியம், விடுப்பு, வருங்கால வைப்புநிதி, மருத்துவ நலப்பயன்கள் உள்ளடங்கலான) பிற பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள், அத்தகைய மாற்றத்திற்கு அடுத்து முன்பு, அவர் வகித்து வந்த பணியடைத் தொடர்பான பணிவரையுரைகளையும் வரைக்கட்டுகளையும் காட்டிலும் குறைந்த அளவு சாதகமானதாக இருத்தல் ஆகாது:

Provided further that if, immediately before the date of his transfer, any such officer or other employee is officiating in a higher post under the Central Government either in a leave vacancy or in any vacancy of a specified duration, his pay and other allowances, if any, on transfer, shall be protected for the unexpired period of such vacancy and thereafter he shall be entitled to the scale of pay applicable to the post under the Central Government to which he would have reverted but for his transfer to the Authority

(2) If any question arises as to whether the prescribed terms and conditions of service in respect of any matter, including remuneration, pension, leave, provident fund and medical benefits, are less favourable than those attached to the post held by an officer or other employee immediately before his transfer to the Authority, the decision of the Central Government in the matter shall be final.

Functions of Authority.

34. (1) Subject to the provisions of this Act, it shall be the duty of each Authority to undertake such measures as it thinks fit for the development, operation and management of the Special Economic Zone for which it is constituted.

(2) Without prejudice to the generality of the provisions of sub-section (1), the measures referred to therein may provide for—

(a) the development of infrastructure in the Special Economic Zone;

(b) promoting exports from the Special Economic Zone

(c) reviewing the functioning and performance of the Special Economic Zone;

(d) levy user or service charges or fees or rent for the use of properties belonging to the Authority;

மேலும் வரம்புரையாக: அவரது மாற்றல் தேதிக்கு அடுத்து முன்பு, விடுப்பினால் ஏற்பட்ட காலியிடத்திலோ அல்லது குறித்துரைக்கப்பட்ட காலஅளவுக்கு ஏற்படும் எந்தக் காலியிடத்திலோ மைய அரசின்கீழ் உயர் பணியடையில், அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும், பதவி வகித்து வருவாராயின், மாற்றலின்பேரில், அவரது அதே சம்பளம் மற்றும் படித்தொகைகள், அத்தகைய காலியிடத்தின் முடிவுறாதக் காலஅளவுக்கு அளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அதன் பின்பு, அந்த அதிகாரஅமைப்பிற்கு அவர் மாற்றல் செய்யப்படாவிட்டால் மைய அரசின்கீழ் எந்தப் பணியடைக்கு அவர் மீண்டும் திரும்பக்கூடுமோ அந்தப் பணியடைக்குப் பொருந்தத்தக்க சம்பள ஏற்றமுறைக்கு உரிமையுடையவர் ஆவார்.

(2) பணியூதியம், ஓய்வூதியம், விடுப்பு, வருங்கால வைப்பு நிதி, மருத்துவ நலப்பயன்கள் உள்ளடங்கலான பொருட்பாடு எதனையும் பொறுத்து, வகுத்துரைக்கப்பட்ட பணிவரையுரைகளும், வரைக்கட்டுகளும், அதிகாரஅமைப்பிற்கு அவர் மாற்றப்படுவதற்கு அடுத்து முன்பு, ஓர் அலுவலரால் அல்லது பிற பணியாளரால் வகித்து வரப்பட்ட பணியடையோடு சேர்ந்தவை அல்லாத பிறவற்றைக் காட்டிலும் குறைந்த அளவு சாதகமானதாக இருக்கிறதா என வினா எதுவும் எழுமாயின், அந்தப் பொருட்பாடு குறித்து மைய அரசின் முடிபே அறுதியானதாகும்.

34. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒவ்வோர் அதிகாரஅமைப்பும், எந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கென அமைத்துருவாக்கப்பட்டதோ அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேம்பாடு, செயற்பாடு மற்றும் மேலாண்மைக்காக, தான் பொருத்தமெனக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது அதன் கடமையாக இருக்கும். அதிகாரஅமைப்பின் அலுவற்பணிகள்.

(2). (1) ஆம் உட்பிரிவின் வகையங்களின் பொதுத்தன்மைக்குக் குந்தகமின்றி, அதில் சுட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள்,—

(அ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள் கட்டமைப்பை மேம்படுத்துவது;

(ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலத்திலிருந்து ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கு;

(இ) சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் செயல்பாட்டையும் செயல்திறனையும் மறுஆய்வு செய்வதற்கு;

(ஈ) அதிகாரஅமைப்புக்குச் சொந்தமான சொத்துகளைப் பயன்படுத்தியதற்காகப் பயன்படுத்துநர் தொகைகளுக்கு அல்லது சேவைத் தொகைகளுக்கு அல்லது கட்டணங்களுக்கு அல்லது வாடகைகளுக்கு;

(e) performing such other functions as may be prescribed.

Grants and loans by Central Government.

35. The Central Government may, after due appropriation made by Parliament by law in this behalf, make to every Authority by way of grants and loans or such sums of money as that Government may think fit for being utilised for the purposes of this Act.

Constitution of Fund and its application.

36. (1) There shall be established by every Authority a Fund to be called the.......... (the name of the Special Economic Zone concerned) Authority Fund and there shall be credited thereto —

(a) all sums of money, which the Central Government may, after due appropriation made by Parliament by law in this behalf, provide to the Authority;

(b) all grants or loans that may be made to the Authority under this Act;

(c) all sums received on account of user or service charges or fees or rent for the use of properties belonging to the Authority;

(d) all sums received by the Authority from such other sources as may be decided upon by the Central Government.

(2) The Fund shall be applied for meeting—

(a) the salaries, allowances and other remuneration of the members, officers and other employees of the Authority;

(b) the expenses of the Authority in the discharge of its functions under section 34;

(c) the repayment of any loan;

(d) the expenses on objects and for purposes authorised by this Act;

(உ) வகுத்துரைக்கப்படலாகும் பிற அலுவற்பணிகளை ஆற்றுவதற்கு,

வகை செய்யலாம்.

35. மைய அரசானது, இதன் பொருட்டு சட்டத்தின்வழி நாடாளுமன்றத்தால் உரிய ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்காக, மானியங்கள் மற்றும் கடன்கள் என்ற வகையில் அந்த அரசு பொருத்தமெனக் நினைக்கிற பணத்தொகைகளை ஒவ்வொரு அதிகாரஅமைப்பிற்கும் அளிக்கலாம்.

மைய அரசால் மானியங்களும் கடன்களும் வழங்கப்படுதல்.

36. (1) ஒவ்வோர் அதிகார அமைப்பாலும்............ (தொடர்புடைய சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் பெயர்) அதிகாரஅமைப்பு நிதியம் என்று அழைக்கப்படும் நிதியம் ஒன்று நிறுவியமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அதில்—

நிதியத்தை அமைத்துருவாக்கிப் பயன்படுத்துதல்.

(அ) இதன் பொருட்டு சட்டத்தின்வழி நாடாளுமன்றத்தினால் உரிய ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, மைய அரசு, அதிகாரஅமைப்புக்கு அளிக்கலாகும் பணத்தொகைகள் அனைத்தும்;

(ஆ) இந்தச் சட்டத்தின்படி அதிகாரஅமைப்புக்கு அளிக்கப்படலாகும் மானியங்கள் அல்லது கடன்கள் அனைத்தும்;

(இ) அதிகாரஅமைப்புக்குச் சொந்தமான சொத்துகளைப் பயன்படுத்தியதற்காக பயன்படுத்துநர் தொகைகளாக அல்லது சேவைத் தொகைகளாக அல்லது கட்டணங்களாக அல்லது வாடகையாகப் பெறப்படும் தொகைகள் அனைத்தும்;

(ஈ) மைய அரசால் தீர்மானிக்கப்படலாகும் பிற வளஆதாரங்களிலிருந்து அதிகாரஅமைப்பினால் பெறப்படலாகும் பணத்தொகைகள் அனைத்தும்,

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியமானது,—

(அ) அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள், அலுவலர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரின் வரையூதியங்கள், படித்தொகைகள், பிற பணியூதியம் ஆகியவற்றைக் கொடுப்பதற்கு;

(ஆ) 34 ஆம் பிரிவின்படி தனது அலுவற்பணிகளை ஆற்றுகையில் அதிகாரஅமைப்புக்கு ஏற்படும் செலவுகளுக்காக;

(இ) கடன் எதனையும் திருப்பிச் செலுத்துவதற்காக;

(ஈ) பொருட்களின் பேரிலான செலவுகளுக்காக மற்றும் இந்தச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக;

(e) any other administrative expenses of the Authority.

Accounts and audit.

37. (1) Every Authority shall maintain proper accounts and other relevant records and prepare an annual statement of accounts in such form as may be prescribed by the Central Government, in consultation with the Comptroller and Auditor-General of India.

(2) The accounts of every Authority shall be audited by the Comptroller and Auditor-General of India at such intervals as may be specified by him and any expenditure incurred in connection with such audit shall be payable by the Authority to the Comptroller and Auditor-General of India.

(3) The Comptroller and Auditor-General of India or any person appointed by him in connection with the audit of the accounts of the Authority shall have the same rights and privileges and authority in connection with such audit as the Comptroller and Auditor-General of India generally has in connection with the audit of the Government accounts and, in particular, shall have the right to demand the production of books, accounts, connected vouchers and other documents and papers and to inspect any of the offices of the Authority.

(4) The accounts of every Authority as certified by the Comptroller and Auditor-General of India or any other person appointed by him in this behalf together with the audit report thereon shall be forwarded annually to the Central Government and the Central Government shall cause the same to be laid before each House of Parliament.

Directions by Central Government.

38. Every Authority shall be bound to carry out such directions as may be issued to it from time to time by the Central Government for the efficient administration of this Act.

(உ) அதிகாரஅமைப்பின் பிற நிருவாகச் செலவுகள் எவற்றிற்காகவும்,

பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் தணிக்கையும்.

37. (1) அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், முறையான கணக்குகளையும் தொடர்புடைய பிற பதிவணங்களையும் வைத்து வருவதோடு, இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையரைக் கலந்தாய்வு செய்து, மைய அரசினால் வகுத்துரைக்கப்படலாகும் படிவத்தில் கணக்குகளின் ஆண்டு அறிக்கையொன்றைத் தயாரித்தலும் வேண்டும்.

(2) அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றின் கணக்குகளும், இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையரால் குறித்துரைக்கப்படலாகும் கால இடைவெளிகளில் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய தணிக்கை தொடர்பாக செய்ய நேர்ந்த செலவுத்தொகை எதுவும், அதிகாரஅமைப்பால், இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையருக்குச் செலுத்தத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(3) இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையர் அல்லது அதிகாரஅமைப்பின் கணக்குத் தணிக்கை தொடர்பாக அவரால் அமர்த்தப்பட்ட நபர் எவரும், இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையர், அரசு கணக்குகளின் தணிக்கை தொடர்பாகவும், பொதுவாக அவர் கொண்டிருக்கிற அதே உரிமைகளையும் சிறப்புரிமைகளையும், அதிகார உரிமையையும் அத்தகைய தணிக்கை தொடர்பாகவும் கொண்டிருப்பார். மேலும் குறிப்பாக, புத்தகங்கள், கணக்குகள், தொடர்புடைய செலவுச் சீட்டுகள், பிற ஆவணங்கள், தாள் ஆவணங்கள் ஆகியவற்றை முன்னிடுமாறு கோருவதற்கும், அதிகாரஅமைப்பின் அலுவலகங்களில் எதனையும் ஆய்வு செய்வதற்கும் உரிமைப் பெற்றிருப்பார்.

(4) இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையரால் அல்லது அதற்கென அவரால் அமர்த்தப்பட்ட பிற நபர் எவராலும் உறுதிச் சான்றிடப்பட்டவாறான ஒவ்வொரு அதிகாரஅமைப்பின் கணக்குகள், அதன்பேரிலான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, ஆண்டுதோறும் மைய அரசுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். மேலும், மைய அரசு, நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் அவை வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

மைய அரசின் பணிப்புரைகள்.

38. அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், இந்தச் சட்டத்தினைத் திறம்பட நிருவகிப்பதற்காக, மைய அரசால், அவ்வப்போது, அதற்குப் பிறப்பிக்கப்படலாகும் பணிப்புரைகளை நிறைவேற்றக் கட்டுப்பட்டதாகும்.

Returns and reports.

39. (1) Every Authority shall furnish to the Central Government at such time and in such form and manner as may be prescribed or as the Central Government may direct, such returns and statements and such particulars in regard to the promotion and development of exports and the operation and maintenance of the Special Economic Zone and Units as the Central Government may, from time to time, require.

(2) Without prejudice to the provisions of sub-section (1), every Authority shall, as soon as possible, after the end of each financial year, submit to the Central Government a report in such form and before such date, as may be prescribed, giving a true and full account of its activities, policy and programmes during the previous financial year.

(3) A copy of every report received under sub-section (2) shall be laid, as soon as may be, after it is received, before each House of Parliament.

Power to supersede Authority.

40. (1) If at any time the Central Government is of the opinion that an Authority is unable to perform, or has persistently made default in the performance of the duty imposed on it by or under this Act or has exceeded or abused its powers, or has wilfully or without sufficient cause, failed to comply with any direction issued by the Central Government under section 38, the Central Government may, by notification, supersede that Authority for such period not exceeding six months, as may be specified in the notification:

Provided that before issuing a notification under this sub-section, the Central Government shall give reasonable time to that Authority to make representation against the proposed supersession and shall consider the representations, if any, of the Authority.

39. **(1)** அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் நேரத்திலும், படிவத்திலும், முறையிலும் அல்லது மைய அரசு பணிக்கிறவாறு, ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது மற்றும் மேம்படுத்துவது மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் அதன் அலகுகளிலும் அதன் செயற்பாடு மற்றும் பேணுகை குறித்து மைய அரசு, அவ்வப்போது, கோரலாகும் விவர அறிக்கைகள், விவர உரைகள், விவரங்கள் ஆகியவற்றை மைய அரசுக்கு அளித்தல் வேண்டும். விவர அறிக்கைகளும், அறிக்கைகளும்.

(2). **(1)** ஆம் உட்பிரிவின் வகையங்களுக்குக் குந்தகன்றி, அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிற்குப் பின்பும், இயன்ற அளவு விரைவில், முந்தைய நிதியாண்டின்போதான அதன் செயற்பாடுகள், கொள்கை, திட்டங்கள் ஆகியவை குறித்த உண்மையானதும் முழுமையானதுமான உரை ஒன்றினைக் கொண்ட விவர அறிவிக்கை ஒன்றினை, வகுத்துரைக்கப்படும் படிவத்திலும், வகுத்துரைக்கப்படும் தேதிக்கு முன்பும் முன்னிடுதல் வேண்டும்.

(3). **(2)** ஆம் உட்பிரிவின்படி பெறப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றின் படி ஒன்று, அது பெறப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

40. **(1)** ஓர் அதிகாரஅமைப்பு, இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ தன் மீது சுமத்தப்பட்டுள்ள கடமைகளைப் புரிவதற்கு இயலாமலிருக்கிறது அல்லது கடமைகளைப் புரிவதில் தொடர்ந்து தவறுகை செய்து வந்திருக்கிறது என்றோ அல்லது தன் அதிகாரங்களை விஞ்சியிருக்கிறது என்றோ அல்லது தவறாகப் பயன்படுத்தியிருக்கிறது என்றோ, அல்லது வேண்டுமென்றோ அல்லது போதிய காரணமின்றியோ **38** ஆம் பிரிவின்படி மைய அரசால் பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதற்கும் இணங்கி நடக்கவில்லை என்றோ, எந்த நேரத்திலும், மைய அரசு கருதுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலஅளவுக்கு அந்த அதிகாரஅமைப்பைக் கலைத்துக் கைக்கொள்ளலாம்: அதிகார அமைப்பினைக் கலைத்துக் கைக்கொள்வதற்கு அதிகாரம்.

வரம்புரையாக: இந்த உட்பிரிவின்படி ஓர் அறிவிக்கையை வெளியிடுவதற்கு முன்பு, மைய அரசு, கருதப்பட்ட கலைத்துக் கைக்கொள்ளுதலுக்கு எதிராக முறையீடு செய்வதற்கு அந்த அதிகாரஅமைப்புக்குத் தகுமான காலம் அளித்தல் வேண்டும் மற்றும் அதிகாரஅமைப்பின் முறையீடுகள், எவையேனுமிருப்பின், அவற்றையும் ஓர்வு செய்தல் வேண்டும்.

(2) Upon the publication of a notification under sub-section (1) superseding the Authority,—

(a) the Chairperson and other Members of the Authority shall, notwithstanding that their term of office has not expired as from the date of supersession, vacate their offices as such;

(b) all the powers, functions and duties which may, by or under the provisions of this Act, be exercised or discharged by or on behalf of the Authority shall, during the period of supersession, be exercised and performed by such person or persons as the Central Government may direct;

(c) all property vested in the Authority shall, during the period of supersession, vest in the Central Government.

(3) On the expiration of the period of supersession specified in the notification issued under sub-section (1), the Central Government may—

(a) extend the period of supersession for such further period not exceeding six months; or

(b) reconstitute the Authority in the manner provided in section 31.

Members, officers and other employees of Authority to be public servants.

41. All Members, officers and other employees of every Authority, shall, when acting or purporting to act in pursuance of any of the provisions of this Act or the rules made thereunder, be deemed to be public servants within the meaning of section 21 of the Indian Penal Code (45 of 1860).

CHAPTER VIII

MISCELLANEOUS

Reference of dispute.

42. (1) Notwithstanding anything contained in any other law for the time being in force, if —

(2). **(1)** ஆம் உட்பிரிவின்படி ஓர் அறிவிக்கையை வெளியிடுவதன் பேரில், அதிகாரஅமைப்பினைக் கலைத்துக் கைக்கொள்வதானது,—

(அ) அதிகாரஅமைப்பின் தலைமையர் மற்றும் பிற உறுப்பினர்களின் பதவிக்காலம், கலைத்துக் கைக்கொள்ளப்படும் தேதியிலிருந்து முடிவுறாதிருந்த போதிலும், அவர்கள், அத்தகைய தமது பதவிகளை விட்டகலுதல் வேண்டும்;

(ஆ) இந்தச் சட்டத்தின் வகையத்தாலோ அதன் வழியாலோ அதிகாரஅமைப்பால் அல்லது அதன் சார்பாக செலுத்தப்பட்டிருக்கும் அல்லது புரியப்பட்டிருக்கும் அனைத்து அதிகாரங்களும், அலுவற்பணிகளும், கடமைகளும் கலைத்துக் கைக்கொள்ளப்படும் காலஅளவின்போது, மைய அரசு பணிக்கலாகும் நபரால் அல்லது நபர்களால் செலுத்தப்படுதலும் புரியப்படுதலும் வேண்டும்;

(இ) அதிகாரஅமைப்பிடம் உற்றமைந்துள்ள அனைத்து சொத்தும், கலைத்துக் கைக்கொள்ளப்படும் காலஅளவின்போது, மைய அரசிடம் உற்றமைதல் வேண்டும்;

(3). **(1)** ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கலைத்துக் கைக்கொள்ளப்படும் காலஅளவு முடிவுறுவதன்பேரில், மைய அரசு,—

(அ) ஆறு மாதங்களுக்கு மேற்படாத மேலுமான காலஅளவிற்குக் கலைத்துக் கைக்கொள்ளும் காலஅளவை நீட்டிக்கலாம்; அல்லது

(ஆ) **31** ஆம் பிரிவில் வகைசெய்யப்பட்டுள்ள முறையில் அதிகாரஅமைப்பினை மறுபடியும் அமைத்துருவாக்கலாம்**.**

41. ஒவ்வோர் அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள், அலுவலர்கள், பிறபணியாளர்கள் ஆகியோர் அனைவரும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின் வகையங்களைத் தொடர்ந்து ஒட்டி செயற்படுகிற போது அல்லது செயற்படுவதாகப் புலப்படுகிற போது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் **21** ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்**.** அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள், அலுவலர்கள், பிற பணியாளர்கள் ஆகியோர் பொது ஊழியர்களாக இருத்தல்**.**

45/1860.

அத்தியாயம் VIII

பல்வகைப்பட்டவை

42. **(1)** அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,— பூசலைச் சாட்டியனுப்புதல்**.**

(a) any dispute of civil nature arises among two or more entrepreneurs or two or more Developers or between an entrepreneur and a Developer in the Special Economic Zone; and

(b) the court or the courts to try suits in respect of such dispute had not been designated under sub-section (1) of section 23,

such dispute shall be referred to arbitration:

Provided that no dispute shall be referred to the arbitration on or after the date of the designation of the court or courts under sub-section (1) of section 23.

(2) Where a dispute has been referred to arbitration under sub-section (1), the same shall be settled or decided by the arbitrator to be appointed by the Central Government.

(3) Save as otherwise provided under this Act, the provisions of the Arbitration and Conciliation Act, 1996 shall apply to all arbitration under this Act as if the proceedings for arbitration were referred in settlement or decision under the provisions of the Arbitration and Conciliation Act, 1996. 26 of 1996.

Limitation.

43. (1) The period of limitation in the case of any dispute which is required to be referred to arbitration shall be regulated by the provisions of the Limitation Act, 1963, as if the dispute was a suit and the arbitrator is civil court. 36 of 1963.

(2) Notwithstanding anything contained in sub-section (1), the arbitrator may admit a dispute after the expiry of the period of limitation, if the applicant satisfies the arbitrator that he had sufficient cause for not referring the dispute within such period.

(அ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழில் முனைவோர்களிடையே அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மேம்பாட்டாளர்களிடையே அல்லது ஒரு தொழில் முனைவோருக்கும் மேம்பாட்டாளருக்கும் இடையே ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் குடியியல் தன்மையதான பூசல் எதுவும் எழுமாயின்; மற்றும்

(ஆ) அத்தகைய பூசல் குறித்த உரிமை வழக்குகளை விசாரிப்பதற்கான நீதிமன்றம் அல்லது நீதிமன்றங்கள், 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துக்காட்டப்படவில்லையாயின்

அத்தகைய பூசல், பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டியனுப்பப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி நீதிமன்றம் அல்லது நீதிமன்றங்கள், குறித்துக்காட்டப்பட்ட தேதியன்று அல்லது அதற்குப் பின்பு, பூசல் எதையும் பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டியனுப்புதல் ஆகாது.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி ஒரு பூசல் பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டியனுப்பப்படுகிறவிடத்து, அந்தப் பூசல், மைய அரசால் அமர்த்தப்பட வேண்டிய ஒரு பொதுவரால் தீர்க்கப்படுதலோ தீர்மானிக்கப்படுதலோ வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி பிறவாறு வகை செய்யப்பட்டவாறு தவிர, 1996ஆம் ஆண்டு பொதுவர்தீர்ப்பு மற்றும் இணக்கத்தீர்வு சட்டத்தின் வகையங்கள், பொதுவர் தீர்ப்புக்கான நடவடிக்கைகள், 26/1996. 1996 ஆம் ஆண்டு பொதுவர்தீர்ப்பு மற்றும் இணக்கத் தீர்வு சட்டத்தின் வகையங்களின்படி தீர்க்கப்படுவதிலோ தீர்மானிக்கப்படுவதிலோ சாட்டியனுப்பப்பட்டிருந்தாற்போன்று, இந்தச் சட்டத்தின்படியான அனைத்து பொதுவர் தீர்ப்புகளுக்கும் பொருந்தும்.

43. (1) பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டியனுப்பப்பட வேண்டுமென்றுக் கோரப்படுகிற பூசல் எதனையும் பொறுத்த நேர்வில், காலவரம்பானது, பூசல் ஓர் உரிமை வழக்காகவும், பொதுவர்உரிமையியல் நீதிமன்றமாகவும் இருந்தாற் போன்று, 1963 ஆம் ஆண்டு காலவரம்புச் சட்டத்தின் வகையங்களால் முறைப்படுத்தப்படுதல் வேண்டும். காலவரம்பு. 36/1963.

(2). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், காலவரம்பு காலத்திற்குள் பூசலைச் சாட்டியனுப்பாததற்குப் போதுமான காரணம் தனக்கு இருக்கிறது என பொதுவர் தெளிவுறக்காணும்படி விண்ணப்பதாரர் செய்வாராயின், பொதுவர், அந்தக் காலஅளவு முடிவுற்ற பிறகும் பூசலை விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளலாம்.

Applicability of provisions of this Act to existing Special Economic Zones.

44. All the provisions of this Act (except sections 3 and 4) shall, as far as may be, apply to every existing Special Economic Zone.

Person to whom a communication may be sent under this Act.

45. A communication by any competent authority or person under this Act may be sent to the person who has the ultimate control over the affairs of the Special Economic Zone or Unit or where the said affairs are entrusted to a manager, director, chairperson, or managing director, or to any other officer, by whatever name called, such communication may be sent to such manager, director, chairperson, or managing director or any other officer.

46. Identity Card.—Every person, whether employed or residing or required to be present in a Special Economic Zone, shall be provided an identity card by every Development Commissioner of such Special Economic Zone, in such form and containing such particulars as may be prescribed.

47. Authorities responsible for administration.—Any authority which has been conferred upon any power, or, is, required to discharge any function under any Central or State Act, may, subject to the provisions of this Act, exercise such power or discharge such functions in any Special Economic Zone under that Act.

48. Protection of action taken in good faith.—No suit, prosecution or other legal proceeding shall lie against the Central Government or any Chairperson, Member, officer or other employee of the Board or the Approval Committee or the Authority or Development Commissioner for anything done or intended to be done in good faith under this Act.

44. இந்தச் சட்டத்தின் (3, 4 ஆகிய பிரிவுகள் நீங்கலாக) வகையங்கள் அனைத்தும், இயன்ற அளவு, நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒவ்வொன்றிற்கும் பொருந்தும்.

நிலவுறும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு இந்தச் சட்டத்தின் வகையங்கள் பொருந்தும் தன்மை.

45. இந்தச் சட்டத்தின்படி அதிகாரஅமைப்பு எதனாலும் அல்லது நபர் எவராலும் அனுப்பப்படும் தகவலானது, சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் அல்லது அலகின் விவகாரங்களின் மீது இறுதியானக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிற நபருக்கு, அல்லது மேற்சொன்ன விவகாரங்களானது, மேலாளர், இயக்குநர், தலைமையர் அல்லது மேலாண்மை இயக்குநருக்கு அல்லது எந்தப் பெயராலும் அழைக்கப்படும் பிற அலுவலர் எவரிடமும் ஒப்படைவு செய்யக் கருதப்படுகிறவிடத்து, அந்தத் தகவலானது மேலாளர், இயக்குநர், தலைமையர் அல்லது மேலாண்மை இயக்குநர் அல்லது பிற அலுவலர் எவருக்கும் அனுப்பப்படலாம்.

இந்தச் சட்டத்தின்படி தகவல் எந்த நபருக்கு அனுப்பப்படலாம் என்பது குறித்து.

46. சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிற அல்லது குடியிருந்து வருகிற அல்லது வந்திருக்குமாறு கோரப்படுகிற நபர் ஒவ்வொருவருக்கும், அத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேம்பாட்டு ஆணையர் ஒவ்வொருவராலும், வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் தகவல் அடங்கியதாகவும் உள்ள அடையாள அட்டை ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

அடையாள அட்டை.

47. மைய அல்லது மாநிலச் சட்டம் எதன்படியும் அதிகாரம் எதுவும் சுமத்தப்பட்டிருக்கிற அல்லது அலுவற்பணி எதனையும் ஆற்றுமாறு கோரப்பட்டிருக்கிற அதிகாரஅமைப்பு எதுவும், இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, அந்தச் சட்டத்தின்படி சிறப்புப் பொருளாதார மண்டலம் எதிலும், அந்த அதிகாரங்களைச் செலுத்தலாம் அல்லது அலுவற்பணிகளை ஆற்றலாம்.

நிருவாகத்திற்குப் பொறுப்புடைய அதிகார அமைப்புகள்

48. இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், மைய அரசுக்கு அல்லது வாரியத்தின் அல்லது ஒப்பேற்புக் குழுவின் அல்லது அதிகாரஅமைப்பின் தலைமையர், உறுப்பினர், அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் அல்லது மேம்பாட்டு ஆணையருக்கு எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

49. Power to modify provisions of this Act or other enactments in relation to Special Economic Zones.—(1) The Central Government may, by notification, direct that any of the provision of this Act (other than sections 54 to 56) or any other Central Act or any rules or regulations made thereunder or any notification or order issued or direction given thereunder (other than the provisions relating to making of the rules or regulations) specified in the notification—

(a) shall not apply to a Special Economic Zone or a class of Special Economic Zones or all Special Economic Zones; or

(b) shall apply to a Special Economic Zone or a class of Special Economic Zones or all Special Economic Zones only with such exceptions, modification and adaptation, as may be specified in the notification:

Provided that nothing contained in this section shall apply to any modifications of any Central Act or any rule or regulation made thereunder or any notification or order issued or direction given or scheme made thereunder so far as such modification, rule, regulation, notification, order or direction or scheme relates to the matters relating to trade unions, industrial and labour disputes, welfare of labour including conditions of work, provident funds, employers' liability, workmen's compensation, invalidity and old age pensions and maternity benefits applicable in any Special Economic Zones.

49. (1) மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் இந்தச் சட்டத்தின் **(54** முதல் **56** வரையிலான பிரிவுகள் அல்லாத பிற**)** வகையங்களில் எதுவும் அல்லது பிற மையச் சட்டம் எதுவும் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்கமைவிதிகள் எவையும் அல்லது **(**விதிகளை அல்லது ஒழுங்கமைவிதிகளை வகுப்பது தொடர்பான வகையங்கள் அல்லாத பிற**)** அதன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை எதுவும்**—**

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடர்பாக, இந்தச் சட்டத்தின் அல்லது பிற செய்சட்டங்களின் வகையங்களை மாற்றமைவு செய்வதற்கு அதிகாரம்**.**

(அ**)** சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றிற்கு அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வகைக்கு அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அனைத்திற்கும் பொருந்தாது; அல்லது

(ஆ**)** அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் விதிவிலக்குகள், மாற்றமைவு, தழுவமைவு ஆகியவற்றுடன், சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றிற்கு அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வகைக்கு அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அனைத்திற்கும் பொருந்தும்,

என்று பணிக்கலாம்:

வரம்புரையாக: இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும், மையச் சட்டம் எதனின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஒழுங்கமைவிதி எதனின் அல்லது அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை எதனின் அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை அல்லது வகுக்கப்பட்ட சட்டம் எதனின், மாற்றமைவுகள் எவற்றிற்கும் அத்தகைய மாற்றமைவு, விதி, ஒழுங்கமைவிதி, அறிவிக்கை, ஆணை அல்லது பணிப்புரை அல்லது திட்டம் ஆகியவை, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எவற்றிலும் பொருந்தத்தக்க பணிவரைக்கட்டுகள், வருங்கால வைப்பு நிதியங்கள், வேலைதருநர்களின் கடப்பாடு, தொழிலாளர்கள் சரியீடு, இயலாதோர் மற்றும் முதிர்வயதினர் ஓய்வூதியங்கள், மற்றும் பேறுகால நலப்பயன்கள் உள்ளடங்கலாக, தொழிற்சங்கங்கள், தொழில்துறை மற்றும் தொழிலாளர் பூசல்கள், தொழிலாளர் நல்வாழ்வு தொடர்பான பொருட்பாடுகளுக்கு எந்த அளவுக்குத் தொடர்புடையதாக இருக்கின்றனவோ அந்த அளவுக்குப் பொருந்தாது**.**

(2) A copy of every notification proposed to be issued under sub-section (1), shall be laid in draft before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in disapproving the issue of the notification or both Houses agree in making any modification in the notification, the notification shall not be issued or, as the case may be, shall be issued only in such modified form as may be agreed upon by both the Houses.

50. Power of State Government to grant exemption.—The State Government may, for the purposes of giving effect to the provisions of this Act, notify policies for Developers and Units and take suitable steps for enactment of any law—

(a) granting exemption from the State taxes, levies and duties to the Developer or the entrepreneur;

(b) delegating the powers conferred upon any person or authority under any State Act to the Development Commissioner in relation to the Developer or the entrepreneur.

51. Act to have overriding effect.—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force or in any instrument having effect by virtue of any law other than this Act.

52. Certain provisions not to apply.—(1) The provisions contained in the Chapter XA of the Customs Act, 1962 and the 52 / 1962.
Special Economic Zones Rules, 2003 and the Special Economic Zones (Customs Procedure) Regulations, 2003 made thereunder shall not, with effect from such date as the Central Government by notification appoint, apply to the Special Economic Zones.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படக் கருதப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றின் படி ஒன்று, நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்கள் கொண்ட ஒரு காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன்முன்பு வரைவாக வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடர்களை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படுவதை ஏற்க மறுப்பதில் இரு அவைகளும் உடன்படுமாயின் அல்லது அந்த அறிவிக்கையில் மாற்றமைவு எதனையும் செய்வதில் இரு அவைகளும் உடன்படுமாயின், அந்த அறிவிக்கையானது பிறப்பிக்கப்படுதல் ஆகாது அல்லது நேர்வுக்கேற்ப, இரு அவைகளும் உடன்படலாகிறவாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே பிறப்பிக்கப்படுதல் வேண்டும்.

விலக்களிப்பு வழங்குவதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம்.

50. மாநில அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறமளிக்கும் நோக்கத்திற்காக, மேம்பாட்டாளர்களுக்காகவும் அலகுகளுக்காகவும் கொள்கைகளை அறிவிக்கை செய்யலாம், மேலும், —

(அ) மேம்பாட்டாளருக்கு அல்லது தொழில் முனைவோருக்கு, மாநில வரிகள், வரிவிதிப்புகள், தீர்வைகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிப்பு வழங்குகிற;

(ஆ) மேம்பாட்டாளர் அல்லது தொழில் முனைவோர் தொடர்பாக, மாநில சட்டம் எதன்படியும் நபர் எவருக்கும் அல்லது அதிகாரஅமைப்பு எதற்கும் வழங்கப்பட்ட அதிகாரங்களை மேம்பாட்டு ஆணையரிடம் ஒப்படைவு செய்கிற,

சட்டம் எதனையும் இயற்றுவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

சட்டம் மீதூர்ந்து இயங்கும் விளைவுடையதாதல்.

51. இந்தச் சட்டத்தின் வகையங்கள், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது இந்தச் சட்டம் அல்லாத பிற சட்டம் எதனின் பயன்திறனால் செல்திறம் கொண்டிருக்கிற முறையாவணம் எதிலும் முரணாக என்ன அடங்கியுள்ள போதிலும், செல்திறமுடையதாகும்.

குறித்தசில வகையங்கள் பொருந்துதல் ஆகாது.

52/1962.

52. (1) 1962 ஆம் ஆண்டு சுங்கங்கள் சட்டத்தின் X–A அத்தியாயத்தின், மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட 2003 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் விதிகளின் மற்றும் 2003 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (சுங்க நடைமுறை) ஒழுங்கமைவிதிகளின் வகையங்கள், மைய அரசு அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் தேதியன்று செல்திறம் பெறுமாறு, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்குப் பொருந்தாது.

(2) Notwithstanding anything contained in sub-section (1), all offences committed, before the commencement of this Act, under any provisions of the Customs Act, 1962 and the Special Economic Zones Rules, 2003 and the Special Economic Zones (Customs Procedure) Regulations, 2003 made thereunder, shall continue to be governed by the said Act or rules, as the case may be. 52 /1962.

(3) Anything done or any action taken or purported to have been done or taken including any rule, notification, inspection, order or notice made or issued or any permission or authorisation or exemption granted or any document or instrument executed under the said provisions of the Act, rules and regulations referred to in sub-section (1) shall, in so far as they are not inconsistent with the provisions of this Act, be deemed to have been done or taken or made or issued or granted under the corresponding provisions of the Act or rules or regulations referred to in that sub-section.

Special Economic Zones to be ports, airports, inland container depots, land stations, etc., in certain cases.

53. A Special Economic Zone shall, on and from the appointed day, be deemed to be a territory outside the customs territory of India for the purposes of undertaking the authorised operations.

(2) A Special Economic Zone shall, with effect from such date as the Central Government may notify, be deemed to be a port, airport, inland container depot, land station and land customs stations, as the case may be, under section 7 of the Customs Act, 1962 : 52 /1962.

Provided that for the purposes of this section, the Central Government may notify different dates for different Special Economic Zones.

(2). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 1962 ஆம் ஆண்டு சுங்கங்கள் சட்டத்தின்,
52/1962. மற்றும் அதன்படி செய்யப்பட்ட 2003 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் விதிகளின் மற்றும் 2003 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (சுங்க நடைமுறை) ஒழுங்கமை விதிகளின் வகையங்கள் எவற்றின்படியும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு செய்யப்பட்ட குற்றச்செயல்கள் அனைத்தும், மேற்சொன்ன சட்டத்தினால் அல்லது, நேர்விற்கேற்ப, விதிகளால் தொடர்ந்து ஆளப்படுதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட சட்டத்தின் விதிகளின் மற்றும் ஒழுங்கமைவிதிகளின் மேற்சொன்ன வகையங்களின்படி வகுக்கப்பட்ட விதி, பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை, செய்யப்பட்ட ஆய்வு, பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது அறிவிப்பு எதுவும் அல்லது வழங்கப்பட்ட அனுமதி அல்லது அதிகாரமளிப்பு அல்லது விலக்களிப்பு எதுவும் அல்லது எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் அல்லது முறையாவணம் எதுவும் உள்ளடங்கலாக, செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகப் புலப்படுகிற செயல் அல்லது நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் அவை முரணாக இல்லாத அளவிற்கு, அந்த உட்பிரிவில் சுட்டப்பட்ட சட்டத்தின் அல்லது விதிகளின் அல்லது ஒழுங்கமைவிதிகளின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக அல்லது வகுக்கப்பட்டிருப்பதாக அல்லது பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அல்லது வழங்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

குறித்தசில நேர்வுகளில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் துறைமுகங்களாக, வானூர்தி நிலையங்களாக, உள்நாட்டு கலன்கிடங்குகளாக, நிலத்து நிலையங்களாக இருத்தல்.

53. (1) ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலமானது, குறித்திடப்பட்ட நாளன்றும் அது முதற்கொண்டும், அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கங்களுக்காக, இந்திய சுங்க ஆட்சிநிலவரைக்கு வெளியேயுள்ள ஆட்சிநிலவரையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலமானது, மைய அரசு அறிவிக்கை செய்யலாகும் தேதியிலிருந்து செல்திறம்
52/1962. பெறுமாறு, 1962 ஆம் ஆண்டு சுங்கங்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி, நேர்விற்கேற்ப, துறைமுகமாக, வானூர்தி நிலையமாக, உள்நாட்டு கலன்கிடங்காக, நிலத்து நிலையமாக, நிலச் சுங்க நிலையங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, மைய அரசு, வெவ்வேறுபட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக வெவ்வேறுபட்ட தேதிகளை அறிவிக்கை செய்யலாம்.

Amendment to First Schedule.

54 (1) The Central Government may, having regard to the objects of this Act, and if it considers necessary or expedient so to do, by notification add to, or as the case maybe, omit from the First Schedule any enactment specified therein.

(2) A copy of every notification proposed to be issued under sub-section (1), shall be laid in draft before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which maybe comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in disapproving the issue of the notification or both Houses agree in making any modification in the notification, the notification shall not be issued or, as the case may be, shall be issued only in suchmodified form as may be agreed upon by both the Houses.

Power to make rules.

(1) The Central Government may, by notification, make rules for carrying out the provisions of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) the infrastructure facilities necessary for the development of the Special Economic Zones under clause (p) and services in the Special Economic Zones under clause (z) of section 2;

(b) the period within which the person concerned shall obtain the concurrence of the State Government under sub-section (3) of section 3:

(c) the form and the manner in which a proposal may be made and the particulars to be contained therein under sub-section (5) of section 3;

(d) the period within which the State Government may forward the proposal together with its recommendation under sub-section (6) of section 3;

முதலாம் இணைப்புப்–பட்டியலுக்கானத் திருத்தம்.

54. (1) மைய அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களைக் கருத்திற்கொண்டும், அவ்வாறு செய்வது தேவையென அல்லது உகந்ததெனக் கருதினாலும், அறிவிக்கை வாயிலாக, அதில் குறித்துரைக்கப்பட்ட செய்சட்டம் எதனையும் முதலாம் இணைப்புப்பட்டியலில் சேர்க்கலாம் அல்லது நேர்விற்கேற்ப, விட்டுவிடலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கக் கருதப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றின் படி ஒன்று, வரைவாக, நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ, மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு காலஅளவுக்கு அமர்விலிருக்கையில் அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும். மேலும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களைத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த அறிவிக்கை பிறப்பிப்பதை ஏற்க மறுப்பதில் இரு அவைகளும் உடன்படுமாயின் அல்லது அத்தகைய அறிவிக்கையில் மாற்றமைவு எதனையும் செய்வதில் இரு அவைகளும் உடன்படுமாயின், அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படுதல் ஆகாது அல்லது, நேர்விற்கேற்ப, இரு அவைகளும் உடன்படலாகிறவாறு மாற்றம் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே பிறப்பிக்கப்படுதல் வேண்டும்.

விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

55. (1) மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், முன்சொன்ன அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அந்த விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன :–

(அ) 2 ஆம் பிரிவின் (ஞ) கூறின்படி சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் மேம்பாட்டிற்குத் தேவையாகிற உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் (வ) கூறின்படி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சேவைகள்;

(ஆ) தொடர்புடைய நபர், எந்தக் காலஅளவிற்குள் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மாநில அரசின் இசைவினைப் பெறுதல் வேண்டும் என்பது;

(இ) 3 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்படி செயற்குறிப்பு செய்யப்படலாகும் படிவம் மற்றும் முறை மற்றும் அதில் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள்;

(ஈ) மாநில அரசு, எந்தக் காலஅளவிற்குள் 3 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படி அதன் பரிந்துரைகளுடன் சேர்த்து செயற்குறிப்பைப் பணிந்தனுப்ப வேண்டும் என்பது;

(e) the requirements subject to which the Board may approve, modify or reject the proposal under sub-section (8) of section 3;

(f) the period within which the grant of letter of approval shall be communicated to the State Government or Developer or entrepreneur under sub-section (10) of section 3;

(g) the other requirements for notifying the specifically identified area in a State as a Special Economic Zone under sub-section (1) of section 4;

(h) the terms, conditions and limitations subject to which the goods or services exported out of, or imported into, or procured from the Domestic Tariff Area to, a Special Economic Zone, be exempt from payment of taxes, duties, or cess under section 7;

(i) the procedure for transfer of letter of approval in case of suspension of letter of approval of a Developer under clause (a) of sub-section (9) of section 10;

(j) the form and the manner in which a proposal may be submitted and the particulars to be contained therein under sub-section (1) of section 15;

(k) the time within which a person aggrieved by the order of the Approval Committee may prefer an appeal under sub-section (4) of section 15;

(l) the form in which the appeal shall be made and the fees for making such appeal under sub-section (6) of section 15;

(உ) வாரியம், எந்த வேண்டுறுத்தங்களுக்கு உட்பட்டு, 3 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்படி செயற்குறிப்பிற்கு ஒப்பேற்பு அளிக்கலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது அதனை ஏற்க மறுக்கலாம் என்பது;

(ஊ) ஒப்பேற்புக் கடிதத்தை வழங்குவதானது, எந்தக் காலஅளவிற்குள் 3 ஆம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவின்படி மாநில அரசுக்கு அல்லது மேம்பாட்டாளருக்கு அல்லது தொழில் முனைவோருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும் என்பது;

(எ) 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி ஒரு மாநிலத்தில் குறிப்பாக இனங்கண்ட பரப்பிடத்தைச் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கை செய்வதற்கான பிற வேண்டுறுத்தங்கள்;

(ஏ) உள்நாட்டு சுங்கவரிப் பரப்பிடத்திலிருந்து சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள் அல்லது பெறப்பட்ட சேவைகள், எந்த வரையுரைகள், வரைக்கட்டுகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டு, 7 ஆம் பிரிவின்படி வரிகள், தீர்வைகள் அல்லது மேல்வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமோ அந்த வரையுரைகள், வரைக்கட்டுகள் மற்றும் வரம்புகள்;

(ஐ) 10 ஆம் பிரிவின் (9) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படி மேம்பாட்டாளரின் ஒப்பேற்புக் கடிதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் நேர்வில், ஒப்பேற்புக் கடிதத்தை மாற்றல் செய்வதற்கான நடைமுறை;

(ஒ) 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி செயற்குறிப்புப் பணிந்தனுப்பப்படலாகும் படிவம் மற்றும் முறை மற்றும் அதில் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள்;

(ஓ) ஒப்பேற்புக் குழுவின் ஆணையினால் குறையுற்ற நபர் ஒருவர், 15 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி எந்தக் காலத்திற்குள் மேல்முறையீடொன்றை முன்னிடலாம் என்பது;

(ஔ) 15 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீடு முன்னிடப்பட வேண்டிய படிவம் மற்றும் அந்த மேல்முறையீட்டை முன்னிடுவதற்கானக் கட்டணங்கள்;

(m) the procedure for disposing of an appeal under sub-section (7) of section 15;

(n) the requirements (including the period for which a Unit may be set up) subject to which the proposal may be approved, modified or rejected under clause (a) of sub-section (8) of section 15;

(o) the terms and conditions for the Unit subject to which it shall undertake authorised operations under clause (b) of sub-section (8) of section 15 and the obligations and entitlements of the Unit;

(p) the time within which a person aggrieved by the order of the Approval Committee may prefer an appeal under sub-section (4) of section 16;

(q) the form in which the appeal shall be made and the fees for making such appeal under sub-section (6) of section 16;

(r) the procedure for disposing of an appeal under sub-section (7) of section 16;

(s) the form and the manner in which an application may be made for setting up of an Offshore Banking Unit in a Special Economic Zone under sub-section (1) of section 17;

(t) the requirements for setting up and operation of an International Financial Services Centre in a Special Economic Zone under sub-section (1) of section 18;

(க) 15 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீடொன்றைத் தீர்மானிப்பதற்கான நடைமுறை;

(ங) (எந்தக் காலஅளவிற்கு அலகு ஏற்படுத்தப்படலாம் என்பது உள்ளடங்கலான) எந்த வேண்டுறுத்தங்களுக்கு உட்பட்டு 15 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படி செயற்குறிப்பிற்கு ஒப்பேற்பு அளிக்கப்படலாம், அது மாற்றமைவு செய்யப்படலாம் அல்லது ஏற்க மறுக்கப்படலாம் என்பது;

(ச) 15 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறின்படி, எந்த வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, அலகானது, அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டுமோ அந்த வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் மற்றும் அந்த அலகின் கடமைப்பாடுகள் மற்றும் உரிமைப்பாடுகள்;

(ஞ) ஒப்பேற்புக் குழுவின் ஆணையினால் குறையுற்ற நபர் ஒருவர், 16 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி எந்தக் காலத்திற்குள், மேல்முறையீடொன்றை முன்னிடலாம் என்பது;

(ட) 16 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீட்டை முன்னிடுவதற்கான படிவம் மற்றும் அத்தகைய மேல்முறையீட்டை முன்னிடுவதற்கானக் கட்டணங்கள்;

(ண) 16 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீடொன்றைத் தீர்மானிப்பதற்கான நடைமுறை;

(த) 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குள் கடல்இடஅமைவு வங்கியியல் அலகினை ஏற்படுத்துவதற்காக எந்தப் படிவத்திலும், முறையிலும் விண்ணப்பம் செய்யப்படலாம் என்பது;

(ந) 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் பன்னாட்டு நிதிச் சேவை மையங்களை ஏற்படுத்திச் செயற்படுத்துவதற்கான வேண்டுறுத்தங்கள்;

(u) the requirements and terms and conditions subject to which a Unit in the International Financial Services Centre may be set up and operated in a Special Economic Zone under sub-section (2) of section 18;

(v) the form of single application for obtaining any licence, permission or registration or approval under clause (a) of section 19;

(w) the form of single return or information to be furnished by an entrepreneur or Developer under clause (c) of section 19;

(x) the manner in which and the terms and conditions subject to which the exemptions, concessions, draw back or other benefits shall be granted to every Developer and entrepreneur under sub-section (2) of section 26;

(y) the period during which any goods brought into, or services provided in, any Special Economic Zone shall remain or continue to be provided in such Unit or Special Economic Zone under section 28;

(z) the terms and conditions subject to which transfer of ownership in any goods brought into, or produced or manufactured in, any Unit or Special Economic Zone, or removal thereof from such Unit or Zone, shall be allowed under section 29;

(ப) 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி எந்த வேண்டுறுத்தங்கள், மற்றும் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, பன்னாட்டு நிதியியல் சேவை மையத்தின் ஓர் அலகு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஏற்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படலாம் என்பது;

(ம) 19 ஆம் பிரிவின் (அ) கூறின்படி உரிமம், அனுமதி அல்லது பதிவு அல்லது ஒப்பேற்புப் பெறுவதற்கான ஒரு தனி விண்ணப்பத்தின் படிவம்;

(ய) 19 ஆம் பிரிவின் (இ) கூறின்படி தொழில் முனைவோர் அல்லது மேம்பாட்டாளரால் அளிக்கப்பட வேண்டிய ஒரு தனி விவரஅறிக்கை அல்லது தகவலின் படிவம்;

(ர) 26 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி மேம்பாட்டாளர் மற்றும் தொழில் முனைவோர் ஒவ்வொருவருக்கும், எந்த முறையில் மற்றும் எந்த வரையுரைகளுக்கும், வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு விதிவிலக்குகள், சலுகைகள், தொகைக்கழிவு அல்லது பிற நலப்பயன்கள் அளிக்கப்படலாம் என்பது;

(ல) சிறப்புப் பொருளாதார மண்டலம் எதற்குள்ளும் கொண்டு வரப்பட்ட சரக்குகள் எவையும் அல்லது அளிக்கப்பட்ட சேவைகள், எந்தக் காலஅளவின் போது, 28 ஆம் பிரிவின்படி அத்தகைய அலகில் அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இருத்தல் வேண்டும் அல்லது தொடர்ந்து அளிக்கப்படுதல் வேண்டும் என்பது;

(வ) அலகு எதற்குள்ளும் அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலம் எதற்குள்ளும் கொண்டு வரப்பட்ட அல்லது அங்கு தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் எவற்றின் உடைமையுரிமையை மாற்றுவது அல்லது அத்தகைய அலகிலிருந்து அல்லது மண்டலத்திலிருந்து அவற்றை அகற்றுவது, 29 ஆம் பிரிவின்படி எந்த வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு அனுமதிக்கப்படலாம் என்பது;

(za) the conditions subject to which the Units shall be entitled to sell the goods manufactured in a Special Economic Zone to the Domestic Tariff Area under section 30;

(zb) the term of office of the Members, other than *ex officio* Members, of every Authority and the manner of filling of vacancies under sub-section (6) of section 31;

(zc) the manner in which and the conditions subject to which and the purposes for which any person may be associated under sub-section (7) of section 31;

(zd) the times and the places of meetings and the procedure to be followed in the transaction of business at the meetings under sub-section (10) of section 31;

(ze) the powers and the functions of every Development Commissioner under sub-section (1) of section 32;

(zf) the method of appointment of officers and other employees of every Authority, conditions of their service and the scale of pay and allowances under sub-section (3) of section 32;

(zg) the other functions to be performed by the Authority under clause (e) of sub-section (2) of section 34;

(zh) the form in which the accounts and other relevant records of every Authority shall be maintained and annual statement of accounts shall be prepared under sub-section (1) of section 37;

(வஅ) 30 ஆம் பிரிவின்படி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உற்பத்திப் செய்யப்பட்ட சரக்குகளை உள்நாட்டு சுங்கவரி பரப்பிடத்தில் விற்பதற்கு அலகுகள், எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு உரிமையுடையதாகுமோ அந்த வரைக்கட்டுகள்;

(வஆ) 31 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படி அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றின் பதவிவழி உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர்களின் பதவிக்காலம், மற்றும் காலியிடங்களை நிரப்பும் முறை;

(வஇ) 31 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்படி எந்த முறையில், எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு எந்த நோக்கங்களுக்காக நபர் எவரும் இணைத்துக் கொள்ளப்படலாம் என்பது;

(வஈ) 31 ஆம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவின்படி கூட்டங்களுக்கான நேரங்கள் மற்றும் இடங்கள் மற்றும் கூட்டங்களில் அலுவல் நடவடிக்கைக்காகப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை;

(வஉ) 32 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி மேம்பாட்டு ஆணையர் ஒவ்வொருவரின் அதிகாரங்களும் அலுவற்பணிகளும்;

(வஊ) 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் அலுவலர்களையும் பிற பணியாளர்களையும் அமர்த்தும் முறை, அவர்களுடைய பணிவரைக்கட்டுகள் மற்றும் வரையூதியங்களின் ஏற்றமுறை மற்றும் படித்தொகை;

(வஎ) 34 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி, (உ) கூறின்படி அதிகாரஅமைப்பால் புரியப்பட வேண்டிய பிற செயற்பணிகள்;

(வஏ) 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றின் கணக்குகளும், தொடர்புடைய பிற பதிவணங்களும் எந்தப் படிவத்தில் வைத்து வரப்பட வேண்டுமோ மற்றும் கணக்குகளின் ஆண்டு விவரஉரை தயாரிக்கப்பட வேண்டுமோ அந்தப் படிவம்;

(zi) the form and the manner in which and the time at which every Authority shall furnish returns and statements and other particulars to the Central Government under sub-section (1) of section 39;

(zj) the form in which and the date before which every Authority shall furnish to the Central Government the report of its activities, policy and programmes under sub-section (2) of section 39;

(zk) the form in which and the particulars to be contained in the identity cards under section 46;

(zl) any other matter which, is to be, or may be, prescribed.

(3) Every rule made by the Central Government under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

Power to remove difficulties.

56. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order published in the Official Gazette, make such provisions not inconsistent with the provisions of this Act, as may appear to it to be necessary or expedient for removing the difficulty:

(வஜ) **39** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி, அதிகாரஅமைப்பு, ஒவ்வொன்றும், மைய அரசுக்கு எந்தப் படிவத்தில் மற்றும் முறையில் மற்றும் காலஅளவிற்குள், விவரஅறிக்கைகளையும், விவரஉரைகளையும், பிற விவரங்களையும் அளித்தல் வேண்டுமோ அந்தப் படிவம், முறை மற்றும் காலஅளவு;

(வஓ) **39** ஆம் பிரிவின் **(2)** ஆம் உட்பிரிவின்படி, அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், தன்னுடைய செயற்பாடுகள், கொள்கை, திட்டங்கள் குறித்து, எந்தப் படிவத்தில் மற்றும் எந்தத் தேதிக்கு முன்பாக விவரஅறிக்கை அளிக்க வேண்டுமோ அந்தப் படிவம் மற்றும் தேதி;

(வஓ) **46** ஆம் பிரிவின்படி அடையாள அட்டைகளுக்கானப் படிவம் மற்றும் அவற்றில் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள்;

(வஔ) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிறபொருட்பாடு எதுவும்.

(3) இந்தச் சட்டத்தின்படி மைய அரசால் வகுக்கப்படும் ஒவ்வொரு விதியும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத் தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ, முப்பது நாட்களைக் கொண்ட ஒரு மொத்த காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில் அதன்முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரினையோ அல்லது அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களையோ உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் பெறுதல் வேண்டும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் பெறாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

56. **(1)** இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் அளிப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணை வாயிலாக, இடர்ப்பாடுகளை அகற்றுவதற்காகத் தனக்குத் தேவையென அல்லது உகந்ததெனத் தோன்றலாகிறதும், இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இல்லாததுமான, வகையங்களைச் செய்யலாம்:

Provided that no such order shall be made under this section after the expiration of two years from the date of commencement of this Act.

(2) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.

Amendment of certain enactments.

57. With effect from such date as the Central Government may, by notification, appoint, the enactments specified in the Third Schedule shall be amended in the manner specified therein:

Provided that different dates may be appointed on which the amendments specified in the Third Schedule shall apply to a particular Special Economic Zone or a class of Special Economic Zones or all Special Economic Zones.

Savings.

58. All rules made or purporting to have been made or all notifications issued orpurporting to have been issued under any Central Act relating to the Special Economic Zones shall, in so far as they relate to matters for which provision is made in this Act or rules made or notification issuedthereunder and are not inconsistent therewith, be deemed to have been made or issued under this Act as ifthis Act had been in force on the date on which such rules were made or notifications were issued and shall continue to be in force unless and until they are superseded by any rules made or notifications issued under this Act.

வரம்புரையாக: இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுற்ற பின்பு, இந்த உட்பிரிவின்படி அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

57. மைய அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியிலிருந்து செல்திறம் பெறுமாறு, மூன்றாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட செய்சட்டங்கள், அதில் குறித்துரைக்கப்பட்ட முறையில் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்: குறித்தசில செய்சட்டங்களின் திருத்தம்.

வரம்புரையாக: மூன்றாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட திருத்தங்கள், குறிப்பிட்டதொரு சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வகைக்கு அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அனைத்திற்கும் பொருந்த வேண்டிய வெவ்வேறுபட்ட தேதிகள் குறித்திடப்படலாம்.

58. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடர்பாக மையச் சட்டம் எதனாலும் வகுக்கப்பட்ட அல்லது வகுக்கப்பட்டதாகத் தோன்றுகிற விதிகள் அனைத்தும் அல்லது பிறப்பிக்கப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்டதாகப் புலப்படுகிற அறிவிக்கைகள் அனைத்தும், எந்தப் பொருட்பாடுகளுக்காக இந்தச் சட்டத்தில் அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதிகளில் அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகளில் அந்தப் பொருட்பாடுகளுக்குத் தொடர்புடையதாகவும், அவற்றிற்கு முரணாகவும் இல்லாதிருக்கிற அளவுக்கு, அந்த விதிகள் வகுக்கப்பட்ட அல்லது அறிவிக்கைகள் பிறப்பிக்கப்பட்ட தேதியன்று, இந்தச் சட்டம் செல்லாற்றலில் இருந்தாற்போன்று, வகுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகள் எவற்றாலும் அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் எவற்றாலும் அவை தள்ளறவு செய்யப்பட்டாலன்றியும் செய்யப்படும் வரையிலும், தொடர்ந்து செல்லாற்றலில் இருக்கும். காப்புரைகள்.

THE FIRST SCHEDULE

(See sections 7 and 54)

ENACTMENTS

1. The Agricultural Produce Cess Act, 1940 (27 of 1940).

2. The Coffee Act, 1942 (7 of 1942).

3. The Mica Mines Labour Welfare Fund Act, 1946 (22 of 1946).

4. The Rubber Act, 1947 (24 of 1947).

5. The Tea Act, 1953 (29 of 1953).

6. The Salt Cess Act, 1953 (49 of 1953).

7. The Medicinal and Toilet Preparations (Excise Duties) Act, 1955 (16 of 1955).

8. The Additional Duties of Excise (Goods of Special Importance) Act, 1957 (58 of 1957).

9. The Sugar (Regulation of Production) Act, 1961 (55 of 1961).

10. The Textiles Committee Act, 1963 (41 of 1963).

11. The Produce Cess Act, 1966 (15 of 1966)

12. The Marine Products Export Development Authority Act, 1972 (13 of 1972).

13. The Coal Mines (Conservation and Development) Act, 1974 (28 of 1974).

14. The Oil Industry (Development) Act, 1974 (47 of 1974).

15. The Tobacco Cess Act, 1975 (26 of 1975).

முதலாம் இணைப்புப்பட்டியல்

(7 மற்றும் 54 ஆம் பிரிவுகளைப் பார்க்க)

செய்சட்டங்கள்

1. 1940 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் மேல்வரிச் சட்டம் (27/1940).
2. 1942 ஆம் ஆண்டு காபிச் சட்டம் (7/1942).
3. 1946 ஆம் ஆண்டு மைக்கா சுரங்கத் தொழிலாளர் நல்வாழ்வு நிதியச் சட்டம் (22/1946).
4. 1947 ஆம் ஆண்டு இரப்பர் சட்டம் (24/1947).
5. 1953 ஆம் ஆண்டு தேயிலைச் சட்டம் (29/1953).
6. 1953 ஆம் ஆண்டு உப்பு மேல்வரிச் சட்டம் (49/1953).
7. 1955 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள் தயாரிப்புகள் (ஆயத் தீர்வைகள்) சட்டம் (16/1955).
8. 1957 ஆம் ஆண்டு கூடுதல் ஆயத் தீர்வைகள் (சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகள்) சட்டம் (58/1957).
9. 1961 ஆம் ஆண்டு சர்க்கரை (தயாரிப்பை முறைப்படுத்துதல்) சட்டம் (55/1961).
10. 1963 ஆம் ஆண்டு நெசவுக் குழுச் சட்டம் (41/1963).
11. 1966 ஆம் ஆண்டு உற்பத்தி மேல்வரிச் சட்டம் (15/1966).
12. 1972 ஆம் ஆண்டு கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு வாரியச் சட்டம் (13/1972).
13. 1974 ஆம் ஆண்டு நிலக்கரிச் சுரங்கங்கள் (பாதுகாப்பு மற்றும் மேம்பாடு) சட்டம் (28/1974).
14. 1974 ஆம் ஆண்டு எண்ணெய் தொழில் நிறுவனங்கள் (மேம்படுத்துதல்) சட்டம் (47/1974).
15. 1975 ஆம் ஆண்டு புகையிலை மேல்வரிச் சட்டம் (26/1975).

16. The Additional Duties of Excise (Textile and Textile Articles) Act, 1978 (40 of 1978).

17. The Sugar Cess Act, 1982 (3 of 1982).

18. The Jute Manufactures Cess Act, 1983 (28 of 1983).

19. The Agricultural and Processed Food Products Export Cess Act, 1985 (3 of 1986).

20. The Spices Cess Act, 1986 (11 of 1986).

21. The Research and Development Cess Act, 1986 (32 of 1986).

16. 1978 ஆம் ஆண்டு கூடுதல் ஆயத் தீர்வைகள் (நெசவங்கள் மற்றும் நெசவுப் பொருட்கள்) சட்டம் (40/1978).

17. 1982 ஆம் ஆண்டு சர்க்கரை மேல்வரிச் சட்டம் (3/1982).

18. 1983 ஆம் ஆண்டு சணல் உற்பத்தியாளர்கள் மேல்வரிச் சட்டம் (28/1983).

19. 1985 ஆம் ஆண்டு வேளாண் மற்றும் பதனஞ் செய்யப்பட்ட உணவுத் தயாரிப்புகள் ஏற்றுமதி மேல்வரிச் சட்டம் (3/1986).

20. 1986 ஆம் ஆண்டு நறுமணப் பொருட்கள் மேல்வரிச் சட்டம் (11/1986).

21. 1986 ஆம் ஆண்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மேல்வரிச் சட்டம் (32/1986).

THE SECOND SCHEDULE

(See section 27)

MODIFICATIONS TO THE INCOME-TAX ACT, 1961

(43 OF 1961)

(a) in section 10,—

(A) in clause (15), after sub-clause (vii), the following clause shall be inserted at the end, namely:—

"(viii) any income by way of interest received by a non-resident or a person who is not ordinarily resident, in India on a deposit made on or after the 1st day of April, 2005 in an Offshore Banking Unit referred to in clause (u) of section 2 of the Special Economic Zones Act, 2005;";

(B) in clause (23G), after the words, brackets, figures and letters "sub-section (4) of section 80-IA",the words brackets, figures and letters "or sub-section (3) of section 80-IAB" shall be inserted;

(C) in clause (34), the following Explanation shall be inserted, namely:—

"*Explanation*.—For the removal of doubts, it is hereby declared that the dividend referred to insection 115 - O shall not be included in the total income of the assessee, being a Developer or entrepreneur.";

(b) in section 10A, after sub-section (7A), the following sub-section shall be inserted, namely:—

இரண்டாம் இணைப்புப்பட்டியல்

(27 ஆம் பிரிவைப் பார்க்க)

1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்திற்கான மாற்றமைவுகள்

(43/1961)

(அ) 10 ஆம் பிரிவில்—

((அ)) **(15)** ஆம் கூறில் (vii) ஆம் உட்கூறுக்குப் பிறகு, இறுதியில் பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும் ;—

"(viii) **2005** ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டத்தின் **(2)** ஆம் பிரிவின் (ப) கூறில் சுட்டப்பட்ட கடல்இடஅமைவு வங்கியியல் அலகு ஒன்றில் **2005**, ஏப்ரல் **1** ஆம் நாளன்றோ அதற்குப் பிறகோ செய்யப்பட்ட வைப்பீட்டின்பேரில், இந்தியாவில் குடியிராத ஒருவரால் அல்லது சாதாரணமாக குடியிராத நபர் ஒருவரால் பெறப்பட்ட வட்டி வாயிலான வருமானம்;

((ஆ)) **(23(எ))** ஆம் கூறில்"**80—(ஐ)(அ)**பிரிவின் **(4)** ஆம் உட்பிரிவின்'' என்ற சொற்களுக்கும், அடைப்புக் குறிகளுக்கும் இலக்கங்களுக்கும் எழுத்துக்களுக்கும் பிறகு "அல்லது **80—(ஐ)(அ)(ஆ)** பிரிவின் **(3)** ஆம் உட்பிரிவின்'' என்ற சொற்களும், அடைப்புக்குறிகளும், இலக்கங்களும், எழுத்துகளும் புகுத்தப்படுதல் வேண்டும்;

((இ)) **(34)** ஆம் கூறில், பின்வரும் விளக்கம் புகுத்தப்படுதல் வேண்டும்: —

"**விளக்கம்.—** ஐயங்களை அகற்றுவதற்காக, **115(ச)**ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள ஆதாயப் பங்கானது, மேம்பாட்டாளராக அல்லது தொழில் முனைவோராக இருக்கிற வரிவிதிப்புக்குரியவரின் மொத்த வருமானத்தில் சேர்க்கப்படுதலாகாது என்று ஈங்கிதனால் விளம்பப்படுகிறது.'';

10 (அ) பிரிவில், (7 (அ)) உட்பிரிவுக்குப் பிறகு, பின்வரும் உட்பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும்:—

"(7B) The provisions of this section shall not apply to any undertaking, being a Unit referred to inclause (zc) of section 2 of the Special Economic Zones Act, 2005, which has begun or begins to manufacture or produce articles or things or computer software during the previous year relevant to the assessment year commencing on or after the 1st day of April, 2006 in any Special Economic Zone.";

(c) after section 10A, the following section shall be inserted, namely:—

'10AA. *Special provisions in respect of newly established Units in Special Economic Zones.*—(1) Subject to the provisions of this section, in computing the total income of an assessee, being an entrepreneur as referred to in clause (j) of section (2) of the Special Economic Zones Act, 2005, from his Unit, who begins to manufacture or produce articles or things or provide any services during the previous year relevant to any assessment year commencing on or after the 1st day of April, 2006, a deduction of —

(i) hundred per cent. of profits and gains derived from the export, of such articles or things orfrom services for a period of five consecutive assessment years beginning with the assessment year relevant to the previous year in which the Unit begins to manufacture or produce such articles or things or provide services, as the case may be, and fifty per cent. of such profits and gains for further five assessment years and thereafter;

''(7 (ஆ)) இந்தப் பிரிவின் வகையங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலம் எதிலும், 2006 ஏப்ரல் 1 ஆம் நாளன்றோ அதற்குப் பின்போ தொடங்குகிற வரிவிதிப்பு ஆண்டிற்குத் தொடர்புடைய முந்திய ஆண்டின்போது, உருப்படிகளை அல்லது பொருட்களை அல்லது கணினி மென்பொருட்களைத் தயாரிக்க அல்லது உற்பத்தி செய்ய தொடங்கியிருக்கிற அல்லது தொடங்குகிற, 2005 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (வஇ) கூறில் சுட்டப்பட்டுள்ள அலகாக இருக்கிற பொறுப்பேற்பு நிறுவனம் எதற்கும் பொருந்துதல் ஆகாது;'

(இ) 10 (அ) பிரிவிற்குப் பிறகு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும்:—

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் புதிதாக நிறுவப்பட்ட அலகுகளைப் பொறுத்த சிறப்பு வகையங்கள்.

''10 (அ)(அ). (1) இந்தப் பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு, 2005 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (ஓ) கூறில் சுட்டப்பட்ட ஒரு தொழில்முனைவோராக இருந்து, 2006, ஏப்ரல் 1 ஆம் நாளன்றோ அதற்குப் பின்போ தொடங்குகிற வரிவிதிப்பு ஆண்டு எதனுடனும் தொடர்புடைய முந்தைய ஆண்டின்போது, உருப்படிகளை அல்லது பொருட்களைத் தயாரிக்க அல்லது உற்பத்தி செய்ய அல்லது சேவைகள் எவற்றையும் அளிக்கத் தொடங்குகிற வரிவிதிப்புக்குரியவரின், அலகிலிருந்தான மொத்த வருமானத்தைக் கணக்கிடுகையில்,

(i) எந்த முந்திய ஆண்டில், அத்தகைய உருப்படிகளை அல்லது பொருட்களைத் தயாரிக்க அல்லது உற்பத்தி செய்ய அல்லது நேர்வுக்கேற்ப, சேவைகளை அளிக்க அந்த அலகு தொடங்குகிறதோ அந்த முந்திய ஆண்டிற்குத் தொடர்புடைய வரிவிதிப்பு ஆண்டுடன் தொடங்குகிற, தொடர்ந்த ஐந்து மற்றும் தேட்டங்களின் நூறு விழுக்காட்டினையும், மேலுமான ஐந்து வரிவிதிப்பு ஆண்டுகளுக்கும் அதற்குப் பிறகும், அத்தகைய ஆதாயங்கள் மற்றும் தேட்டங்களின் ஐம்பது விழுக்காட்டினையும்; வரிவிதிப்பு ஆண்டு காலஅளவிற்கு, அத்தகைய உருப்படிகளை அல்லது பொருட்களை ஏற்றுமதி செய்வதிலிருந்து அல்லது சேவைகளிலிருந்து பெறப்பட்ட ஆதாயங்கள் மற்றும் தேட்டங்களின் நூறு விழுக்காட்டினையும், மேலுமான ஐந்து வரிவிதிப்பு ஆண்டுகளுக்கும் அதற்குப் பிறகும், அத்தகைய ஆதாயங்கள் மற்றும் தேட்டங்களின் ஐம்பது விழுக்காட்டினையும்;

(ii) for the next five consecutive assessment years, so much of the amount not exceeding fifty percent. of the profit as is debited to the profit and loss account of the previous year in respect of which the deduction is to be allowed and credited to a reserve account (to be called the "Special Economic Zone Re-investment Reserve Account") to be created and utilised for the purposes of the business of the assessee in the manner laid down in sub-section (2).

(2) The deduction under clause (ii) of sub-section (1) shall be allowed only if the following conditions are fulfilled, namely:—

(a) the amount credited to the Special Economic Zone Re-investment Reserve Account is to be utilised—

(i) for the purposes of acquiring machinery or plant which is first put to use before the expiry of a period of three years following the previous year in which the reserve was created; and

(ii) until the acquisition of the machinery or plant as aforesaid, for the purposes of the business of the undertaking other than for distribution by way of dividends or profits or for remittance outside India as profits or for the creation of any asset outside India;

(ii) அடுத்த தொடர்ந்த ஐந்து வரிவிதிப்பு ஆண்டுகளுக்கு, (2) ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்டுள்ள முறையில், வரிவிதிப்புக்குரியவரின் வியாபார நோக்கங்களுக்காக, உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும் (சிறப்புப் பொருளாதார மண்டல மறுமுதலீட்டு ஒதுக்கீட்டுக் கணக்கு என்று அழைக்கப்படும்) ஒதுக்கீட்டுக் கணக்கில், எந்த முந்திய ஆண்டைப் பொறுத்த கழிவு அனுமதிக்கப்பட்டு, வரவு வைக்கப்பட வேண்டுமோ அந்த முந்திய ஆண்டின் ஆதாய இழப்புக் கணக்கில் பற்று வைக்கப்பட்ட ஆதாயத்தின் ஐம்பது விழுக்காட்டிற்கு மேற்படாத அந்தத் தொகையினையும்

கழிவு செய்தல்.

(2) பின்வரும் வரைக்கட்டுகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே, (1) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் கூறின்படியான கழிவு அனுமதிக்கப்படுதல் வேண்டும்; அதாவது :–

(அ) சிறப்புப் பொருளாதார மண்டல மறுமுதலீட்டு ஒதுக்கீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படும் தொகையானது,–

(i) எந்த முந்திய ஆண்டின்போது, ஒதுக்கீட்டுக் கணக்கு ஏற்படுத்தப்பட்டதோ அந்த முந்திய ஆண்டைத் தொடர்கிற மூன்று ஆண்டு காலஅளவு முடிவடைவதற்கு முன்பு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட முதலாவதான இயந்திரங்கள் அல்லது இயந்திர சாதனங்களைப் பெறும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்; மற்றும்

(ii) மேற்கூறியவாறு இயந்திரங்களை அல்லது இயந்திர சாதனங்களைப் பெறும் வரை, ஆதாயப்பங்குகள் அல்லது ஆதாயங்கள் என்ற வகையில் பங்கீடு செய்வதற்கானது அல்லாத பிற, பொறுப்பேற்பு நிறுவனத்தின் வியாபார நோக்கங்களுக்காக அல்லது ஆதாயங்களாக இந்தியாவிற்கு வெளியே செலுத்துவதற்காக அல்லது இந்தியாவிற்கு வெளியே சொத்துடைமை எதனையும் ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்;

(b) the particulars, as may be specified by the Central Board of Direct Taxes in this behalf, underclause (b) of sub-section (IB) of section 10A have been furnished by the assessee in respect of machinery or plant along with the return of income for the assessment year relevant to the previousyear in which such plant or machinery was first put to use.

(3) Where any amount credited to the Special Economic Zone Re-investment Reserve Account underclause (ii) of sub-section (1),—

(a) has been utilised for any purpose other than those referred to in sub-section (2), the amount so utilised; or

(b) has not been utilised before the expiry of the period specified in sub-clause (i) of clause (a) of sub-section (2), the amount not so utilised,

shall be deemed to be the profits,—

(i) in a case referred to in clause (a), in the year in which the amount was so utilised; or

(ii) in a case referred to in clause (b), in the year immediately following the period of three yearsspecified in sub-clause (i) of clause (a) of sub-section (2),

and shall be charged to tax accordingly:

(ஆ) இயந்திர சாதனங்கள் அல்லது இயந்திரம் முதன்முதலில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட முந்திய ஆண்டுக்குத் தொடர்புடைய வரிவிதிப்பு ஆண்டின் வருமான விவர உரையுடன் சேர்த்து, அந்த இயந்திர அல்லது இயந்திர சாதனங்களைப் பொறுத்து, 10 (அ) பிரிவின் (1 (ஆ)) உட்பிரிவின் (ஆ) கூறின்படி இதன்பொருட்டு நேரடி வரிகள் மைய வாரியத்தினால் குறித்துரைக்கப்படலாகும் விவரங்கள், வரி விதிப்புக்குரியவரால் அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) சிறப்புப் பொருளாதார மண்டல மறுமுதலீட்டு ஒதுக்கீட்டுக் கணக்கின், (1) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் கூறின்படி வரவு வைக்கப்பட்ட தொகை எதுவும்,—

(அ) (2) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டவை அல்லாத பிற நோக்கம் எதற்காகவும் பயன்படுத்தப்படுகிறவிடத்து, அவ்வாறு பயன்படுத்தப்பட்ட தொகை; அல்லது

(ஆ) (2) ஆம் உட்பிரிவில் (அ) கூறின் (i) ஆம் உட்கூறில் குறித்துரைக்கப்பட்ட கால அளவு முடிவடைவதற்கு முன்பு பயன்படுத்தப்படாதிருக்கிறவிடத்து, அவ்வாறு பயன்படுத்தப்படாத தொகை;

(i) (அ) கூறில் சுட்டப்பட்ட நேர்வில், அந்தத் தொகை அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஆண்டின்; அல்லது

(ii) (ஆ) கூறில் சுட்டப்பட்ட நேர்வில், (2) ஆம் உட்பிரிவின் (அ) கூறின் (i) ஆம் உட்கூறில் குறித்துரைக்கப்பட்ட மூன்றாண்டு காலஅளவை அடுத்துப் பின்வரும் ஆண்டின்

ஆதாயங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க வரி விதிக்கப்படுதல் வேண்டும்:

Provided that where in computing the total income of the Unit for any assessment year, its profits andgains had not been included by application of the provisions of sub-section (7B) of section 10A, the undertaking being the Unit shall be entitled to deduction referred to in this sub-section only for theunexpired period of ten consecutive assessment years and thereafter it shall be eligible for deduction from income as provided in clause (ii) of sub-section (1):

Explanation.—For the removal of doubts, it is hereby declared that an undertaking being the Unit,which had already availed before the commencement of the Special Economic Zone Act, 2005, the deductions referred to in section 10A for ten consecutive assessment years, such Unit shall not be eligible for deduction from income under this section:

Provided further that where a Unit initially located in any free trade zone or export processing zone issubsequently located in a Special Economic Zone by reason of conversion of such free trade zone or export processing zone into a Special Economic Zone, the period of ten consecutive assessment years referred to above shall be reckoned from the assessment year relevant to the previous year in which the Unit began to manufacture, or produce or process such articles or things or services in such free trade zone or export processing zone:

Provided also that where a Unit initially located in any free trade zone or export processing zone is subsequently located in a Special Economic Zone by reason of conversion of such free trade zone or export processing zone into a Special Economic Zone and has completed the period of ten consecutive assessment years referred to above, it shall not be eligible for deduction from income as provided in clause (ii) of sub-section (1) with effect from the 1st day of April, 2006.

வரம்புரையாக:— வரிவிதிப்பு ஆண்டு எதற்காகவும், அலகின் மொத்த வருமானத்தைக் கணக்கிடுகையில், 10 (அ) பிரிவின் (7 (ஆ)) உட்பிரிவின் வகையங்களைப் பொருந்தச் செய்வதன் மூலம் அதன் ஆதாயங்களும் தேட்டங்களும் சேர்க்கப்படாதவிடத்து, அலகாக இருக்கிற பொறுப்பேற்பு நிறுவனமானது, தொடர்ந்த பத்து வரிவிதிப்பு ஆண்டின் முடிவுறாத காலஅளவுக்காக இந்த உட்பிரிவில் சுட்டப்பட்ட கழிவுக்கு உரிமையுடையதாகும்; மற்றும் அதன்பின்பு, அது **(1)** ஆம் உட்பிரிவின் (ii) ஆம் கூறில் வகை செய்யப்பட்டவாறு வருமானத்திலிருந்தான கழிவுக்குத் தகுமை உடையது ஆகும்.

விளக்கம்:— ஐயங்களை அகற்றுவதற்காக, 2005 ஆம் ஆண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு, அலகாக இருக்கிற ஒரு பொறுப்பேற்பு நிறுவனமானது, தொடர்ந்த பத்து வரிவிதிப்பு ஆண்டுகளுக்கு (10) அ பிரிவில் சுட்டப்பட்ட கழிவுகளை ஏற்கெனவே பயன்படுத்தியிருப்பின், அத்தகைய அலகானது, இந்தப் பிரிவின்படியான வருமானத்திலிருந்து கழிவுக்குத் தகுமை உடையது ஆகாது என்று ஈங்கிதனால் விளம்பப்படுகிறது:

மேலும் வரம்புரையாக: தடையில்லா வர்த்தக மண்டலம் எதிலும் அல்லது ஏற்றுமதி வளர்ச்சி மண்டலம் எதிலும், முதன்முதலில் அமைந்துள்ள அலகானது, அத்தகைய தடையில்லா வர்த்தக மண்டலம் அல்லது ஏற்றுமதி வளர்ச்சி மண்டலம், சிறப்புப் பொருளாதார மண்டலமாக மாற்றப்பட்டதன் காரணமாக, சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் பின்னதாக அமைக்கப்படுகிறவிடத்து, மேலே சுட்டப்பட்ட தொடர்ந்த பத்து வரி விதிப்பு ஆண்டு காலஅளவானது, அத்தகைய தடையில்லா வர்த்தக மண்டலத்தில் அல்லது ஏற்றுமதி வளர்ச்சி மண்டலத்தில் அலகானது, எந்த முந்திய ஆண்டில், அத்தகைய உருப்படிகளைத் தயாரிக்க அல்லது பொருட்களை உற்பத்தி செய்ய அல்லது சேவைகளை மேம்படுத்தத் தொடங்கியதோ அந்த முந்திய ஆண்டிற்குத் தொடர்புடைய வரிவிதிப்பு ஆண்டிலிருந்துக் கணக்கிடப்படுதல் வேண்டும்:

இன்னும் வரம்புரையாக:— முதன்முதலில் தடையில்லா வர்த்தக மண்டலம் அல்லது ஏற்றுமதி வளர்ச்சி மண்டலம் எதிலும் அமைந்திருந்த ஓர் அலகானது, பின்பு, அத்தகைய தடையில்லா வர்த்தக மண்டலம் அல்லது ஏற்றுமதி வளர்ச்சி மண்டலம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக மாற்றப்பட்டதன் காரணமாக ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைகிறவிடத்தும், மேலே சுட்டப்பட்ட தொடர்ந்த பத்து வரிவிதிப்பு ஆண்டு காலஅளவை நிறைவு செய்திருக்கிறவிடத்தும், 2006, ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் செல்திறம் பெறுமாறு, அது **(1)** ஆம் உட்பிரிவின் (ii) ஆம் கூறில் வகைசெய்யப்பட்டவாறு வருமானத்திலிருந்தான கழிவுக்குத் தகுமை உடையது ஆகாது.

(4) This section applies to any undertaking being the Unit, which has begun or begins to manufactureor produce articles or things or services during the previous year relevant to the assessment year commencing on or after the 1st day of April, 2006, in any Special Economic Zone.

(5) Where any undertaking being the Unit which is entitled to the deduction under this section istransferred, before the expiry of the period specified in this section, to another undertaking, being the Unit in a scheme of amalgamation or demerger,—

(a) no deduction shall be admissible under this section to the amalgamating or the demerged Unit, being the company for the previous year in which the amalgamation or the demerger takes place; and

(b) the provisions of this section shall, as they would have applied to the amalgamating or thedemerged Unit being the company as if the amalgamation or demerger had not taken place.

(6) Loss referred to in sub-section (1) of section 72 or sub-section (1) or sub-section (3) of section 74, in so far as such loss relates to the business of the undertaking, being the Unit shall be allowed to be carried forward or set off

(7) For the purposes of sub-section (1), the profits derived from the export of articles or things orservices (including computer software) shall be the amount which bears to the profits of the business of the undertaking, being the Unit, the same proportion as the export turnover in respect of such articles orthings or services bears to the total turnover of the business carried on by the assessee.

(8) The provisions of sub-sections (5) and (6) of section 10A shall apply to the articles or things or services referred to in sub-section (1)

(4) சிறப்புப் பொருளாதார மண்டலம் எதிலும், 2006, ஏப்ரல் 1 ஆம் நாளன்றோ அதற்குப் பிறகோ தொடங்குகிற வரிவிதிப்பு ஆண்டுடன் தொடர்புடைய முந்திய ஆண்டின் போது, உருப்படிகளை அல்லது பொருட்களைத் தயாரிக்க அல்லது உற்பத்தி செய்ய அல்லது சேவைகளைத் தொடங்கியிருக்கிற அல்லது தொடங்குகிற, அலகாக இருக்கிற பொறுப்பேற்பு நிறுவனம் எதற்கும் இந்தப் பிரிவு பொருந்தும்;

(5) அலகாக இருக்கும் இந்தப் பிரிவின்படி கழிவுக்கு உரிமையுடைய பொறுப்பேற்பு நிறுவனம் எதுவும், இந்தப் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவு முடிவுறுவதற்கு முன்பு, ஒருங்கிணைத்தல் அல்லது இணைப்பிலிருந்து விலகுதல் திட்டத்தின் ஓர் அலகாக இருக்கிற பிற பொறுப்பேற்பு நிறுவனத்திற்கு மாற்றப்படுகிறவிடத்து,—

(அ) அந்த ஒருங்கிணைத்தல் அல்லது இணைப்பிலிருந்து விலகுதல் எந்த முந்திய ஆண்டுக்காக நிகழ்ந்ததோ அந்த முந்திய ஆண்டிற்கு நிறுமமாக இருக்கிற ஒருங்கிணைப்புப் பெற்ற அல்லது இணைப்பிலிருந்து விலகிய அலகிற்கு இந்தப் பிரிவின்படி கழிவு எதுவும் அனுமதிக்கத்தக்கது ஆகாது; மற்றும்

(ஆ) இந்தப் பிரிவின் வகையங்கள், அந்த ஒருங்கிணைத்தல் அல்லது இணைப்பிலிருந்து விலகுதல் நிகழாதிருந்தால், நிறுமமாக இருக்கிற ஒருங்கிணைப்புப் பெற்ற அல்லது இணைப்பிலிருந்து விலகிய அலகிற்கு அவை பொருந்தக் கூடியவை போன்றே பொருந்தும்.

(6). 72 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அல்லது 74 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (3) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட இழப்பு, அலகாக இருக்கிற பொறுப்பேற்பு நிறுவனத்தின் வியாபாரத்திற்கு அந்த இழப்புத் தொடர்புடையதாக இருக்கிற அளவுக்கு, முன் கொண்டு செல்லப்பட அல்லது எதிரீடு செய்யப்பட அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(7). (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, (கணினி மென்பொருள் உள்ளடங்கலான) உருப்படிகள் அல்லது பொருட்களின் ஏற்றுமதியிலிருந்து அல்லது சேவைகளிலிருந்து பெறப்பட்ட ஆதாயங்கள், அத்தகைய உருப்படிகள் அல்லது பொருட்கள் அல்லது சேவைகளைப் பொறுத்த ஏற்றுமதி விற்பனை அளவு, வரிவிதிப்புக்குரியவரால் நடத்தப்படும் வியாபாரத்தின் மொத்த விற்பனை அளவுக்கு எந்த விகிதத்தில் அமைந்திருக்கிறதோ அதே விகிதத்தில், அலகாக இருக்கிற பொறுப்பேற்பு நிறுவன வியாபார ஆதாயங்களுக்கான தொகையாக அமைந்து இருக்கும்.

(8). 10 (அ) பிரிவின் (5) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளின் வகையங்கள்,—

(a) for the figures, letters and word "1st April, 2001", the figures, letters and word "1st April, 2006" had been substituted;

(b) for the word "undertaking", the words "undertaking, being the Unit" had been substituted.

(9) The provisions of sub-section (8) and sub-section (10) of section 80-IA shall, so far as may be,apply in relation to the undertaking referred to in this section as they apply for the purposes of the undertaking referred to in section 80-IA.

Explanation 1.— For the purposes of this section,—

(i) "export turnover" means the consideration in respect of export by the undertaking, being the Unit of articles or things or services received in, or brought into, India by the assessee but does not include freight, telecommunication charges or insurance attributable to the delivery of the articles or things outside India or expenses, if any, incurred in foreign exchange in rendering of services (including computer software) outside India;

(ii) "export in relation to the Special Economic Zones" means taking goods or providing servicesout of India from a Special Economic Zone by land, sea, air, or by any other mode whether physical or otherwise;

(அ) ‘‘**2001,** ஏப்ரல் **1**’’ என்ற இலக்கங்களுக்கும், எழுத்துகளுக்கும், சொல்லுக்கும் மாற்றாக, ‘‘**2006,** ஏப்ரல் **1**’’ என்ற இலக்கங்களும், எழுத்துகளும், சொல்லும் அமைக்கப்பட்டாற்போன்று;

(ஆ) ‘‘பொறுப்பேற்பு நிறுவனம்’’ என்ற சொல்லுக்கு மாற்றாக, ‘‘அலகாக இருக்கிற பொறுப்பேற்பு நிறுவனம்’’ என்ற சொற்கள் அமைக்கப்பட்டாற்போன்று ;

(1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட உருப்படிகள் அல்லது பொருள்கள்’’ அல்லது சேவைகளுக்குப் பொருந்தும்**.**

